

6

# சூழலியல் உளவியல் கலைவடிவங்கள்

JPL
C11052

சபா.ஜெயராசா

சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலியல் உளவியல் கலை வடிவங்கள்

## ECOLOGY, PSYCHOLOGY AND ART FORMS

11052 CC
KOHA JPL

*சபா.ஜெயராசா*

சேமமடு
சேமமடு பதிப்பகம்
2014

239505
239505 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
1559


## நூற் குறிப்பு

நூற் தலைப்பு : சூழலியல் உளவியல் கலைவடிவங்கள்
நூலாசிரியர் : சபா.ஜெயராசா ©
பதிப்பாளர் : சதபூ.பத்மசீலன்
பதிப்பாண்டு : 1ம் பதிப்பு 2014
எழுத்து : 10.5 புள்ளி
பக்கங்கள் : vi+102
படிகள் : 1000
விலை : ரூ. 340.00
அச்சிடல் : சேமமடு பதிப்பகம், கொழும்பு -11.
தொ.பே: 0777 345 666.
வெளியீடு : சேமமடு பொத்தகசாலை,
யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11.
தொ.பே: 011-2472362, 2331475
மின்னஞ்சல் : *Chemamadu@yahoo.com*

**ISBN - NO : 978 - 955 - 685 - 027 - 7**

Title : **SOOLALIYAL ULAVIYAL KALAI VATIVANKAL**
Author : Saba.Jeyarasa ©
Publisher : STP.Pathmaseelan
Edition : 1St Edition 2014
Price : Rs.340.00
Published by : Chemamadu Poththakasalai
UG.50, People's Park, Colombo -11.
T.P : 011-2472362, 2331475
Printed by : Chemamadu Pathippakam,
Colombo -11.
T.P 0777 345 666.
E-mail : *Chemamadu@yahoo.com*
Web: www.chemamadu.com
வெளியீட்டு எண் : CBCN -2014-02-01-128


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

சூழலியல் என்பது வளர்ந்து வரும் அறிவுத் துறையாகி மேலெழுகின்றது. பல்கலைக்கழகங்களில் அதன் பன்முகத் தன்மைகள் நோக்கிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உலகளாவிய முறையிலே ஆய்வு மாநாடுகளும், கருத்தரங்குகளும், அறிவுப் பரிமாற்றங்களும் இத்துறையில் நிகழ்த்தப்படுகின்றன.

சூழற் பாதுகாப்புத் தொடர்பான அரச நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் உருவாக்கம் பெற்று வருதல் பிறிதொரு தோற்றப்பாடு.

சூழலியற் பாதுகாப்புத் தொடர்பான சட்டவாக்கங்களும் இடம் பெறுகின்றன.

சூழலியலின் பன்முகப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய நூல் ஒன்றின் தேவை உணரப்பட்டு இந்த ஆக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சூழலுடன் தொடர்புடைய உளவியல், சமூகவியல், பண்பாட்டியல், கல்வியியல், இலக்கியங்கள், திறனாய்வு முதலாம் துறைகளை உள்ளடக்கிய அகல் அடக்கல் நூலாக இது இடம்பெற்றுள்ளது.

-சபா.ஜெயராசா

239505 CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

பேராசிரியர் சபா.ஜெயராசா எழுதிய "சூழலியல் உளவியல் கலைவடிவங்கள்" எனும் நூல் தமிழுக்கு புதுவரவு. இன்று அனைத்துச் சிந்தனைகளும் சூழலியல் புலத்துடன் இணைத்து நோக்கும் புதிய மரபு உருவாகி வருகிறது. இதனை உள்வாங்கி தமிழ்ச் சூழலுக்கேற்ப உளவியல் கலை வடிவங்களுடன் இணைத்து சூழலியலுக்கு புதிய பொருள்கோடல் மரபை உருவாக்குகின்றார்.

இந்த நூல் தமிழ்ச் சிந்தனையிலும் படைப்பாக்க உணர்திறனிலும் பல்வேறு புதிய மாற்றங்களை நிச்சயம் உருவாக்கும். தீவிர சிந்தனையாளர்கள் படைப்பாளர்கள் நிச்சயம் படிக்க வேண்டிய நூல்களுள் இது ஒன்று.

எப்போதும் புதிய விடயங்களை எழுதி தமிழ்ச் சூழலுக்கு வழங்க வேண்டுமென்ற பேரார்வத்துடன் இயங்கும் பேராசியரின் நூல்களை நாம் தொடர்ந்து வெளியிட்டு வருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இந்நூலை ஆக்கித் தந்து நாம் வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியமைக்காக பேராசிரியருக்கு நமது நன்றி.

*113,* சேமமடு
பத்மகிரி
வவுனியா

பதிப்பாளர்
**சதபூ.பத்மசீலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சூழலியல் உளவியல் | 01 |
| 2. | நிலத்தோற்றம் சார்ந்த உளவியற் பதிவுகள் | 06 |
| 3. | கட்டட அமைப்பு உளவியல் | 11 |
| 4. | வளர்முக நாடுகளின் சூழலியற் பிரச்சினைகள் | 15 |
| 5. | போரும் சூழலியல் உளவியலும் | 20 |
| 6. | இருத்தலியமும் உளவியலும் சூழலும் | 25 |
| 7. | சூழலியல் வாதம் | 31 |
| 8. | சூழல் இறையியல் | 35 |
| 9. | இனக்குழுமச் சூழலியல் | 40 |
| 10. | மருத்துவச் சூழலியல் | 44 |
| 11. | சூழல் அழகியல் | 49 |
| 12. | சூழலியற் கலை | 55 |
| 13. | இசையிற் சூழலியல் | 60 |
| 14. | உடல் மொழி | 63 |
| 15. | சூழலியல் திறனாய்வு | 69 |
| 16. | குழந்தை வளர்ச்சியும் சூழலியலும் | 72 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சூழலியற் கல்வி 78

18. பசுமைச் சமாதானம் 82

19. பண்பாட்டின் முனைப்பு உளவியல் 87

20. பிரதேச இலக்கியம் 92

21. தேசிய இலக்கியம் 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.
# சூழலியல் உளவியல்

சூழலுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள இடைவினைகள் பற்றிய ஆய்வு சூழலியல் உளவியலில் *(Eco-Psychology)* முன்னெடுக்கப் படுகின்றது. மனிதரால் உருவாக்கப்படும் சமூகச் சூழலும், இயற்கைச் சூழலும் மனித நடத்தைகளிலும், சிந்தனைகளிலும் உணர்வுகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன.

இயற்கைச் சூழல் மனிதர் மீது ஏற்படுத்தும் செல்வாக்குகள் மனித சிந்தனைகளில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளன. அதேவேளை மார்க்சியத் தருக்கம் சமூக இருப்பு மனித நடத்தைகளில் ஏற்படுத்தும் தாக்கங்களை விரிவாக விளக்கியுள்ளது. மனித உணர்வுகள் சமூக இருப்பிலிருந்து மேலெழுதலை மார்க்சியம் தெளிவுபடுத்தியது.

உணர்விலிருந்து இருப்புத் தோன்றுதல் இல்லை என்பதும், இருப்பிலிருந்தே உணர்வு மேலெழும் என்பதும் ஒரு முக்கியமான கருத்து. இலட்சியவாத அறிகையின்படி "மனம்போல வாழ்வு" என்ற கருத்து முன்மொழியப்பட்டுள்ளது. ஆனால் மார்க்சிய நோக்கு "வாழ்வு போல மனம்" என்பதையும் இணைத்துக்கொண்டது.

உளவியற் புலத்திலே "சூழலியல் உளவியல்" என்ற கருத்தாக்கத்தை கெல்பெச் என்பவர் முதலில் முன்வைத்தார் *(POL, 2006)* ஒளி, வெளிச்சம், வண்மை, வடிவம், குளிர், வெப்பம் முதலாம் சூழல் விசைகள் மனித செயற்பாடுகளிலே ஏற்படுத்தும் தாக்கங்களை கெல்பெச் ஆய்வுகளுக்கு உட்படுத்தினார்.

அவரது ஆய்வுகள் மேலும் வளர்ச்சியடைந்தன. நகரச் சூழல், சனநெருக்கடி, நெருக்கிய இல்லங்கள், சேரி வாழ்க்கை, பண்பாட்டுச் சூழல் முதலியவை மனித நடத்தைகளில் ஏற்படுத்தும் செல்வாக்குகளை அவர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்ன்ஸ்விக் (1903-1955) கேட் லிவின் (1890-1947) முதலிய உளவியலாளரும் ஏற்கனவே சூழல் உளவியல் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தனர். பௌதிகச் சூழல் உளவியற் செயல்முறையில் ஏற்படுத்தும் தாக்கங்களை பேர்ன்ஸ்விக் விரிவாக நோக்கினார். கேட்லிவின் நடப்பியற் சமூகச் சூழலில் பல ஆய்வுகளை முன்னெடுத்தார். மனித நடத்தைகளைத் தீர்மானிக்கும் வலுவான சாதனமாகச் சூழல் அமைவதை அவர் கருத்துருவப்படுத்தினார். தனிமனிதருக்கும் சூழலுக்குமிடையே நிகழும் தொழிற்பாடாகவே மனித நடத்தைகள் மேலெழுதலை அவர் தெளிவுபடுத்தினார்.

படிப்படியாக இத்துறையில் மேலும் ஆய்வுகள் வளர்ச்சியடையத் தொடங்கின. மனித நடத்தைகளும், புலக்காட்சியும், கற்றலும் சூழலின் செல்வாக்குகளுக்கு உட்படும் விதங்கள் பற்றிய ஆய்வுகள் விரிவாக்கம் பெறத் தொடங்கின. அவற்றின் தொடர்ச்சியாகக் "கட்டடக் கலை உளவியல்" *(Architectural Psychology)* என்ற துறையும் வளர்ச்சியடையத் தொடங்கியது.

கட்டடங்களின் வடிவமைப்பு, தொழில்நுட்பச் சூழல், பொறியியற் சூழல் முதலியனவும் மனிதர் பயன்படுத்தும் பொறிகளும், கருவிகளும் மனித நடத்தைகளில் ஏற்படுத்தும் தாக்கங்களை விரிவாக ஆராயும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

எத்தகைய கோலங்களிலே கட்டடங்களை அமைத்தால் மனச் சுகத்தை எட்ட முடியும் என்பது பற்றிய சிந்தனைகள் மேலெழுந்தன. கல்வி நிலையங்கள், தொழில் நிலையங்கள் முதலியவற்றின் வடிவமைப்புக்கும் மனச்சுகத்துக்குமுள்ள தொடர்புகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

கட்டட அமைப்புக்களினால் உளநெருக்கீட்டைத் தணிக்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. *(Winkel, Saegert and Evans, 2009)*

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பன்னாட்டு நிறுவனங்களின் பொருளாதாரச் செயற்பாடுகள் மேலும் விரிவடையத் தொடங்கின. இயற்கைச் சூழலைத் தீண்டியும் சுரண்டியும் இலாபமீட்டும் பொருளாதாரச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சூழல் நெருக்குவாரங்களை உலகம் அனுபவிக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உடல் நலம் உளநலம் முதலியவை தொடர்ச்சியான பாதிப்புக்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. சூழல் மாசடையும் வேகம் அதிகரிக்க மனிதர் எதிர்கொள்ளும் எதிர்மறைத் தாக்கங்களும் மேலோங்கத் தொடங்கின.

சூழல் மாசுபடலால் காலநிலையிலும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. காலநிலை மாற்றங்களும் மனித மனங்களிலே மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணமுள்ளன.

அந்நிலையில் பராமரிப்பு நிலை அல்லது பேண்தகு நிலை *(Sustainability)* என்ற கருத்துரு முன்வைக்கப்பட்டது. சூழலும் அபிவிருத்தியும் தொடர்பான உலக ஆணைக்குழு (1987) சூழல், சமூக முன்னேற்றம் பொருளாதார விருத்தி ஆகியவற்றுக்கிடையேயுள்ள இணைப்புக்களையும் தொடர்புகளையும் வலியுறுத்தியது.

அந்நிலையில் சூழலியல் உளவியல் பல்வேறு துறைகளையும் ஒன்றிணைக்கும் அறிவியலாக வளர்ச்சியடைந்தது. மனிதருக்கும் சூழலுக்குமிடையே நிகழும் இடைவினைகளை விரிவாக அறிந்து கொள்வதற்கு பல்வேறு அறிவுத் துறைகளையும் ஒன்றிணைக்க வேண்டிய தேவை அவசியமாகின்றது. அரசியல், பொருளியல், சமூகவியல், பண்பாட்டியல், மருத்துவ இயல், நுண்ணுயிரியல், தொழில் நுட்பவியல் முதலாம் பல்வேறு துறைகளையும் உளவியலுடன் ஒன்றிணைத்து நோக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்ட சூழல் என்று குறிப்பிடும் பொழுது அதில் இரண்டு முக்கியமான பெரும் பிரிவுகள் உள்ளடங்குகின்றன. ஒன்று இயற்கைச் சூழல் மற்றையது மனிதரால் உருவாக்கப்பட்ட சமூகச் சூழல் இரண்டிலும் சடுதியான மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன.

அத்தகைய வளர்ச்சிகளின் எழுபுலத்திலே தமிழ்ச் சூழலில் உளவியற் செயற்பாடுகளை அடுத்து நோக்கலாம். ஐவகை நிலமும் அதற்குரிய உளவியற் கோலங்களும் தொன்மையான தமிழ் மரபிலே பதிவுற்றிருந்தன.

நிலமானியச் சமூக அமைப்பே நிலைபேறு கொண்டிருந்தது. குலத்தொழிலை மேற்கொள்ளும் சூழலும் சாதிய முறைமையை அடியொற்றிய உளப்பாங்குகளும் இடம்பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றம் பெருமளவிலே நிகழாத தேக்கநிலையே காணப் பட்டது. வணிக வகுப்பினரே சூழல் மாற்றங்களை பெருமளவில் அனுபவித்தனர். சூழல் மாற்றங்களின் அனுபவித்தல் புதிய சிந்தனை களும் மாற்றுவகைச் சிந்தனைகளும் அவர்களிடத்தே தோற்றம் பெற்றன.

ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து நிகழ்ந்த பொருளாதார மாற்றங்களும், கல்வி நடவடிக்கைகளும் கட்டடக்கலை அறிமுகங்களும், போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகளும் தேக்கநிலை யில் இருந்த சமூகத்தில் விடுவிப்புகளை ஏற்படுத்தின.

ஆசிய ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க மாற்றங்கள் சிந்தனையிலும் ஆக்க முயற்சிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. புதிய இலக்கிய வடிவங்களின் உருவாக்கம் நிகழ்ந்தது. பிறப்பு வழியாகவே ஒருவரின் கல்வியும் ஆக்கமும் நிர்ணயிக்கப்படுகின்றன என்ற கருத்தில் தகர்ப்பு ஏற்பட்டது. சூழல் மாற்றங்களினால் முன்னேற்றங்களை ஈட்ட முடியும் என்ற உளவியல் அனுபவம் மேலெழுந்தது.

இவ்வாறாக அறிகைநிலை அனுபவங்களைப் பெற்றுவரும் வேளை மேலைப்புலத்தில் சூழலியல் உளவியலுக்குரிய ஆய்வு முறைகளும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. *(Lindasteg Ed.2012)* ஆய்வுகூடப் பரிசோதனைமுறை, நிகழ்புனைவுக் *(Simulation)* கற்கைமுறை, தனியாள் ஆய்வுமுறை, கள ஆய்வு முறை, வினாகொத்து முறை, இனவரைபியல் முறை, உற்றுநோக்கல் முறை, விடய ஆய்வு முறை முதலாம் பல்வேறு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

சூழலியல் உளவியலில் ஒரு முக்கியமான எழுபொருளாக சூழலின் ஆபத்துக்களைப் புலக்காட்சி கொள்ளல் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு சாரார் சூழலின் ஆபத்துக்களைப் பற்றி அறியாதிருக்கின்றனர். வேறொரு சாரார் தாக்கங்களை மிகைப்படுத்தி நோக்குகின்றனர்.

சூழலில் நிகழும் தாக்கங்கள் நீண்ட பட்டியலைக் கொண்டது. நீர், வளி, நிலம், ஒலி ஆகியவை மாசடைதல், அமில மழை பெய்தல், தொழிற்சாலைகளினதும் ஊர்திகளினதும் நச்சுப் புகை வெளியேற்றம், இரசாயனக் கழிவுகளைக் கொட்டுதல், ஓசோன் படையில் ஓட்டை விழுதல், கதிரியக்கத் தாக்கம், காடுகள் அழிக்கப்படுதல், உயிரினங்கள் அழிக்கப்படுதல், சமுத்திர நீர் மட்டம் உயருதல், பெரும் பனிப் பாறைகள் உருகுதல், வெப்பநிலை அதிகரித்தல், எதிர்பாராத இயற்கை அழிவுகள் தோற்றம் பெறுதல், காட்டுத் தீ பரவுதல், குடிநீருக்குத் தட்டுப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுதல், எரிபொருள் நெருக்கடி ஏற்படுதல், புதிய நோய் வகைகள் உருவாக்கம் பெறுதல் என்றவாறு பட்டியல் நீண்டு செல்கின்றது.

அதேவேளை "அபிவிருத்தி" என்ற மகுடத்தில் மூன்றாம் உலக நாடுகளின் இயற்கைச் சமநிலை சீரழிக்கப்படுகின்றது. நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகவும் கூட்டாகவும் எவ்வாறு ஒவ்வொரு வரும் புலக்காட்சி கொள்கின்றனர் என்பது முக்கியமானதாகும்.

சூழலை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் நெருக்கீட்டுத் தூண்டிகள் *(Environmental Stressors)* முக்கியமான ஆய்வுப் பொருட் களாகவுள்ளன. செறிவுமிக்க ஒலி, சன நெருக்குவாரம், போக்குவரத்து நெரிசல், நெருங்கிய வாழ்விடங்கள், நச்சுப்புகை முதலியவை நெருக்கீட்டை உருவாக்கும் தூண்டிகளாகின்றன.

அவை தனிமனிதரது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவையாயி ருக்கும் நிலையிற் பதகளிப்பு அதிகரிக்கத் தொடங்கும். அத்தகைய நிலவரங்கள் பலவிதமான நடத்தைக் கோலங்களை உருவாக்கும் எதிர்த்தற் செயற்பாடுகள் பின்வாங்கும் செயற்பாடுகள் என்றவகையில் நடத்தைகள் வேறு பிரித்து அறியப்படும்.

சூழல் அழுத்தங்கள் மனித உடலியக்கத் தொழிற்பாட்டிலும் பல்வேறு மாற்றங்களை உருவாக்கிய வண்ணமிருக்கும் அவற்றோடு இணைந்ததாக உளக்கோலங்களும், உணர்வுகளும் மாற்றமடையும்.

சூழலியற் பிரச்சினைகளின் ஆழ்ந்த பின்புலத்தை நோக்குதல் முக்கியமானது. நவீன முதலாளிய வளர்ச்சியும் சூழலைச் சுரண்டி மிகை இலாபமீட்டும் செயற்பாடுகளும் சூழல் கேடுறுவதன் பின்புல விசைகளாக அமைதலைத் தெளிந்து அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. சூழல் மாசடைதல் தவிர்க்க முடியாதது என்று எண்ணுதல் தவறானது. தாக்கங்களுக்கு உள்ளாவோர் வர்க்க நிலையிலே ஒன்றிணைந்து மாற்றங்களை வருவிக்க வேண்டிய தேவையும் உணர்த்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.
# நிலத்தோற்றம் சார்ந்த உளவியற் பதிவுகள்

நிலத்தோற்றங்களுக்கும் உளவியற் கோலங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. பாதகமான நிலத்தோற்றம் உள நெருக்கீட்டை உண்டாக்கும். உளச்சுகம் வேண்டி தலயாத்திரை செய்தல் நெடுங் காலமாக இடம்பெற்று வரும் உளச்சுகம் தேடும் நடவடிக்கையாகின்றது. நவீன சமூகத்தில் அது சுற்றுலா என்ற வடிவில் மேலெழுந்துள்ளது.

ஒருவரால் புலக்காட்சி கொள்ளப்படும் பரப்பளவே நிலத்தோற்றம் அல்லது நிலக்காட்சி எனப்படும். நிலம், வெளி, ஆகாயம், கட்டடம் என்ற அனைத்தும் அதில் உள்ளடங்கும் நிலத்தோற்றம் என்ற பரிமாணமும் பார்ப்போரின் நிலை என்ற பரிமாணமும் அங்கே முக்கியத்துவம் பெறும். முதலாவது புறநிலைப் பரிமாணம் மற்றையது அகநிலைப் பரிமாணம்.

அழகு என்பது பார்ப்போரின் அடிப்படையாகத் தோன்றுகின்றதா அல்லது பார்க்கும் பொருளின் அடிப்படையாகத் தோன்றுகின்றதா என்ற எழுபொருள் அழகியலில் ஒரு முக்கியமான விவாதமாகவுள்ளது. ஆயினும் இரு பரிமாணங்களும் முக்கியமானவை அவற்றை அடிப்படையாகக் கொண்டே "நிலத்தோற்ற முகாமை" "நிலத்தோற்றத் திட்டமிடல்" முதலிய துறைகள் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன.

நிலத்தோற்றம் தொடர்பான கோட்பாடுகளுள் படிமலர்ச்சிக் கோட்பாடு அல்லது கூர்ப்புக் கோட்பாடு முதலில் முக்கியத்துவம் பெறுகின்றது. மனித உயிர் வாழ்தலுக்கான போராட்டம் நிலத்தோற்றத் தோடு இணைந்தது. நிலத்தோற்றத்தோடு இணைந்ததாக மனிதரின் நடத்தைகளும் பொருளாதாரச் செயற்பாடுகளும் அமைந்தன.

தமிழர் பண்பாட்டில் ஐவகை நிலமும் ஐந்திணை மரபும் நிலத்தோற்றத்துக்கும் வாழ்வியலுக்குமுள்ள தொடர்புகளைத் தெளிவாகப் புலப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தோற்றத்தையும் மனித இயல்பையும் விளக்கும் கோட்பாடு களை அடியொற்றி உயிர் நயப்புக் கருதுகோள் *(Biophilliahypothesis)* முன்வைக்கப்பட்டது. *(Wilson, 1984)* மனிதரிடத்து வாழ்தலும் வாழ்தல் விருப்பும் தொடர்பான செயல்முறையும் முன்னெடுப்பும் உயிரியல்புடன் இணைந்த உட்பொதிந்த செயற்பாடாக இருத்தல் குறிப்பிடப்படுகின்றது. அதன் அடிப்படையாக மனிதர் விலங்குகள், பறவைகள், தாவரங்கள், நிலத்தோற்றம் ஆகியவற்றுடன் தொடர்புகளை மேற்கொள்ளுமாறு ஊக்கல் கொள்கின்றனர்.

உயிரியல் மற்றும் நிலத்தோற்றப் பன்மை நிலைகளினூடே இயலளவான மனித செயற்பாடுகள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. அதேவேளை உள்ளார்ந்த நிலையில் மனித ஊக்கல் இடம்பெறுகின்றது என்ற கருத்து நிராகரிக்கப்படுதல் உண்டு.

பொருத்தமான வாழ்விடம் தொடர்பான தேடலே நிலக்காட்சித் தெரிவை உருவாக்குகின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. உயிரியல் அடிப்படையிலே நிலத்தோற்றத் தெரிவு நிகழ்கின்றது. என்ற கோட்பாடுகள் ஒருபுறம் வளர்ச்சியடைய பண்பாட்டு அடிப்படையில் விளக்கும் கோட்பாடுகளும் மறுபுறம் எழுச்சிகொள்ளத் தொடங்கியுள்ளன.

பண்பாட்டுக் கோலங்களின் அடிப்படையிலே நிலத்தோற்றத்துக் கும் மனிதருக்குமிடையே நிலவும் இடைவினைகள் விளக்கப்படு கின்றன. நிலத்தோற்றத் தெரிவுக்குரிய முன்னுரிமைகள் பண்பாட்டின் அடிப்படையில் நிகழ்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. நிலத்தோற்றம் தொடர்பான உளப்பாங்குகளும் பண்பாட்டின் அடிப்படையாகவே உருவாக்கப்படுகின்றன.

மேலும் பண்பாட்டை அடியொற்றி நிலத்தோற்றம் தொடர்பான சடங்குகளும் உருவாக்கப்படுகின்றன. நிலத்தோற்றத்தை அடிப்படை யாகக் கொண்ட அழகியற் புனைவுகளும் இடம்பெறுகின்றன.

நிலக்காட்சி அழகினை அளவீடு செய்யும் நுட்பங்களும் உருவாக் கப்பட்டு வருகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் வனத் திணைக்களம் அத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. வேறு வேறுபட்ட நிலக்காட்சிகளை உளவியல் நிலைப்பட்ட அளவீடுகளுக்குக் கொண்டு வருதல் நிலக்காட்சி முகாமைத்துவத்தை எளிதாக்கி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் தொடர்ச்சியாக நிலக்காட்சி அளவீட்டுச் சட்டகங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. *(TVE it etal 2006)* இயற்கைப் பண்பு, தாவரங்களின் பரம்பல், ஒருங்கிணைவு, சிதறல், வரலாற்றுத் தொடர்ச்சி, காட்சி வடிவமைப்பு அலகுகள், நிலக்காட்சி இரசனை, நிலக்காட்சிப் பின்புலத்துடன் இணைந்த பாதுகாப்பு உணர்வு, தாவரங்களுடனான பற்றுக்கள், மனப்பதிவுகள் முதலியவற்றை அளவிடும் முறைகள் உருவாக்கப்படுகின்றன.

இயற்கையோடு இசைந்து வாழ்தல் உடற்சுகத்தையும் உளச் சுகத்தையும் ஏற்படுத்தும் என்பது அங்கீகரிக்கப்பட்ட கருத்தாகவுள்ளது. சித்தமருத்துவம், ஆயுர்வேதம் முதலியவற்றிலும் அதே கருத்து வலியுறுத் தப்பட்டுள்ளது. தொன்மையான கிரேக்க மருத்துவத்திலும் அந்தக் கருத்து இடம்பெற்றிருந்தது.

பெரு நகரங்களின் நெருக்குவாரங்களின் மத்தியில் இயற்கையைத் தேடல் இடம்பெற்று வருகின்றது. நகரங்களிலே காணப்படும் பசுமை இடங்கள் பசும்வெளி *(Green Space)* என்ற தொடரால் அழைக்கப்படு கின்றது. மரங்களின் சூழல் கொண்ட மருத்துவ மனைகளிலே நோயாளர் விரைந்து குணமாகி வீடு செல்லலும் புள்ளிவிபர அடிப்படையில் விளக்கப்படுகின்றது.

பசும் வெளிகளுக்கு அண்மையில் வாழ்வோர் உடல் உள நிலை களில் ஒப்பீட்டளவில் சாதகமான நிலைகளில் இருத்தலும் கண்டறியப் பட்டுள்ளது. மனிதர் சுவாசிக்கும் வளியின் தரம் முதற்கண் முக்கியத்துவம் பெறுகின்றது. பசும்வெளிகள் வளியைச் சுத்தமாக்கு தலிலே சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன.

சமூக உறவுகளை வளர்ப்பதிலும் பசும்வெளிகள் பங்கு கொள் கின்றன. சமூக உறவுகளும் உடல் உள நலத்துக்கு அடிப்படைகளாக அமைகின்றன.

உடலியல் மற்றும் உளவியல் நிலைகளிலே ஒருவர் தம்மைப் புதுப்பித்துக் கொள்ளும் செயற்பாடு சூழலியல் உளவியலில் ஒரு முக்கியமான எழு பொருளாகவுள்ளது. அறிகை மற்றும் மனவெழுச்சி நிலைச் செயற்பாடுகள் அத்தகைய புதுப்பித்தற் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் துணை நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளப் புதுப்பித்தற் செயற்பாடு மனிதரின் உயிரியற் பரிணாம வளர்ச்சியோடும் சமூகத்தின் பரிணாம வளர்ச்சியோடும் இணைந்ததாக அமைகின்றது.

சமூகம் தன்னை மீளமீள உருவாக்கும் செயல்முறைகளைக் கொண்டது. பொருளுற்பத்தி முறைமை, கல்வி, சடங்குகள் முதலியவை அதற்குரிய கருவிகளாகச் செயற்படுகின்றன. நுண்பாக நிலையிலும் பெரும்பாக நிலையிலும் மீளுருவாக்கம் இயங்கிய வண்ணமுள்ளது. சமூக மீளுருவாக்கத்தில் வர்க்க இயல்பு தொடர்ந்து நிகழ்வதையும் மனங்கொள்ள வேண்டியுள்ளது.

நிலத்தோற்றம் பற்றிய ஆய்வின் அடிப்படையாக புலன்சார் மிகுதிறன் *(Perceptual Fluency)* என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்படு கின்றது. *(Linda Steg, et.al2012)* அதாவது இயற்கைச் சூழலை நகரச் சூழலைக் காட்டிலும் மிகுந்த புலன்சார் திறனுடன் மூளை வடிவமைத்துக் கொள்கின்றது என்பதே அதன் விளக்கமாகும்.

நெருக்குவாரங்களைத் தணிக்கும் இயல்புகள் தாவரங்கள், பூக்கள், பறவைகள், விலங்குகள் முதலாம் இயற்கைக் கூறுகளிலே காணப்படு தலால் சூழலைக் கிரகித்துக் கொள்ளல் இலகுவாக நடைபெறுகின்றது. நகரச் சூழல் கூடுதலான அன்னிய மயப்பாட்டை மனித உள்ளங்களிலே ஏற்படுத்திக் கொண்டிருக்கும். தமக்குச் சம்பந்தமில்லாத வடிவங்களோடு தாம் உறவாடிக் கொண்டிருப்பதாக உள்ளம் உறுத்திக்கொண்டிருக்கும்.

அதேவேளை இயற்கைச் சூழல் தமக்குப் பாதுகாப்பைத் தரும் என்ற மனவெழுச்சித் தொடர்புகளும் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது இயற்கை நேர்முகமான விளைவுகளைத் தூண்டிய வண்ணமும் இருக்கின்றது.

பெரும்பாக நிலையில் சூழலை நோக்குதல் போன்று நுண்பாக நிலையில் நோக்கி மீள் நிறுவலை *(Restoration)* மேற்கொள்ளலும் சூழலியல் உளவியலிலே வலியுறுத்தப்படுகின்றது. எதிர்மறையான தாக்கங்களில் இருந்து விடுபட்டுக் கொள்வதற்கும் பாதுகாப்புக் கவசங்களைத் தமக்கே உரிய வகையில் உருவாக்கிக் கொள்வதற்கும் நுண்பாக நோக்கும் மீள்நிறுவலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பறவைகளின் அசைவுகள், மீன்களின் அசைவுகள், பூக்களின் நிறப்பிரிகை போன்ற நுண்பாகத் தரிசனங்கள் தாழ்நிலையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளநெருக்குவாரங்களில் இருந்து விடுதலை தரவல்லவை என்று குறிப்பிடப்படுகின்றது *(Gulwadi, 2006)* வேலைப் பழுவின் அழுத்தங்க ளுக்குப் பின்னர் ஆசிரியர்கள் சிறிது தூரம் தோட்டத்தில் உலாவி நுண்காட்சிகளைப் பார்த்து வந்த பின்னர் அவர்களிடத்துப் புத்தூக்கம் மேலெழுதல் கண்டறியப்பட்டது.

உளச் சோர்வு, உள நெருக்குவாரம் முதலியவற்றிலிருந்து மீண்டெழுவதற்கு இயற்கைச் சூழலே தூண்டிகளைத் தருதல் ஆய்வுகள் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளது. இயற்கையோடு இசைந்து இடையுறவு கொண்டு வாழ்ந்த மனித வாழ்வின் நீட்சியோடு இயற்கை இன்பம் தொடர்புபட்டிருக்கலாம்.

நகரச் சூழல் பல்வேறு காரணிகளால் இடர்களை ஏற்படுத்த வல்லது பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், கட்டடங்கள் மற்றும் ஊர்திகள் யார்யாருக்கோ சொந்தம் என்ற பொருண்மிய அன்னிய மறப்பாடு, முன்பின் அறியாத அன்னிய முகங்கள், சூழலை மாசுபடுத்தும் பல்வேறு செயற்பாடுகள், மனித உணர்வுகளை ஒன்றிணைக்க முடியாத நிறுவன அமைப்புக்கள் வறிதாக இருத்தல் முதலியவை அவலங்களை உருவாக்கிய வண்ணமுள்ளன.

நகரங்களைத் திட்டமிடும் பொழுது மேற்கூறிய சூழலியற் காரணிகளை மனங்கொள்ள வேண்டியுள்ளது. கிராமப்பண்புகளையும் இயற்கைப் பண்புகளையும் நகரங்களில் உட்பொதியும் செயற்பாடுகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பூங்காக்களை அமைத்தல், நீர்வீழ்ச்சிகளை உருவாக்குதல், கிராமியக் கலை வடிவங்களைக் கொண்டுவருதல் முதலிய செயற்பாடுகள் இடம்பெறத் தொடங்கி விட்டன. அவற்றால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எட்டிவிட முடியாது.

உழைப்பவர்களை உணர்வு நிலையிலும், வர்க்க நிலையிலும் ஒன்றிணைத்தல் உளவியல் நிலையிலே முக்கியத்துவம் பெறுகின்றது. தாம் தனிநபர் மட்டுமல்ல, தமக்கே உரிய வர்க்க நலன் ஒருங்கிணைந் துள்ளது என்ற உணர்வு தொடர்ச்சியான இங்கிதத்தை உருவாக்கிய வண்ணமிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.
# கட்டட அமைப்பு உளவியல்

கட்டட அமைப்பு, உளவியல் மனிதருக்கும் கட்டட அமைப்புக்க ளுக்குமிடையே உள்ள தொடர்புகளையும் அதனால் முகிழ்த்தெழும் உளவியற் கோலங்களையும் ஆழ்ந்து நோக்குகின்றது.

மனிதர்களை ஒன்று திரட்டி ஒரே வடிவமைப்புக்குள் நோக்கிக் கட்டடங்களை வடிவமைத்தல் தவறானது. உயர் வருமானம் கொண்டவர்களின் கட்டட அமைப்புத் தொடர்பான உளப்பாங்கும் தாழ் வருமானம் கொண்டவர்களின் உளப்பாங்கும் வேறுபாடு கொண்டவை என்பதை முதலிலே கவனிக்க வேண்டியுள்ளது.

கட்டட வடிவமைப்புக்களிலே இலாப நோக்கைக் கருத்திலே கொண்டு உழைப்பவாகளின் எதிர்பார்ப்புக்களைச் சிதறடித்து விடக் கூடாது. உழைப்பவர்களுக்கென உருவாக்கப்படும் அடுக்கு மாடிகளில் அவர்களின் உணர்வுகளைச் சிதறடிக்கும் ஒடுக்கங்களும், நெரிசல்களும் உருவாக்கப்பட்டிருத்தல் உளவியலாளரின் கவனயீர்ப்பைப் பெற்றுள் ளது. வாழ்வோரின் எண்ணிக்கைக்கும் வாழும் இடப்பரப்புக்கும் உள்ள தொடர்பின் அளவுகளிலே வருமான அடிப்படையிலே பெரும் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன.

கட்டட அமைப்பின் ஒடுக்கமும் நெரிசலும், முரட்டுத்தனங் களையும், வன்செயல்களையும், விலகல் நடத்தைகளையும் உருவாக்கு வதிலே நேரடியான செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன.

மேற்கூறியவற்றின் எழுபுலத்தில் "சமூக வடிவமைப்பு" *(Social Design)* என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. (Gifford, 2007a) சமூக வடிவமைப்பிலே பின்வரும் இலக்குகள் முதன்மைப்படுத் தப்படுகின்றன.

*1* வாழ்வோரின் தேவைகளையும், நடத்தைகளையும் கருத்திலே கொண்டு கட்டடங்களை வடிவமைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 வாழ்வோரின் உளநலம், உடல்நலம் மட்டுமன்றி அவர்களின் விளைதிறன்களையும் அதிகரிக்கச் செய்யும் வகையிலே கட்டட ஆக்கமும் வடிவமைப்பும் இடம்பெறல் வேண்டும்.

3 பொருத்தமான சமூக மயமாக்கலை உருவாக்கும் வகையிலே வடிவமைப்பு இடம்பெறுமாறு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

4 வாழ்வோரின் கட்டுப்பாடுகளுக்கு உட்படும் நெகிழ்ச்சிப் பாங்கு கட்டட அமைப்பில் இடம்பெறல் வேண்டும். விரும்பியவாறு உள்ளக மாற்றங்களைச் செய்யக்கூடிய நிலைவரம் இருத்தல் வேண்டும்.

5 வாழ்வோரின் கற்பனைகளுக்கும் ஆக்கத் திறன்களுக்குமுரிய களமாக வாழ்விடம் அமைதல் வேண்டும்.

6 உளநெருக்கீடுகளைத் தூண்டக்கூடிய வடிவமைப்புக்களோ, வண்ணப்பூச்சுக்களோ பயமூட்டும் நிர்மாண முடுக்குகளோ இடம்பெறுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

7 வசிப்போரின் அழகியல் உணர்வுகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகக் கட்டட அமைப்பு இடம்பெறல் வேண்டும்.

8 வசிப்போரின் பண்பாட்டுக் கோலங்கள், நம்பிக்கைகள், விழுமியங்கள் ஆகியவற்றுக்கும் ஈடுகொடுத்தல் வேண்டும்.

மேற்கூறியவற்றின் எழுபுலத்தில் சமகாலக் கட்டடக் கலையின் இயல்புகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய தேவையும் மேலெழுந்துள்ளது. அதேவேளை நிதி நெருக்குவாரங்கள், கட்டட நிர்மாணங்களின் ஈடுபடுவோரின் இலாப நோக்கு, மட்டுமன்றி மேலோங்கியோரின் மேலாதிக்க உணர்வும் கட்டுமான அமைப்புக்களில் ஊடுருவியுள்ளன.

ஏற்கனவே கட்டட அமைப்புக்கும் மேலாதிக்கத்துக்குமுள்ள தொடர்புகள் மிசேல் பூக்கோவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வாழ்வோரின் உடலைப் "பணிவுடலாக" மாற்றும் செயற்பாடுகள் மேலாதிக்கக் கட்டட வடிவமைப்பில் இடம்பெற்றிருத்தலை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டடக் கலையின் உளவியற் கோலங்களிலே தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மரபுகளை வேண்டுவோர் ஒரு சாரார் இன்னொரு சாராய் நவீனத்துவத்தை வேண்டுபவர். மிகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

239506

அலங்காரங்களை விரும்புபவர் இருக்கின்றனர். எளிமையை விரும்புபவரும் உளர்.

நவீன முதலாளிய சமூகத்தில் கட்டிடங்களை அமைப்போருக்கும் பயன்படுத்துவோருக்குமிடையே இடைவெளிகளும் முரண்பாடுகளும் காணப்படுகின்றன. தாம் திட்டமிட்டு அமைத்தவற்றைப் பயன்படுத்து மாறு நுகர்வோர் வலியுறுத்தப்படுகின்றனர்.

கட்டடச் சூழலோடு இசைந்து இடையுறவு கொள்ள முடியாத நிலையில் உள நெருக்குவாரங்கள் இடம்பெறத் தொடங்கும். இவை தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் சூழலியல் உளவியலில் மேற்கொள் ளப்பட்டுள்ளன. சிக்காகோ நகரில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வானது இங்கே குறிப்பிடலாம். *(Kaplan and Kaplan, 1989)* ஒரேவிதமான கட்டடங்கள் இரண்டு இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. ஒன்றின் சூழலில் தாவரங்களும், பசுமையும் அற்ற கல்லினால் ஆன பரப்பு விடப்பட்டது. மற்றைய தன் சூழலிலே பசுந்தாவரங்கள் நட்டு வளர்க்கப் பட்டிருந்தன. பசுமையற்ற கட்டாந்தரைச் சூழலில் உள்ள கட்டங்களில் வாழ்ந்தவர்களிடத்து முரட்டுப் பண்புகளும், வன் நடத்தைகளும், குடும்ப முரண்பாடுகளும் ஒப்பீட்டளவில் மிகையாகக் காணப்பட்டன.

11052

அறிகைநிலை, எழுச்சிநிலை, உடலியக்கநிலை ஆகிய மூன்று நிலைகளிலும் கட்டட அமைப்பு செல்வாக்குச் செலுத்திய வண்ணமிருக்கும்.

கட்டட அமைப்பு வாழ்விட அசைவியத்தை *(Mobility)* ஏற்படுத்து வதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதாவது உளச் சுகத்தைத் தராதவிடத்து இடம்விட்டு இடம்மாறல் பொதுவாக இடம்பெற்று வருகின்றது. கட்டட அமைப்பும் சூழல் நிலைவரங்களும், குறித்த இடத் தில் வாழும் மக்களுடனான எதிர்மறை நோக்கங்களும் அசைவியத்தை ஏற்படுத்துகின்றன. பொருத்தமான கல்வி நிலையங்கள், மற்றும் தொழில் நிலையங்களின் தேடலும் அசைவியத்தை ஏற்படுத்துகின்றன. அதாவது, சூழலின் இயல்பு அசைவியத்தை ஏற்படுத்துவதிலே பலமான விசையாகவுள்ளது.

கட்டடங்களின் வெளித்தோற்றை மட்டும் கொண்டு இதன் இயல்பை முழுமையாக மதிப்பீடு செய்ய முடியாது. அதன் உள்ளியல்புகள், தொழிற்பாட்டு இயல்புகள், பயன்பாடு, அதன் வழியாக எழும் ஊக்கல் அல்லது சோர்வு, அகவடிவமைப்புகளின் உளவியல் இயல்புகள் முதலிய பல்வேறு பரிமாணங்களையும் கருத்திலே கொள்ள வேண்டும்.



KOHA JPL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கட்டடங்களுக்குப் புறநிலை உருவமைப்பு இருத்தல் போன்று அதன் வழியாக உருவாக்கப்படும் அகநிலையான அருவ *(Abstract)* மனப் பதிவும் உண்டு. வடிவமைப்பின் இயல்பு அத்தகைய குறியீட்டு மனப்பதிவைப் பயன்படுத்துவோரிடத்து ஏற்படுத்தவல்லது.

நகரங்களின் வளர்ச்சியைத் தொடர்ந்து புதிய கட்டட அமைப்புக்கள் மீது கவர்ச்சி ஏற்படத் தொடங்கியது. நகரங்களின் வளர்ச்சியோடு நவீன கட்டடக்கலை வளர்ச்சியும் ஒன்றிணைந்து கொண்டது. புதிய கட்டடக் கலைகளோடு இசைவு கொள்ளும் செயல்முறையில் நேர்த்தாக்கங்களும் இடம்பெற்றன. எதிர்த்தாக்கங்களும் தோன்றின.

தனியாள் விரும்பினுக்கும் சூழல் இருப்புக்குமிடையே சமநிலைப் பிறழ்வுகள் தோன்றின. அதனால் கிராமங்களிலே காணப்படாத பல புதிய பிரச்சினைகள் நகரங்களிலே தோன்றின. சூழலிலிருந்து எழுந்த தூண்டிகளின் மிகையான சுமை மனித நடத்தைகளிலே மாற்றங்களைத் தோற்றுவித்தது.

கட்டட அமைப்புக்கும் மனித எழுச்சி மட்டங்களுக்குமிடையே தொடர்புகள் உளவியலாளரால் நோக்கப்பட்டன. தாழ்ந்த எழுச்சி மட்டங்களைக் *(Arousal Level)* காட்டிலும் உயர்ந்த எழுச்சி மட்டங்கள் கூடுதலான எதிர்மறை விளைவுகளை உருவாக்குதலும் கண்டறியப்பட்டது. அதிக எழுச்சி மட்டங்களைப் பராமரித்துக் கொள்ள முடியாத நிலை உளநெருக்கீடுகளுக்கு இட்டுச்செல்ல வல்லது.

சூழல் தொடர்பான பண்பு நிலையான தர நிர்ணயிப்பிலே கட்டட உள்ளமைப்புக்களும் வெளியமைப்புக்களும் முக்கியமான வகிபாகத்தை மேற்கொள்கின்றன. மனிதரின் தேவைகளும் விழுமியங்களும் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன என்பது பண்புநிலையான தர நிர்ணயிப்பிலே முக்கியத்துவம் பெறுகின்றது. அவற்றுடன் உடல்நிலை உளநிலை தொடர்பான முன்னேற்றங்களும் கருத்திற்கொள்ளப்படும்.

உடல்நலம், குடும்பநலம், சமூகநீதி, சுதந்திரம், பாதுகாப்பு, கல்வி, சுயமரியாதை, சூழலின் நற்பண்புகள், நல்ல நிலையில் உள்ள சமூகத் தொடர்புகள், நல்ல பொழுதுபோக்கு, போதுமான வருமானம், நற்கணிப்பு, நல்ல வேலை நிலவரங்கள், அழகியல் ஈடுபாடுகளுக்கான வாய்ப்புக்கள் முதலியவை பண்புநிலையான மேம்பாடுகளை உருவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.
# வளர்முக நாடுகளில் சூழலியற் பிரச்சினைகள்

வளர்முக நாடுகள் இரு நிலைகளிலே சூழலியற் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. ஒருபுறம் உலகளாவிய பெரும் முதலாளிய நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் சூழலியற் பாதிப்புக்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. வளர்முக நாடுகளின் மூல வளங்களைக் குத்தகைக்கு எடுப்பதனாலும், அந்நாடுகளிலே மிகை இலாபமீட்டும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாலும் பல்வேறு சூழலியற் பிரச்சினைகள் மேலெழுகின்றன. அதேவேளை உள்ளூர் முதலாளியம் மேற்கொள்ளும் தொழில் முயற்சிகளும் சூழலியற் பிரச்சினைகளை உருவாக்கிய வண்ணமுள்ளன.

வளர்முக நாடுகளின் நகரங்கள் பெரும்பாலும் திட்டமிட்டு அமைக்கப்படாதவை. குடியிருப்புப் பிரச்சினைகள், சுகாதார சீர்கேடுகள், கழிவுப் பொருட்களின் முகாமைத்துவம் சிறப்புற இடம்பெறாமை, போக்குவரத்து நெருக்கடிகள், கழிவுப் பொருட்கள் நீர்நிலைகளிலே கலக்கவிடப்படுதல், தொழிற்சாலைகளிலிருந்து நச்சுப்புகை வெளியேற்றம் என்றவாறு சூழலியற் பிரச்சினைகள் நீண்டு கொண்டே செல்லும்.

கழிவுப் பொருட்கள் தொடர்பான பயன்பாடு இரு வகைப்படும் ஒன்று அவற்றை மீள் சுழற்சிக்குப் பயன்படுத்துதல் மற்றையது மீள் சுழற்சிக்கு உட்படுத்தாது நேரடியாகப் பயன்படுத்துதல், கண்ணாடி, அலுமினியம், கடதாசி, இரும்பு, துணி வகைகள் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படாது நேரடியாகப் பயன்படுத்தப்படுகின்றன. உலகில் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துவதில் கியூபா மக்களே முன்னணி வகிக்கின்றனர்.

கல்கத்தாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சூழல் மாசுபடல் தொடர்பான புலக்காட்சியில் சமூக அந்தஸ்து அல்லது சமூக நிலை செல்வாக்குச் செலுத்துதலைப் புலப்படுத்துகின்றது *(Mukherjee, 1993)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது சூழல் மாசுபடல் தொடர்பான கவலை படித்தவர்களிடத்தும், செல்வந்தர்களிடத்துமே பெருமளவிற் காணப்படுகின்றது. வறியவர்கள் அது பற்றிக் கவலை கொள்ளாதவர்களாகவே பெருமளவிற் காணப்படு கின்றனர்.

நீர்மாசுபடல் தொடர்பான வயிற்றோட்டம் வளர்முக நாடுகளிலே பெருமளவிற் காணப்படுகின்றது. நீரின் இயல்பை வேறுபடுத்திக் காண்பதற்குரிய உளப்பாங்குகள் போதுமான அளவிலே வளர்ச்சி கொள்ளாத நிலை நீடித்துள்ளது.

வளர்முக நாடுகளில் இனத்துவ மற்றும் அரசியற் பிரச்சினைகளும், பொருளாதார நெருக்கடிகளும் மேலோங்கிய நிலையில் சூழலியற் பிரச்சினைகள் பின்தள்ளப்பட்டு விடுகின்றன.

நெருக்கடி மிக்க சேரி வாழ்விலே தனியாள் அடையாளங்கள் அழிந்துபோகும் உளவியல் அவலநிலை காணப்படுகின்றது. நடத்தை ஆற்றலிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது. தன்னியல் நிறைவுக்கு இடமில்லாமற் போய்விடுகின்றது.

ஆபத்து விளைவிக்கும் தொழில்களுக்குரிய பாதுகாப்பு நடவடிக்கை கள் வளர்முக நாடுகளிற் போதுமானதாக அமையவில்லை. தமிழகத்தின் சிவகாசியில் உள்ள பட்டாசுத் தொழிற்சாலைகளில் மிகுந்த அவல நிலை காணப்படுகின்றது. அவ்வாறே கல் உடைக்கும் தொழிலாளரும் போதிய பாதுகாப்புக் கவசங்கள் இன்றித் தொழில்களிலே ஈடுபடுத்தப்படு கின்றனர்.

நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும் சூழலியற் பிரச்சினைகள் காணப்படுகின்றன. பாகிஸ்தானில் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட கிராமப்புற மக்களுக்குக் கழிப்பறைகள் இல்லை திறந்த வெளிகளிலே கழிவு வெளியேற்றம் நிகழ்த்தப்படுகின்றது. *(Esser and Jenessen, 2006)* கழிக்கப்படும் சிறுநீர் மழைநீரால் அள்ளிச் செல்லப்பட்டு நீர்நிலைக ளிலே கலக்கின்றது. வெப்ப காலங்களில் அவை காய்ந்தும் ஆவியாகிச் சென்றும் உடல்நலத்தைப் பாதிப்படையச் செய்கின்றன. சிறப்பாகச் சிறுவர்களின் உடல்நலம் அவற்றால் பாதிப்பு அடைகின்றது.

வளர்முக நாடுகளில் சமூகப் பொது நிலையங்களும், பூங்காக்களும் கூட மாசுபடுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. கழிவுகளைக் கொட்டு தலும் வெளியேற்றுதலும் அவ்வப்போது நிகழ்ந்த வண்ணமுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்துக்களும் வளர்முக நாடுகளிலே அதிகரித்த வண்ணமுள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகளிலே பயன்படுத்தப்பட்டுத் தள்ளிவிடப்பட்ட வாகனங்கள் வளர்முக நாடுகளிலே இறக்குமதி செய்யப்படுகின்றன. செவ்விதாக்கல் அந்த வாகனங்களிலே உரிய முறையிலே நிகழ்த்தப்படாமையினால் விபத்துக்கள் சர்வசாதாரணமாக நிகழ்கின்றன.

வாகன இறக்குமதியும் விற்பனையும் வளர்முக நாடுகளில் மிகை இலாப மீட்டும் தொழில்களாகவுள்ளன. விபத்துக்களோடு பழக்கப்பட்ட நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். வாகனங்கள் சமூகத்தின் அந்தஸ்துச் சின்னமாக்கப்படுவதற்குரிய விளம்பரங்களை வாகன விற்பனை நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. அதேவேளை தரக்குறைவான எரிபொருள் இறக்குமதியால் வளிவேகமாக மாசுபடல் ஏற்பட்ட வண்ணமுள்ளது.

வளர்முக நாடுகளின் அதிக இலாப மீட்டும் ஒரு தொழில் முயற்சியாக மது விற்பனையும் மதுக்கடைகளும் அமைந்துள்ளன. உள்ளூர் முதலாளித்துவம் இத்துறையில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. மக்களின் நலத்தைக்காட்டிலும் இலாப மீட்டும் முதலாளிய நடவடிக்கைகளே மேலோங்கி நிற்கின்றன. மதுவால் ஏழைகளின் வாழ்க்கையைச் சீரழித்தல் மட்டுமன்றி சிறுபான்மை இனங்களின் வாழ்க்கையை அழிப்பதற்குரிய கருவியாகவும் மது ஒரு முக்கியமான கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

சுற்றுலாக் கைத்தொழில் வளர்முக நாடுகளிலே சூழலியற் பிரச்சினைகளையும் உளவியற் பிரச்சினைகளையும் தோற்றுவித்து வருகின்றன. முதலாளிய நோக்கிலே சுற்றுலாக் கைத்தொழில் அதிக இலாபமீட்டும் துறையாகவுள்ளது. இலாபமீட்டும் நடவடிக்கையிலே பாலியல் தொழில் சிறப்பிடம் பெறுகின்றது. அதனால் எயிட்ஸ் நோயின் பரவலும் இடம் பெற்று வருகின்றது. வளர்முக நாடுகளே எயிட்ஸ் நோயின் தாக்கத்துக்குக் கூடுதலான அளவில் உட்படுகின்றனர்.

சுற்றுலாக் கைத்தொழிலினால் அழகிய நிலத்தோற்றங்கள் மீது கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. சூழலை மாசுபடுத்தும் பெருந் தெருக்கள் அமைக்கப்படுகின்றன. இயற்கைச் சூழலைச் சிதைக்கும் விமான நிலையங்கள் உருவாக்கப்படுகின்றன. அவற்றால் பறவை இனங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலாக் கைத்தொழில் மேலைநாடுகளின் விழுமியங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. "ஐரோப்பிய மையவாதம்" என்ற கருத்தாக்கம் சுற்றுலாக் கைத்தொழிலில் மிகையாக ஊருவியுள் ளது. சுற்றுலாக் கைத்தொழிலாற் கிடைக்கப் பெறும் வருமான மும் பெருமளவில் பன்னாட்டு நிறுவனங்களுக்கே செல்கின்றன. அதனால் பன்னாட்டு நிறுவனங்கள் சுற்றுலாக் கைத்தொழிலில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றன.

பெண்ணிய நோக்கிலே சுற்றுலாக் கைத்தொழில் மிகுந்த பாதகமான நிலையினைக் கொண்டுள்ளது. அந்தக் கைத்தொழிலினால் பெண்களே அதிக பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். உடலியல் நிலையில் மட்டுமன்றி உளவியல் நிலையிலும் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பெண்களைப் போன்று சிறுவர்களும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்ற னர். அவர்களின் எதிர்காலம் பணத்துக்காகச் சிதைக்கப்படுகின்றது.

வளர்முக நாடுகளின் சூழல் கேடுறுத்தப்படுவதற்கு அதிக இலாபமீட்ட முனையும் வர்த்தக சினிமாவும் ஒரு முக்கியமான காரணி யாகவுள்ளது. உலகு பற்றிய தவறான விழுமியங்களும் பெறுமானங்களும் வர்த்தக சினிமாவினால் கையளிக்கப்படுகின்றன. நடப்பியலுக்குப் பொருந்தாத போலியான உணர்வுகளிலே மக்கள் நீந்த விடப்படுகின்ற னர். அதனால் அவர்களின் தொழிற்பாட்டு வினைத்திறன் பாதிக்கப்படு கின்றது. ஆக்கச் சிந்தனைகள் முறியடிக்கப்படுகின்றன. முன்னேற்றத்தை ஈட்டிக்கொடுக்க முடியாத போலியான வீர வணக்கத்துடன் வாழும் நிலைக்கு இளைஞர்கள் தள்ளப்படுகின்றனர். சினிமாவின் கலைப் பெறுமானங்களைக் கண்டறிய முடியாதவாறு வர்த்தக சினிமாவின் இரும்புக் கரங்கள் நீண்டு செல்கின்றன.

வளர்முக நாடுகளின் சூழலியற் பிரச்சினைகளுள் தொலைக் காட்சித் தொடர்கதைகளின் மேலாதிக்கம் முக்கியமாகச் சுட்டிக்காட்டப் பட வேண்டியுள்ளது. வர்த்தக சினிமாவின் நீட்சியாக அவை அமைந்து வருகின்றன. நடப்பியல் வாழ்வுடன் ஒட்டாத போலிக் கற்பனைகளுடன் அவை மெருகேற்றப்படுகின்றன. கதையை நீட்டிச் செல்ல வேண்டும் என்பதற்காகப் பொருந்தாத கற்பனைகள் சொருகப்படுகின்றன.

சரியானவற்றையும் தவறானவற்றையும் பகுத்தறியும் கல்விமுறை வளர்முக நாடுகளில் உரிய முறையில் வளர்ச்சி கொள்ளாதிருத்தலும் அவலங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் அடிப்படையாகின்றன. கருத்தியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(Ideological)* தெளிவற்ற பொறிமுறையான கல்விமுறை சூழல் நெருக்கடிகளோடு இணைந்து கொள்கின்றது.

சூழலியல் உளவியல் என்பது சூழற்கேடுகளை அணுகுவதுடன் மட்டும் நின்றுவிடுதல் இல்லை. கேடுறுத்தப்படும் நிலவரங்களை மாற்றியமைக்கும் நடத்தைகளை இனங்கண்டு வலுவூட்டுதலும் சூழலியல் உளவியலில் இடம்பெறுகின்றது. பிரச்சினைகளூடே மனிதர் நிகழ்ந்தும் ஊடுதலையீடுகளைக் *(Interventions)* கண்டறிதலும் சூழலியல் உளவியலில் முன்னெடுக்கப்படுகின்றது.

வளர்முக நாடுகளின் சூழலியற் பிரச்சினைகளோடு அந்த அந்த நாடுகளுக்குரிய மொழிப் பிரச்சினைகள், இனத்துவ முரண்பாடுகள், சமய முரண்பாடுகள் முதலியனவும் ஒன்றிணைந்து கொள்கின்றன. பொதுவான பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் தேசிய நோக்கில் அணுகப் படாது இனத்துவ மற்றும் மதத்துவ மேலாதிக்கத்தோடு அணுகப்படு தலும், தேசிய முதலாளிய நலன்களோடு நோக்கப்படுதலும் மேலும் சிக்கலான நிலைகளை உருவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.
# போரும் சூழலியல் உளவியலும்

போர்களே சூழலையும், மனித மனங்களையும் அதிக பாதிப்புக் களுக்கு உள்ளாக்குகின்றன. இயற்கைச் சூழல் மனிதர் உருவாக்கிய சூழல் ஆகிய இரண்டையும் போர்கள் ஒரேநேரத்தில் அழிவுகளுக்கு உள்ளாக்குகின்றன.

அரசியல் அலகுகளினால் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படும் வன்செயலே போர் என்று பொதுவாக விளக்கப் படுகின்றது. *(Bull, 1977,184)* அதாவது போர் என்பது ஒரு வகை வன்செயலே. அந்த வன்செயலோடு நேரடியாகவும், மறைமுகமாகவும் சூழல் பாதிப்படையும். மனிதமனங்கள் உடனடியான பாதிப்பை அடையும், நீண்டகாலத் தாக்கங்களுக்கு உள்ளாகும்.

நவீன போர்க் கருவிகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்துமாறு உருவாக்கப்பட்டு வருகின்றன. சூழலை மீளமைக்க முடியாத அளவுக்கு அவை அழிவுகளை ஏற்படுத்தக் கூடியவை. அதேவேளை பொது மக்களைக் கூடுதலாக ஈடுபடுத்தப்படக் கூடிய உளவியல் நுட்பங்களும் போர் முறைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. "அவர்களுக்காக நடத்தப்படும் போர்" *(War in Their Name)* என்ற உளவியற் போர்வைக் குள் மக்கள் கொண்டுவரப்படுகின்றனர்.

வன்செயலுக்கு *(Violence)* உரிய ஏகபோக உரிமையைத் தேசிய அரசுகளும் வல்லரசுகளும் நிறுவ முற்படுகையிலே போர்கள் மேலெழு கின்றன. அத்தகைய உரிமை சூழலின் முக்கியத்துவத்தையும் மனித மனங்களின் முக்கியத்துவத்தையும் கீழே தள்ளி வீழ்த்தி விடுகின்றது.

வன்செயலுக்குரிய ஏக, போக உரிமையானது வர்க்க விடுதலை இயக்கங்களின் நீதிக்கான புரட்சி, எதிர்ப்பமைவு *(Resistance)* இயக்கங்கள் முதலியவற்றை அழித்துவிடவும் முயற்சிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலின் அழிவையும் மனித மனங்களின் சிதறலையும் ஏற்படுத்தக் கூடிய அணுஆயுதங்கள் இரசாயன ஆயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள் என்ற வகையிலே உருவாக்கம் நிகழ்ந்த வண்ணமுள்ளன. அவ்வகை ஆயுதங்கள் பற்றிய தகவல்களே பயமூட்டுவதற்குப் போதுமானவை என்று குறிப்பிடப்படுகின்றது.

அதிக வேகத்துடன் அவை கதிரியக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும். சூழலை நச்சுக் கவிப்புக்குள் கொண்டுவந்துவிடும். எதிர்பாராத நோய்களைப் பரந்த அளவிலே உருவாக்கி விடும். அத்தகைய ஆயுதங்களுக்குரிய கட்டுப்பாடுகளும் தடைகளும் இருந்தாலும் அவற்றின் உற்பத்தி தொடர்ந்த வண்ணமுள்ளது.

மனித வளமும் நிதிவளமும் போர்களுக்கு ஒதுக்கப்படும் வேளை அவற்றுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இயற்கை வளங்கள் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படும். மனித உரிமை மீறலும், போர்களோடு சம்பந்தப்படாதவர்கள் தாக்கங்களுக்கு உள்ளாதலும் உளவியல் நெருக்கீடுகளை உருவாக்கும்.

அண்மைக்காலங்களில் "புதிய போர்கள்" என்பவை பரவலாக இடம்பெற்றன. சமநிலை குலைந்த *(Asymmetrical)* போர்கள் அப்பிரிவில் உள்ளடங்கும். உள்நாட்டுப் போர்கள் மற்றும் வறிய நாடுகள் நிகழும் போர்கள் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும்போர்கள் ஆகியனவும் இப்பிரிவில் இடம்பெறும். வளர்முக நாடுகளின் சூழலியல் உளவியலில் இத்தகைய போர்கள் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும்.

வேறு பிரித்தறியப்படாது பொதுமக்கள் துன்புறுத்தப்படுதலும் கொல்லப்படுதலும் உளவியற் பயத்தை அதிகரிக்கச் செய்யும். அவ்வாறே வேறு பிரித்தறியப்படாது கட்டடங்களும் சூழலும் அழிக்கப்படுதல் உண்டு. உத்தரவுகளுக்குக் கீழ்படிய வைத்தல் போரின் ஒரு முக்கியமான செயற்பாடு. எவற்றையும் திறனாய்வு செய்யாது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து செயற்படுதல் இராணுவத்தினருக்குரிய செயற்பாடாகின்றது. அது பொதுமக்களுக்கும் பொருந்தும் அந்தச் செயற்பாடு மனச்சான்றை உறுத்துவதாகவும் அமையும். அவை போர்க்காலத்திலும் போருக்குப் பின்னரும் நீடித்த உளத்தாக்கத்தை உண்டாக்கும்.

போர்கள் மனிதாபினமானத்தை நிராகரித்து விடும். எதிர்மானிடப் படுத்தல் போரின் ஒரு முக்கியமான சமூக விளைவாகவும் உளவியல் விளைவாகவும் அமைகின்றது. எதிர்மானிடப்படுத்தல் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்மறையான குணவியல்புகளை மனிதரிடத்தே ஏற்படுத்தி விடுதலாகும். எதிர்மானிடப்படுத்தல் போன்று எதிர்ச் சூழற்படுத்தலும் போர்களினால் நிகழத்தப்படுகின்றன. இயற்கை மற்றும் மனிதச் சூழலின் இயல்புகளை நிலைக்குலைத்தலும், கேடுறுத்தலும் எதிர்ச் சூழற்படுத்தலாகின்றது.

தண்போர் *(Cold War)* காலத்தில் அணுஆயுத உற்பத்தியையும் பரிசோதனைகளையும் அமெரிக்க மற்றும் சோவியத் வல்லரசுகள் பெருமளவில் மேற்கொண்டன. சமுத்திரச் சூழல் மாசுபடுவதற்கும் வடமுனைவுப் பனிப்படலங்கள், மாசுபடுவதற்கும் அவை வழிவகுத்தன. உளவியல் நிலையில் சோவியத் மக்களும், அமெரிக்கர்களும் ஒருவரை ஒருவர் எதிர்நிலையாக நோக்குவதற்கும் வழிவகுத்தது. தண்போர் முடிவுக்கு வந்தாலும் அணுஆயுத உற்பத்தி முடிவுக்கு வரவில்லை. இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகள் தொடர்ந்தும் அணு ஆயுதப் பரிசோதனையில் ஈடுபட்டு வருகின்றன. சீனா தனது அணுஆயுத பலத்தை ஐக்கிய அமெரிக்கா மற்றும் ரூசியா போன்று தொடர்ந்து முன்னேற்றம் பெறச் செய்து வருகின்றது.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆறாம் நாள் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஹரிரேர்மனின் உத்தரவுப் படி ஜப்பானின் ஹிரோசிமாவி லும் நாகசாக்கியிலும் அணுக்குண்டுகள் வீசப்பட்டன. ஹிரோசிமாவில் 1,40,000 மக்களும் நாகசாக்கியில் 80,000 மக்களும் கொல்லப்பட்டனர். அணுக்கதிர் வீச்சினால் தொடர்ந்து மக்கள் நோய்க்கும் இழப்புக்கும் உள்ளாகி வருகின்றனர். யப்பானின் சூழலியலில் அவற்றின் தாக்கம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

சமகாலத்தைய போர்களைப் பற்றி ஆராய்வோர் சமநிலையற்ற போர்களின் இயல்புகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். *(Nigel Dower, The Ethics of War and Peace, Cambridge, Polity, 1970)* அதாவது சமநிலை யற்ற இராணுவ பலத்தோடு நிகழ்த்தப்பட்டவையாக அவை அமை கின்றன. போரின் போது பொது மக்கள் மீது தாக்குதல் நடந்த நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன.

சமகாலப் போர்களைப் "பின்னவீனத்தும்" என்று அழைக்கும் மரபு காணப்படுகின்றது. ஓரங் கட்டப்படும் நிலையை அடியொற்றியும் பன்மை நிலைகளை அடியொற்றியும் அந்தக் கருத்து முன்வைக்கப்பட் டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலப் போர்களில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள் மீறப்படுதலும் சுட்டிக் காட்டப்படுகின்றது. *(P.171)* நியமங்கள் மீறப்படுதல் உளவியல் அடிப்படையிலே பயத்தை ஏற்படுத்தவல்லது. பாதுகாப்பு இன்மை பற்றி பற்றிய பயம் ஏற்படும். பாதுகாப்பு எல்லைகளும் மீறப்படுதல் உண்டு.

நடப்பியல் *(Realism)* அனைத்துலகவியல் *(Internationalism)*, பன்முகத் தோற்றவியல் *(Cosmopolitanism)* முதலாம் கோட்பாடுகளின் அடிப்படையில் போர்கள் நோக்கப்படுதல் உண்டு. அரசுகள் பலயீன மான நிலையில் அவற்றைப் பலப்படுத்த வேண்டுமென நடப்பியலாளர் வலியுறுத்துவர். அதேவேளை உலக நோக்கை அனைத்துலகவியல் வலியுறுத்துகின்றது. பின்னவீனத்துவம் படைக்கல முரண்பாடுகளைத் தவிர்க்க நாடுகளுக்கிடையேயான சிவில் சமூக அமைப்புக்களைப் பலப் படுத்தல் வேண்டுமென்று பன்முகத் தோற்றவியல் வலியுறுத்துகின்றது.

அரசுகளைப் பலப்படுத்தல் வேண்டுமென்ற நடப்பியற் கருத்தியல் குறித்த ஆள்புலத்தினுள்ளே வாழும் இனங்களுக்கிடையிலான சமத்துவம் ஐக்கியம் முதலியவற்றை உள்ளடக்கியது. அதேவேளை நாடுகளின் சுற்றாடலைப் பாதுகாத்தலுடனும் இணைந்தது.

11052

அப்பாவிகளின் உடல் உள நலங்களைப் பாதுகாத்தல், பாதுகாப்புக் குரிய இடங்களைப் பாதுகாத்தல் முதலியவை மனிதாபிமான ஊடுதலை யீடுகளால் *(Human itarian Interventions)* மேற்கொள்ளப்படுகின்றன. அரசுகளின் அனுமதியை மீறியும் அவை செயற்படுதல் உண்டு. அந்த நடவடிக்கை அரசுகளின் இறையாண்மையைப் பாதிப்படையச் செய்கின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. ஆயினும் மானிதாபிமானமே அரச அதிகாரத்தைக் காட்டிலும் முக்கியமானது என்ற எதிர்க் கருத்தும் முன்மொழியப்படுகின்றது.

பாதுகாப்பு என்ற கருத்தியல் ஆரம்ப காலங்களில் இரண்டு பரிமாணங்களைக் கொண்டிருந்தது. ஒன்று மனிதரின் பாதுகாப்பு மற்றையது அரசுகளின் பாதுகாப்பு. அண்மைக் காலமாகப் பாதுகாப்பு என்பது சூழற் பாதுகாப்பையும் உள்ளடக்கியுள்ளது. சமத்துவம், சமகணிப்பு, சமநீதி, விட்டுக்கொடுப்பு முதலியவை பாதுகாப்பை எட்டுவதற்கு அடிப்படையானவையாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. அனைவரதும் ஒத்துழைப்பு பாதுகாப்பு இன்றியமையாதது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1994 ஆம் ஆண்டில் வெளியிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையில் மனிதப் பாதுகாப்பின் பல்வேறு பரிமாணங்களையும் சுட்டிக்காட்டியுள்ளது. அதில் சூழலியல் நிலவரங்களும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

மனிதப் பாதுகாப்பு, பொருண்மியப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, உடல் நலப்பாதுகாப்பு, தனிநபர் பாதுகாப்பு, சமுதாயப் பாதுகாப்பு, அரசியற் பாதுகாப்பு, சூழலியற் பாதுகாப்பு என்றவாறு பாதுகாப்பின் பரிமாணங்கள் விபரித்துக் கூறப்பட்டுள்ளன. அதேவேளை மனிதப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் பொழுது ஏனைய பாதுகாப்புக்களும் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

போரும் சூழலியல் உளவியலும் பற்றிய சிந்தனையில் மனித அறவொழுக்கங்களும் விழுமியங்களும் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படு கின்றன. தனித்து விழுமியங்களால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்பது தவறாகின்றது. விழுமியங்கள் தொழிற்படு வதற்குரிய நிறுவகைக் கட்டமைப்புக்களும், சமூக இருப்பும் சாதகமான நிலையில் இருத்தல் முக்கியமானது. போர்ச் சூழலில், சூழலியற் பாதுகாப்பு மற்றும் உளவியற் பாதுகாப்பு முதலாம் செயற்பாடுகள் தொடர்பான அரசு சாராத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு சிறப்பான நோக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றது. அதேவேளை உள்ளார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொழிற்படும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் தொழிற்பட்ட வண்ணமுள்ளன.

இலங்கையில் நிகழ்ந்த முப்பது ஆண்டுக்கால உள்ளூர்ப் போரும் சூழலியற் பாதிப்புக்களும், உளவியல் நெருக்கீடுகளும் எண்ணளவு நிலையிலும் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளன. கள ஆய்வுகளும் கள நிலவரங்களும் என்ற வகையில் விரிவான தகவல்கள் திரட்டப்பட வேண்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

239505

# 6.
# இருத்தலியமும் உளவியலும் சூழலும்

இருத்தலியம் *(Existentialism)* என்ற மெய்யியலை மொழிந்தவர்களுள் ஜஸ்பேர்ஸ், கிர்கேகார்ட், நித்சே, ஹஸ்ரெல், ஹிய்டியெர், சாத்ரே முதலியோர் சிறப்பிடம் பெறுகின்றனர்.

இருத்தலியம் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. தனியாள் ஒவ்வொருவரதும் அனுபவங்கள் அகிலப் பொது அனுபவங்களைக் காட்டிலும் தனித்துவமானவை.
2. மனித அனுபவங்கள் விளக்கவோ விபரிக்கப்படவோ முடியாதவை.
3. ஒவ்வொருவரது செயல்களுக்கும் அவரவர்களே பொறுப்பாளிகளாகின்றனர். தமக்குரிய நிலையிலும் பிறர்க்குரிய நிலையிலும் அவர்களே பொறுப்பாளிகளாகின்றனர்.
4. தமக்குரிய தீர்மானங்களுக்கு ஒவ்வொருவரும் தாமே ஏற்புடைவராகின்றனர்.
5. அறிவியலிலே குறிப்பிடப்படும் புறவய நிலை *(Objectivity)* என்பது ஒருவித மாயைத் தோற்றமே.
6. உண்மை என்பது தனியாள் அறிந்துணர்வுக்குரியது அது ஒவ்வொருவருக்குமுரியது.

ஒவ்வொருவரையும் சுயாதீனமுள்ளவர்களாகவும், தமது இருப்புக்குத் தாமே பொறுப்பானவர்களாகவும் ஆக்குதல் இருத்தலியல் உளவியலிலே சிறப்பிடம் பெறுகின்றது. உற்றுணர்வு நோக்கை ஒவ்வொருவரும் வளப்படுத்திக் கொள்ளுமாறு உதவுதல் வேண்டும். அன்பும் கருணையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க செயல்களினூடே ஒவ்வொருவரும் தனித்துச் செல்லல் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

மனிதராயிருப்பவர்கள் ஒவ்வொருவரும் பதகளிப்பை எதிர் கொள்வதற்கு உதவுதல் வேண்டும். பதகளிப்பு என்பது வாழ்க்கையுடன் இணைந்த ஒரு பகுதியாகவுள்ளது. அது தவிர்க்கப்பட முடியாதது.

பயத்தைக் காட்டிலும் பதகளிப்பு அடிப்படையானது. பயத்துடன் இணைந்த பதகளிப்பை நீக்குதற்கு உதவுதல் உளவியலாளரின் செயற்பாடாகின்றது. சாதாரண இருப்புடன் சேர்ந்த பதகளிப்புடன் ஒவ்வொரும் வாழப்பழகிக் கொள்ளல் முக்கியமானது.

பதகளிப்பும் உள்ளார்ந்த நெருக்கீடுகளும் உளவியலாளரின் கவனயீர்ப்பைப் பெறுகின்றன. பதகளிப்பின் வழியே நான் என்ற அனுபவம் குவியப்படுத்தப்படல் வேண்டும். "நானே வாழ்கின்றேன் நானே அனுபவிக்கின்றேன். நானே எனது இருப்பைத் தேடிக் கொள்கின்றேன்" என்பவை சிறப்பு நோக்கினுக்குரியவை.

இருத்தலியல் நோக்கில் ஒருவரது இருப்பு என்பது அவரது பொருளாதார அந்தஸ்தினாலோ சமூக அந்தஸ்தினாலோ தீர்மானிக்கப் படுதல் இல்லை. ஒருவர் மேற்கொள்ளும் வாழ்க்கையின் இயல்பினாலும் அது தீர்மானிக்கப்படுதல் இல்லை. அனைத்தும் நழுவிப் போனாலும் ஒருவர் தான் என்ற உணர்வைப் பராமரித்துக்கொள்ள முடியும்.

இருப்பும் இன்மையும் பற்றிய உணர்வுகள் இருத்தலியலில் வலியுறுத்தப்படுகின்றன. இறப்புப் பற்றிய பயம், அழிவுகள் முதலியவை இன்மை நிலையைப் புலப்படுத்துகின்றன. அவை பதகளிப்பையும் நோயையும் உண்டாக்குகின்றன. இன்மை *(Non Being)* பற்றிய பயம் என்றும் நிலைத்திருக்கின்றது.

தனியாளின் உயிர்வாழ்தலுக்கான போராட்டமும், உயிர்வாழும் தேவையும் பதகளிப்பை ஏற்படுத்துகின்றன. சூழலுக்கு ஏற்றவாறு விகித சமப்படி நிகழும் தொழிற்பாடுகளில் இருந்து சாதாரண இருப்பும் சாதாரண குற்றவுணர்ச்சியும் தோற்றம் பெறுகின்றன. அத்தகைய பதகளம் ஆக்கமலர்ச்சியை நோக்கி இட்டுச் செல்லப்படக் கூடியது. உள்ளத்தில் அழுத்தி வைக்க வேண்டிய தேவையை அது உருவாக்க மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலோடு விகிதசமம் கொள்ளாத குற்றவுணர்ச்சி உளநோயை உண்டாக்கவல்லது. அது ஆழ்ந்து அடக்கி வைக்கும். அது ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தக்கூடியது. அத்துடன் ஆக்கத்திறன் மலர்ச்சி யையும் அது ஏற்படுத்தமாட்டாது அவ்வகை உளக்கோலம் விடுகற்பனை களையும் *(Fantasis)* உருவாக்கும். மேலும் அசாதாரண மனவிகாரங் களையும் தோற்றுவிக்கும்.

சாதாரண குற்றவுணர்ச்சி நரம்பியல் இடர்ப்பாடுகள் கொண்ட குற்றவுணர்ச்சி *(Guilt)* இருத்தலியம் சார்ந்த குற்றவுணர்ச்சி என்ற மூன்று நிலைகள் விளக்கப்படுகின்றன. சூழலோடு விகிதசம இசைவு கொண்டது சாதாரண குற்றவுணர்ச்சி, விகிதசமம் கொள்ளாத இடர்நிலைக்குரியது. உளநோயை உண்டாக்கும் நரம்பியல் சார்ந்த குற்றவுணர்ச்சி, இருத்தலியம் சார்ந்த குற்றவுணர்ச்சி தனித்துவமான இயல்புகளைக் கொண்டது. மனிதரின் உள்ளார்ந்த ஆற்றல்கள் தடைப்படும் பொழுது அல்லது ஒடுக்கப்படும் பொழுது எழும் உணர்வு இருத்தலியம் சார்ந்த குற்றவுணர்ச்சி எனப்படும்.

கடந்த காலத்தை அனுபவங்கள் அனைத்தினதும் கூட்டு மொத்த மான வடிவமாக அமைவதுதான் உலக நிலைவரம். அதன் அடிப்படை யாகவே மனித இருத்தல் தீர்மானிக்கப்படுகின்றது. அவற்றின் செல்வாக்கும் அவற்றை ஒருவர் பயன்படுத்திக் கொள்ளும் விதமும் அவரவர் அர்த்தங்களின் பாற்படும்.

உலகு பலவாறு பிரித்தறியத்தக்கது. சூழலியல் உலகம், பொருள் சார்ந்த உலகம், இயற்கை உலகம் என்று பிரித்தறியப்படும். தனிநபர் ஒருவரைச் சூழ்ந்துள்ள உலகம் எனப்படும். ஒருவரின் தன்னிலை *(Self)* யோடு தொடர்புடையது அவருக்கே உரிய உலகம், தன்னிலை உணர்வு, தன்னிலைச் சார்பு, உலகு பற்றிய அர்த்தத்தைக் கிரகித்துக் கொள்ளல் முதலியவை அவருக்கே உரிய உலகுடன் தொடர்புடையவை.

அவருக்கே உரிய உலகில் மட்டுப்பாடுகள் காணப்படும் பொழுது, உடனான உலகில் *(With World)* வெற்றிடங்கள் தோற்றம் பெறும். உடனான உலகு என்பது பிறருடனான ஆளிடைத் தொடர்புகளினாலும், அன்பு, பாசம், காதல் முதலியவற்றாலும் தோற்றம் பெறுகின்றது. உண்மையான அன்பும் காதலும் உண்மையான தனிமனிதப் பண்புகளை உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் என்ற விடயம் இருத்தலியத்தில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. பதகளிப்பு, மனக்கவலை, மகிழ்நிலை இன்பம் ஆகியவை நேரத்துடன் தொடர்புடையவை. நேரத்தோடு தம்மை இணைத்துக் கொள்ள முடியாதவர்கள் எதிர்காலத்தோடு இணைய முடியாதவர்களாகி விடுகின்றனர். ஒவ்வொரு நாளையும் அவர்கள் ஒன்றிணைக்க முடியாத தனித்த துண்டங்களாகவே கருதுவர். இறந்த காலமும் எதிர்காலமும் தொடர்பான குழப்பமான நிலைகள் அவர்களிடத்திலே காணப்படும்.

நேரத்தை இணைக்கும் ஆற்றல் மனிதர்களுக்கே உரிய சிறப்பான இயல்பாகக் காணப்படுகின்றது. வெளியில் *(Space)* அல்லது விசும்பில் மனிதர் தொலைந்துவிடாமலிருப்பதற்கு நேரமே துணை நிற்கின்றது. ஆனால் அனைத்து அனுபவங்களையும் நேரத்தினால் அளவீடு செய்ய முடியாது அகவுணர்வுகள் நேரத்தின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற் பட்டவை. எதிர்காலம் தொடர்பான கவர்ச்சி கொள்ளாதவர்கள் இறந்த காலத்தை உயிர்ப்புடன் நோக்கமாட்டார்கள். அதாவது இறந்தகாலம் பற்றிய உயிர்ப்பு உணர்வு அற்றநிலை கவர்ச்சியற்றதாகி விடும். சமகாலத்தில் யாதாயினும் மாற்றங்களைச் செய்ய முற்படும் பொழுது எதிர்காலம் பற்றிய நம்பிக்கை மேலெழும்.

இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் கடத்தல் இருத்தலில் முக்கியத்துவம் பெறுகின்றது. இயலுமானவற்றைப் பற்றிய சிந்தனையே ஆழ்ந்த நிலையான ஆக்கமாகின்றது. இயலுமான செயல்கள் பற்றிச் சிந்திக்க முடியாமை குறிப்பிட்ட எல்லைகள் மற்றும் மட்டுப்பாடுகள் தொடர்பான பயமுறுத்தல்களுக்கு உள்ளாகும் நிலையை ஏற்படுத்தும், இயலுமான அனுபவங்கள் பற்றிச் சிந்திக்க முடியாமை விடுதலையை இழக்கும் நிலையை உருவாக்கும்.

தனிமனிதருக்கும் இருத்தலுக்குமிடையேயுள்ள மோதல்களை இருத்தலியல் ஆழ்ந்து நோக்குகின்றது. வாழ்தலுக்கும் சாதலுக்கு மிடையே முரண்பாடு நிகழ்ந்த வண்ணமுள்ளது. இறப்பை ஆழ்ந்த நிலையிலே நோக்காதவிடத்து மனவெழுச்சிக் குழப்பங்கள் ஒருவரி டத்தே தோற்றம் பெறும். இறப்பு என்பது பயங்கரமான காட்சியாக உருவெடுக்கும். விடுதலை என்பது இறப்பினால் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

மற்றவர்களிடமிருந்தும் ஆளிடைத் தொடர்களில் இருந்தும் ஒருவர் தம்மைப் பிரித்துக் கொள்ளல் தனிமைப்பாட்டை ஏற்படுத்தும், அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திறன்களின் போதாமையை எடுத்துக்காட்டும், சகவாழ்வு தொடர்பான உளவியற் பயமும் அதன் அடிப்படையில் மேலெழும். அதேவேளை "இருத்தல் தொடர்பான தனிமைப்பாடு" என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. அதுவே ஒவ்வொருவருக்குமுரிய அடிப்படையான தனிமைப்பாடு ஆகின்றது. அத்தகைய தனிமைப்பாடே பிறரிடமிருந்தும் உலகில் இருந்தும் ஒருவரைப் பிரித்து வைத்து விடுகின்றது.

பிறரிடம் கலந்து பகிர்ந்துகொள்ள முடியாத சில விடயங்கள் இருக்கின்றன. அந்த விடயத்துக்கு இருத்தல் வாதம் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. அதனை அடியொற்றியே "அடிப்படையான தனிமைப்பாடு" *(Fundamental Loneliness)* தோற்றம் பெறுகின்றது. இருத்தல் வாதத்தில் இது ஒரு முக்கியமான கருத்தாக்கமாகவுள்ளது. இறப்புப் பற்றிய அனுபவம் அடிப்படையான தனிமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடப்படுகின்றது.

இறப்புப் பற்றிய பயமும் தனிமைப்பாடும் பிறருடன் ஆழ்ந்து உறவாடுவதற்குரிய தடைகளாகவுள்ளன. தமது இருப்பின் மீதே சிலர் ஐயுறவு கொள்ளும் நிலை ஏற்படுகின்றது.

வாழ்வின் அர்த்தமற்ற நிலை பின்வரும் வினாக்களை மேலெழச் செய்கின்றது.

1. வாழ்க்கையானது எத்தகைய ஏற்புடைய அர்த்தத்தைக் கொண்டுள்ளது?
2. நாம் ஏன் வாழ்கின்றோம்?
3. நாம் எப்படி வாழ்கின்றோம்?
4. ஒவ்வொருவரும் தம்மை முதன்மைப்படுத்தி உருவாக்கிக் கொள்ளும் அர்த்தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குப் போதுமானதா?
5. ஒருவித அர்த்தமும் இல்லாத பிரபஞ்சத்திலிருந்து ஒருவர் எவ்வாறு அர்த்தத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்?

பலநிலைகளிலே கவனயீர்ப்பைப் பெற்றுள்ள இருத்தல் வாதம் உளவியலிலும் சீர்மிய நடவடிக்கைகளிலும் ஆழ்ந்து நோக்கத்தக்க ஓர் உசாத்துணைச் சட்டமாக *(Frame of Reffrence)* அமைந்துள்ளதேயன்றி அது ஓர் உளவில் முறைமையன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இருத்தலியல் சிந்தனைகளின் உருவாக்கத்துக்கு வலுவூட்டின. போர்களும் அவற்றால் நிகழ்ந்த அவலங்களும் மனித இருத்தல் நிலைகளைத் தேடின. கைத்தொழிலாக்கமும் நகர வளர்ச்சியும் தனிமனித நிலையில் அன்னிய மாதலை வருவித்தன. தனிச் சொத்துரிமையின் குவிப்பும் சுரண்டலுக்கு உள்ளான தனிமனித உள்ளங்களும் எழுகோலம் கொண்டன.

அவற்றை மார்க்சியம் சமூகநிலைவரங்களை அடியொற்றி விளக்கியது. இருத்தல் வாதம் மனிதரைத் தனித்த அலகாகக் கருதிச் சிந்தனைகளை முன்வைத்தது.

மனித இருத்தலையும் சூழலையும் தொடர்புபடுத்தி பதகளிப்பு நிலையை விளக்குதல் இருத்தலியற் சிறப்புப் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.
# சூழலியல் வாதம்

சூழலியல் வாதம் என்பது பரந்த தரிசனத்தைக் கொண்டது. கருத்தியற் பின்புலம், மெய்யியல் மற்றும் உளவியற் பின்புலம் ஆகியவற்றை அது உள்ளடக்கியது. மனிதரை மட்டுமன்றி மனிதம் சாராதவற்றையும் அது உள்ளடக்கியது. சூழலைப் பாதுகாத்தல், பராமரித்தல், முன்னேற்றம் பெறச் செய்தல் முதலியவை சூழலியல் விரிவில் உள்ளடங்குகின்றன.

உயிர்ப் பன்மையைப் பாதுகாத்தல், தாவரங்கள் மற்றும் விலங்குகளை அழிவிலிருந்து காப்பாற்றுதல் முதலியவை கருத்தியலுடன் *(Ideology)* இணைந்தவையாகும். சூழலை இலாப நோக்கிலே மூர்க்கத் தனமாகச் சுரண்டும் செயற்பாடுகளில் இருந்து பாதுகாக்கும் கருத்தியல் அமைவு முக்கியமானதாகும்.

மனிதருக்கும் பலவகையான இயற்கை நிலைவரங்களுக்குமிடையே சமநிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அனைத்துக் கூறுகளிலும் பராமரிப்பு நிலையை ஏற்படுத்துதல் பெருமளவிலான கைத்தொழிற் கழிவுகளினால் சூழல் பாதிப்படையத் தொடங்கியது. 1863 ஆம் ஆண்டில் இத்துறையில் முதன்முதலான சட்டவாக்கம் பிரித்தானியாவில் நிகழ்ந்தது.

ஜோன் ரஸ்கின், வில்லியம் மொறிஸ், எட்வேட்காப் பென்டர் முதலியோர் இயற்கையின் முக்கியத்துவத்தை விளக்கும் எழுத்தாக்கங் களை மேற்கொண்டனர். "இயற்கைக்குத் திரும்புங்கள்" என்ற கருத்தை அவர்கள் முன்னெடுத்தனர். இந்தியச் சூழலில் மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர் முதலியோர் அத்தகைய கருத்தை மீளவலியுறுத் தினர். இயற்கை வாதம், மற்றும் ரொமான்ரிசம் எனப்படும் உளக்கவர்ச்சி வாதம் முதலியனவும் மாசுபடா இயற்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை அடியொற்றிய சூழலியல் இயக்கங்களும், நிறுவனங்களும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் உருவாக்கம் பெற்றன. வட்டார நிலை, நாட்டுநிலை, அனைத்துலக நிலை என்ற மட்டங்களில் அவை செயற்படத் தொடங்கியுள்ளன.

1972ஆம் ஆண்டில் மனிதச் சூழலியல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு ஸ்ரொக்கோம் நகரிலே கூட்டப்பட்டது. நூற்றுப் பதின்னான்கு நாடுகள் அதிலே பங்கு கொண்டன. அந்த மாநாட்டை அடியொற்றி ஐக்கிய நாடுகள் சூழலியல் நிகழ்ச்சித் திட்டம் *(UNDP)* உருவாக்கம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மேலும் முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் 1992 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்டன. வேறு பல நிறுவனங்களுடன் இணைந்து பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டன.

எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், வினைப்பாட்டாளர்கள், உயிரியல் வல்லுனர்கள், சமூக விஞ்ஞானிகள் முதலியோர் இத்துறையிலே தீவிர கவனம் செலுத்தலாயினர். பில்ரட்போட் என்பார் சூழலியல் தலைவர் என்ற நிலையில் அமர்த்தப்பட்டார்.

சூழலியல் தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகள் இடம்பெறத் தொடங்கின. மாசுபடலுக்கு எதிரான எதிர்ப்பு ஊர்வலங்கள், செயற் பணிகள் முதலியவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பூமிநாள், பூமியே முதல், எமது காடுகளைக் கைவிடுங்கள், காலநிலை சீர்கேடுகளை உருவாக்குதலைக் கைவிடுங்கள், ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளை நிறுவுதற்குரிய எதிர்ப்பு இயக்கம், விலங்குகளைப் பாதுகாக்கும் இயக்கம், நீர்நிலைகளைப் பாதுகாக்கும் இயக்கம் முதலியவை தோற்றம் பெற்றன.

சூழற் பாதுகாப்பிலே வளர்முக நாடுகள் தனித்துவமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அரசியலாளரின் ஆதரவுடன் சூழலைக் கொள்ளையிடுதல் தொடர்ந்த வண்ணமுள்ளது. பிரேசில் நாட்டிலுள்ள அரிய வகையான காடுகளும் மூலிகைகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. 1998 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப் பட்ட காலத்தில் மட்டும் 12204 கிலோ மீட்டர் நீளத்துக்குக் காடுகள் அழிக்கப்பட்டு விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளங்களை ஆக்கிரமித்தல், கனியவளங்களைக் கொள்ளையிடுதல் முதலிய செயற்பாடுகள் பரந்த அளவிலே நிகழ்த்தப்படுகின்றன. சூழலியற் கரிசனையின்றி மேற்கொள்ளப்படும் கட்டுமானங்களும், நீர்மின்வலு பிறப்பாக்கும் அணைகளின் உருவாக்கலும் நிலவழுக்குகை போன்ற பல்வேறு எதிர் விளைவுகளை உருவாக்கு கின்றன. இலாபநோக்கின் பொருட்டுச் சூழலைச் சூறையாடலைச் சூழலியல் வாதிகள் தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றனர்.

சமூகத்தின் இயல்புகள் சூழலின் மீது தாக்கங்களை ஏற்படுத்தி வைக்கின்றன. சூழலியற் பிரச்சினைகளைச் சமூகம் எவ்வாறு எதிர் கொள்கின்றது என்பதும் சமூகத்தின் இயல்பைப் பொறுத்த செயற்பாடா கின்றது. அவற்றின் தொடர்ச்சியாக "அரசியல் முதலாளியம்" *(Political Capitalism)* என்ற கருத்தாக்கம் மேலெழுந்தது.

சூழலியலைச் சமூக அரசியல் நோக்கிலே ஆராயும் முறைமைகள் வளர்ந்தன. அரசு, மூலதனம், உழைப்பு என்ற முத்தரப்பும் இணைந்த உற்பத்தி முறைமை சூழலியல் தாக்கங்களை ஏற்படுத்துதல் குறித்து ரைக்கப்பட்டது. தனியுரிமை முதலாளியம் வளர்வதற்குரிய அரசியல் ஆதரவும் பல தளங்களிலும் பலநிலைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சூழலியல் வாதத்தின் எழுச்சியோடு தொடர்புடைய இரண்டு சிறப் பான கருத்தாக்கங்கள் அண்மைக் காலத்தில் எழுச்சி கொண்டுள்ளன. அவை:

1. சூழலியல் நவீனத்துவம்

2. ஆக்கத்தெறிப்பு நவீனத்துவம் *(Reflexive Modernisation)*

பொருளாதார வளர்ச்சியையும் சூழலியற் பாதுகாப்பையும் வேறு வேறாக நோக்காது, ஒன்றை மற்றையது பாதிக்காத வண்ணம் முன்னெ டுத்தலைச் சூழலியல் நவீனத்துவம் வலியுறுத்துகின்றது. மீள் சுழற்சியை ஏற்படுத்துதல், இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்துதல், சூழலிய லைப் பாதிப்புறச் செய்யாத கைத்தொழில் முயற்சிகளை உருவாக்குதல், பராமரிக்கத்தக்க அபிவிருத்தியை முன்னெடுத்தல் முதலியவை சூழலியல் நவீனத்துவத்திலே வலியுறுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனத்துவம், நவீன கைத்தொழிலாக்கம் முதலியவற்றை நிராகரித்து ஒதுக்காது, பொருத்தமான கட்டுமான அடிப்படை மாற்றங்களை மேற்கொள்ளலின் முக்கியத்துவம் ஆக்கத் தெறிப்பு நவீனத்துவத்தினால் வலியுறுத்தப்படுகின்றது. ஜேர்மனிய சமூகவியலாளர் அல்ரிச் பெக் இக்கருத்தை முதலில் முன்மொழிந்தார்.

சூழலியல் வாதம் பன்முகத் தோற்றங்களோடு வளர்ச்சியுற்று வருகின்றது. ஒருபுறம் மார்க்சிய நவமார்க்சிய அடிப்படைகளிலும் மறுபுறம் பின்னவீனத்துவ அடிப்படைகளிலும் சூழலியல் வாதம் மேலெழுந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.
# சூழல் இறையியல்

இறையியலுக்கும் சமயத்துக்குமுள்ள இடைத் தொடர்புகளைக் குவியப்படுத்தும் கல்வியாக சூழல் இறையியல் (*Ecotheology*) அமைந்துள்ளது. சூழல் நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ள சமகாலத்தில் இது மேலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.

சூழலைப் பாதுகாத்தல், சூழலில் நிகழும் சுரண்டலைக் கட்டுப் படுத்துதல், சூழல் பற்றிய சிந்தனைகளை நெறிப்படுத்துதல் முதலியவை பூர்விக வழிபாட்டு முறைகளில் இருந்து ஒழுங்கமைக்கப் பெற்ற சமயங்கள் வரை இடம்பெற்று வந்துள்ளன.

ரோசிரியர் லின்வைட் அவர்கள் 1967ஆம் ஆண்டில் "சூழலியல் நெருக்கடியின் வரலாற்று வேர்கள்" என்ற கட்டுரையை வெளியிட்டார். சூழலுக்கும் கிறீஸ்தவ சமயத்துக்குமுள்ள தொடர்புகளைச் சுட்டிக் காட்டினார். சூழல் இறையியல் தொடர்பான கருத்தாடல்கள் அதனை அடியொற்றி மேலெழலாயின. அதனைத் தொடர்ந்து கடவுள், மனிதர் சூழல் தொடர்பான மதிப்பீடுகள் ஆய்வு நிலையில் மேற்கொள்ளப் பட்டன.

இந்து சமயத்தில் சூழலுக்கும் மனிதருக்குமுள்ள தொடர்புகளும், சூழலைப் பராமரித்தல் தொடர்பான சடங்குகளும், சூழலுடன் இசைவு பட வைக்கும் செயற்பாடுகளும் பரந்த அளவிலே இடம்பெற்றுள்ளன.

சூழலுக்கு இழைக்கப்படும் தீங்கு மனிதருக்கு இழைக்கப்படும் தீங்கு என்பது இந்து மற்றும் பௌத்த சமயங்களிலே வலியுறுத்தப் பட்டுள்ளது. சூழலுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள சமநிலை பிறழும் பொழுது உடல்நலம் பாதிக்கப்படும் என்பதைச் சித்த மருத்துவம் குறித்துரைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தமானமாக இந்த உலகம் தோற்றுவிக்கப்படவில்லை. உண்மையை உணர்த்தும் பொருட்டே தோற்றுவிக்கப்பட்டது என்பதை இஸ்லாம் வலியுறுத்தி வருகின்றது.

இயற்கை மீது மனிதரின் ஆட்சியைக் கிறீஸ்துவம் வலியுறுத்தி யுள்ளது. மனிதரின் நலனுக்காக இயற்கையைச் சுரண்டலாம் என்ற கருத்து அதனடியாக முன்வைக்கப்படுகின்றது. இயற்கை மீது மனிதருக் குள்ள ஆட்சி இயற்கையைச் சீரழிப்பதற்கு அல்ல என்ற நேர் விளக்கமும் அதனை அடியொற்றித் தரப்படுகின்றது.

சூழல் தொடர்பான பிரச்சினைகள், பொருளியல், சமூகவியல், அரசியல், கண்ணோட்டங்களில் நோக்கப்படுதல் போன்று சமயக் கண்ணோட்டத்திலும் நோக்கப்படுகின்றது. அதன் பிரதிபலிப்பே சூழல் இறையியல் வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது.

மனித விழுமியங்களை உருவாக்குவதில் சமயங்கள் முக்கியமான பங்கை வகிப்பதனால் இயற்கை மற்றும் சூழல் தொடர்பான நேர் விழுமியங்களைச் சமயத்தினூடாக வளர்த்தலும், நடைமுறையில் உள்ள விழுமியங்களை வலுப்படுத்துதலும் சூழல் இயலில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

சூழல் இறைவனின் வடிவம் என்ற கருத்து குறிப்பிட்ட சில சமயங் களில் வலுப்பெற்றதாகவுள்ளது. அதேவேளை இறைவன் சூழலிலோ சூழலின் பொருட்களிலோ வியாபித்து நிற்கவில்லை என்ற மாற்றுக் கருத்தும் குறிப்பிட்ட சமயங்களிலே வலியுறுத்தப்படுகின்றது. கிறீஸ்தவத்தில் இரண்டு கருத்துக்களும் இடம்பெற்றுள்ளதாக அவ்வப்போது பொருள் கோடும் செயற்பாடுகளினூடாக விளக்கப்படு கின்றது.

மேற்கூறியவற்றின் எழுபுலத்தில் சூழல் தொடர்பான பின்வரும் சிந்தனை மரபுகள் சூழல் இறையியலிலே வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன.

(அ) சூழல் கடவுளால் உருவாக்கப்பட்டது.

(ஆ) சூழல் எங்கனும் இறை நிறைந்துள்ளது.

(இ) அது முகிழ்த்தெழுந்த வண்ணமுள்ளது. அதாவது கடவுள் சூழலிலே பொதிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்கள் அனைத்தும் பொதுவாக சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய வண்ணமுள்ளன. சூழலின் மிகவுயர்ந்த படைப்பாக மனிதரைச் சுட்டி நிற்கின்றன. மனிதரின் மேன்மையை அடியொற்றிச் சூழல் தொடர்பான பொருத்தமான இறையியல் மாதிரிகையை உருவாக்கும் செயற்பாடுகளிலும் ஆய்வாளர் முயன்று வருகின்றனர்.

அவற்றின் பின்புலத்திலே பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன.

1. மனிதர் சூழலில் எத்தகைய அழிவுகளையும் மேற்கொள்ள லாகாது.
2. மனிதர் தமது தேவையின் பொருட்டு தீண்டுதல்களையும் அழிவுகளையும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட வகையிலே பொறுப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளலாம்.
3. மனிதர் எத்தகைய கட்டுப்பாடுமின்றிச் சுயாதீனமாகத் தொழிற்படலாம்.

இறைநிலையை விட்டு மனித நிலையை அதீதமாக வலியுறுத்தும் பொழுது மேற்குறித்த மூன்றாவது நிலை தோற்றம் பெறுகின்றது.

உலக சமயங்கள் பற்றி ஆராயும் மாநாடு, 1996ஆம் ஆண்டுக்கும் 1998 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பேராசிரியர் மேரி இவிலின் ரக்கர் மற்றும் ஜோன்ஜிம் ஆகியோரால் கட்டப்பெற்றது. ஹார்வாட் பல்கலைக்கழகத்தின் உலகச் சமயங்களுக்கான கற்கை நிலையத்திலே அது இடம்பெற்றது. உலகெங்கனுமிருந்து எண்ணூறுக்கும் மேற்பட்ட சமய அறிஞர்கள் அதிலே பங்குகொண்டனர். சூழற் பாதுகாப்பு, சூழலியல் மற்றும் சூழல் இறையியல் தொடர்பான கருத்தாடல்களை முன்னெடுப்பதற்கு அந்த நடவடிக்கைகள் மேலும் விசையூட்டின.

இறையியல் என்பது பரந்த உள்ளடக்கத்தைக் கொண்டது. சமய மரபுகளை அறிதல், சமய மரபுகளுக்கு நியாயங்காணல், மரபுகளைச் சீர்திருத்தி அமைத்தல், சமகால அறைகூவல்களுக்கு முகம் கொடுக்கு மாறு வடிவமைத்தல் உலகை விளங்கிக் கொள்வதற்கும் விளக்குவதற்கும் சமய மரபுகளைப் பயன்படுத்துதல் முதலியவை இறையியலில் உள்ளடங்குகின்றன. அந்நிலையில் இறையியலின் பரப்பளவுக்குள் இயல்பாகவே சூழலியற் பிரச்சினைகள் உள்ளடங்குவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நெறிப்பாட்டில் சமயம் பலம் மிக்க விசையாக இருப்பதனால் சூழலை மாசுபடுத்தும் செயற்பாட்டைக் கையாள்வதற்குச் சமயத்தை நாட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. மனித செயற்பாடுகளையும் சமயச் செயற்பாடுகளையும் வேறுபடுத்திப் பார்க்காத நிலையில் சூழற் பிரச்சினையைச் சமயப் பிரச்சினையாகக் கொள்ளும் வளர்ச்சிநிலை சமயச் சூழலியல் ஆய்வை மேலோங்கச் செய்துள்ளது.

மறுபுறம் சமயச் செயற்பாடுகளும் மரபுகளும் உள்ளுணர்வுடன் சங்கமிக்காது பொறிமுறையாக மாறிவரும் நிலை குறிப்பிட்ட சில சமயங்களிலே காணப்பட்டுவரும் நிலையில் சூழற் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எட்ட முடியுமா? என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

பூர்விக வாழ்க்கை முறையும் சமூக இருப்பும் சூழலின் மீது அதிக தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. நவீன பொருளுற்பத்தி முறையும், மிகை இலாப மீட்டும் வர்த்தக நடவடிக்கைகளும், அணுவலுவை அடிப்படை யாகக் கொண்ட போர்க் கருவிகளும் சமயம் சார்ந்த மனச்சான்றைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளன.

மனிதச் செயற்பாடுகளுக்குரிய எதிர்வினையை இயற்கை வெளிப் படுத்தி விடும். எதிர்பாராத இயற்கை நிகழ்ச்சிகள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

மனிதர் பலயீனமான தாவரங்களையும், விலங்குகளையும் அழிக்கத் தொடங்கினால் மிகப் பலம் பொருந்தியவை உருவாகும் என்ற சமய நம்பிக்கைகளும் காணப்படுகின்றன. மயோரி போன்ற பூர்விக சமயங் களில் அத்தகைய நம்பிக்கை காணப்படுகின்றது.

தர்மம் வீழ்ச்சியடையும் பொழுது, அதனை நிலைநாட்டும் இறை செயற்பாடு நிகழ்த்தப்படும் என்பது இந்து சமயத்திலும் வலியுறுத் தப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டில் உலகம் தழுவிய இயற்கைக்கான நிதியம் *(World Wide Fund For Nature)* தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அங்கு உலகின் ஐந்து பெரும் சமயங்களினதும் பேராளார்கள் கலந்து கொண்டனர். இயற்கையைப் பாதுகாத்தல் தொடர்பாக தத்தமது சமயங்கள் வழியாகக் கற்பித்தலை மேற்கொள்ளும் முன்மொழிவு அங்கு மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து இத்தாலியில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸிஸ்ஸி நகரில் கூட்டம் பெற்ற மாநாடு முக்கியத்துவம் பெற்றது. அங்கே பௌத்த, இந்து, கிறீஸ்தவ, யூத மற்றும் இஸ்லாமிய மதங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அஸிஸ்ஸி பிரகடனம் ஒன்று அங்கே வெளியிடப்பட்டது. ஒவ்வொரு சமயத்தினரும் தத்தமது சமயங்கள் வழியாக இயற்கையைப் பாதுகாத்தல் தொடர்பான வெளிப்படுத்தலாக அது அமைந்தது. அதனைத் தொடர்ந்து வேறுபல சமயங்களும் அந்தச் செயற்பாட்டில் இணைந்து கொண்டன. அதன் வளர்ச்சியாக மதங்களின் இணக்கப் பாடும் சூழற் பாதுகாப்பும் தொடர்பான விரிந்த அமைப்புத் தோற்றம் பெற்றது.

தொடர்ந்து வளர்ச்சி மேம்பட்டுக் கொண்டே வருகின்றது. பசுமை யாத்திரை வலைப் பின்னலமைப்பு *(Green Pilgrimagenetwork)* அவற்றின் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளது. இயற்கையைப் பாதுகாத்தல் தொடர்பான சமயச் சுற்றுலாக்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

சூழல் இறையியல் என்பது இன்று சமய நிலைப்பட்ட ஆய்வாகவும், நெறிப்பாடாகவும் மட்டுமன்றி நடைமுறைப் பிரயோகங்களை உள்ள டக்கிய வினைப்பாட்டுப் பரிமாணங்களையும் கொண்டு முன்னேற்றம் பெறத் தொடங்கியுள்ளது. அனைத்துச் சமயங்களும் இத்துறையில் ஒன்றுபட்டுச் செயற்படத் தொடங்கியுள்ளமை குறிப்பிடக்கூடிய பிறிதொரு வளர்ச்சியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9.
# இனக்குழுமச் சூழலியல்

சூழலியல் ஆய்வில் பிறிதொரு வளர்ச்சியாக இனக்குழுமச் சூழலியல் *(Ethno Ecology)* இடம்பெறத் தொடங்கியுள்ளது. வெவ்வேறு பட்ட மக்கள் குழுவினர் வேறுவேறுபட்ட இடநிலையங்களில் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்பது பற்றியும், தமது சூழலை எவ்வாறு விளங்கிக் கொள்கின்றார்கள் என்ற நிலைகளையும், தமது சூழல் பற்றிய அறிகைக் கட்டமைப்பை எவ்வாறு உருவாக்கிக் கொள்கின்றார்கள் என்பதனையும் ஆழ்ந்து அறியும் இயலாக இனக்குழுமச் சூழலியல் விளங்குகின்றது.

சூழலைக் கையாளும் விதத்தில் ஒவ்வொரு இனக்குழுமத்தினரி டையேயும் காணப்படும் தனித்துவங்கள் அவர்களை அடையாளப் படுத்தும் குறியீடுகளாகவும் அமைந்துள்ளன. சூழலை விளங்கிக் கொள்ளும் புலக்காட்சியும் இனக்குழுமங்களுக்குரிய தனித்துவங்களோடு இணைந்துள்ளன. சூழற் கூறுகளை எவ்வாறு எண்ணக்கருவாக்கம் செய்கின்றனர் என்பதும் விரிவான நோக்குதலுக்கு உட்படுத்தப்படு கின்றது. அவற்றின் அடிப்படையாக இனக்குழுமத் தாவரவியல், இனக்குழும விலங்கியல், இனக்குழும மருத்துவவியல், இனக்குழும அறிவியல் முதலாம் அறிவுப் புலங்கள் வளர்ச்சியடையத் தொடங்கி யுள்ளன. நவீன கல்வி வளர்ச்சி அத்துறைகள் மீது தீவிர கவன ஈர்ப்பைச் செலுத்தி வருகின்றது.

இனக்குழும ஆய்வில் மானிடவியலாளரும், கல்வியியலாளரும் மொழியியலாளரும் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றனர். தென் ஆசியப் பின்புலத்தில் இத்துறையில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண் டவர்களுள் ஹெரொல் கொன்கிளின் முக்கியத்துவம் பெறுகின்றார். "இனக்குழும சூழலியல்" என்ற சொல்லை அவர் 1954ஆம் ஆண்டிலே உருவாக்கினார். ஹனுனோ பண்பாட்டை ஆராய்ந்த வேளை அந்தச் சொல்லின் உருவாக்கம் நிகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனக்குழுமச் சூழலியல் ஆய்வில் அவர் வெளியிட்ட "ஹனுனோ மக்களின் வண்ண வகைப்பாடுகள்" என்ற ஆக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. தமது பண்பாட்டு அமைப்புக்குள் இருந்தவாறு எவ்வாறு அவர்கள் நிறங்களின் வகைப்பாடுகளை மேற்கொள்கின்றார்கள் என்ற ஆய்வை வெளிப்படுத்தினார்.

ஒவ்வோர் இனக்குழுமமும் தமது பண்பாட்டுக்குரிய வகையிலே வகைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. ஹனுனோமக்கள் இரண்டு மட்டங்களிலே நிறங்களை வகைப்படுத்துகின்றனர். முதலாவது மட்டம் நான்கு அடிப்படைகளைக் கொண்டது. இருள்நிலை, ஒளிநிலை, சிகப்புநிலை, பசுமைநிலை என்றவாறு அவை அமையும். இரண்டாவது நிலை அதிக வளர்ச்சி கொண்டதும் அருவநிலை அறிவுத் தேடலை உள்ளடக்கியதுமாகும். பொருட்களின் ஈரலிப்புநிலை, ஒளிரும் நிலை, செம்பரவல் *(Texture)* முதலியவற்றை அடிப்படைகளாகக் கொண்டு நூற்றுக்கணக்கான வகைப்பாடுகளை அவர்கள் மேற்கொண்டனர்.

இனக்குழுமங்களின் தனித்துவங்களையும், சூழலைப் பகுத்தறியும் அறிகை நோக்கினையும் தேடுவதற்குரிய பெரும் ஆய்வுவெளியை கொன்கிளின் ஏற்படுத்தினார்.

தொன்மையான தமிழ் இனக்குழுமத்தினரது சூழல் தொடர்பான வகைப்பாடுகள் புவியியல் வேறுபாடுகளை அடியொற்றிய அறிகை வழித்தேடலை அடிப்படையாகக் கொண்டவை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற அடிப்படையான பெரும் பிரிவுகளும் அவற்றை அடியொற்றிய உள்ளமைந்த வகைப்பாடுகளும் விரிவாக்கம் பெற்றன. வகைப்பாடுகளை அடியொற்றிய மனித நடத்தைகளின் நீட்சியும் ஒழுக்க வகைப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

ஒவ்வொரு இனக்குழுமத்தினருக்குமுரிய தனித்துவம் சூழலை அவர்கள் பகுப்பாய்வு செய்யும் அடிப்படைகளின் தொடர்ச்சியாகவும் விளக்கத்தக்கது. சூழலைப் பகுப்பாய்வு செய்யும் முறையை அடியொற்றியே மொழி இலக்கணப் பகுப்பாய்வு முறைகளும் உருவாக்கம் பெற்றன.

இனக்குழும சூழலியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட பிறிதோர் ஆய்வாளராக ஜூலியன் ஸ்ருவேட் விளங்குகின்றார். "பண்பாட்டுச் சூழலியல்" என்ற தொடரையும் அவரே அறிமுகம் செய்தார்.

ஒவ்வோர் இனக்குழுமத்தினரும் தத்தமது தனித்துவங்களுக்கு ஏற்றவாறே சூழலுடன் இடைவினை கொள்கின்றனர். உலகில் உள்ள

11052



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து இனக்குழுமத்தினரும் ஒரே விதமாகச் சூழலுடன் இடைவினை கொள்ளவில்லை என்பது ஜூலியன் ஸ்ருவேட் மற்றும் பிரான்ஸ் போஸ் முதலிய மானிடவியலாளரின் ஆய்வு முடிவாகும்.

அவர்களுக்குரிய தனித்துவங்களை அடியொற்றியே தாவரங்கள் தொடர்பான புலக்காட்சி, விலங்குகள் தொடர்பான புலக்காட்சி முதலியவை இடம்பெறுகின்றன. இந்துக்களின் புலக்காட்சியில் குறிப்பிட்ட சில மலர்களே பூசைக்குரியவை என்று "புட்பவிதி" குறிப்பிடு கின்றது. சில பண்பாடுகளிலே புனிதமாகக் கருதப்படும் விலங்குகள் வேறு சில பண்பாடுகளிலே உணவுக்குரியவையாகக் கருதப்படுகின்றன.

இனக்குழுமச் சூழலியல் ஆய்வைப் பரந்த அளவிலே மேற்கொண்ட பிறிதோர் ஆய்வாளராக டி.எ.போசி விளங்குகின்றார். பிரேசில் நாட்டை குவியப்படுத்தி அவரது பெரும்பாலான ஆய்வுகள் இடம்பெற்றன. பறவை கள், விலங்குகள், சூழலியல் தொடர்பாக அங்குள்ள மக்களின் பூர்வீக அறிவைக் கண்டுகொள்ளல் அவரது பிரதான நோக்காக அமைந்திருந்தது.

உயிரியற் காரணிகளே மனிதரது செயற்பாடுகளைத் தீர்மானிக் கின்றது என்ற கருத்து நிலைபேறு கொண்டிருந்த நிலையில் பண்பாட்டுக் காரணிகளின் முக்கியத்துவத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

சூழலை முகாமை செய்வதிலே சுதேச அறிவு எத்துணை பலம் பொருந்தியதாக இருந்தது என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். இயற்கைப் பாதுகாத்து பராமரிக்கத்தக்க அபிவிருத்தியை மேற்கொள் வதிலே சுதேச அறிவின் முக்கியத்துவத்தையும் அவரது ஆய்வுகள் வெளிப்படுத்தின.

போசி அவர்களது முயற்சியினால் 1988 ஆம் ஆண்டு யூலை மாதம் 19ஆம் நாள் தொடக்கம் 24 ஆம் நாள்வரை அனைத்துலக இனக்குழும உயிரியல் மாநாடு கூட்டப் பெற்றது. இனக்குழும உயிரியல் ஆய்வுகள் இனக்குழும உயிரியல் ஆய்வுகள் இனக்குழும சூழலியல் பற்றிய அறிவை மேலும் விரிவாக்கியும் ஆழமாக்கியும் செல்வதற்குத் துணை நிற்றல் குறிப்பிடத்தக்கது.

பேலம் நகரிலே கூட்டப்பெற்ற அந்த மாநாட்டில் பல்வேறு துறைகளையும் சார்ந்த அறிஞர்கள் பங்கு கொண்டனர். வெப்ப வலயக் காடுகள் மற்றும் அதனோடிணைந்த ஊக்கல் தொகுதிகள் அழிதலை அவர்கள் சுட்டிக் காட்டினார். பல்வேறு உயிரினங்கள் அழிவடைதல் தொடர்பான கவன ஈர்ப்பும் வெளிப்படுத்தப்பட்டது. சுதேச அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்படுதலும், சிதைக்கப்படுதலும் தொடர்பான ஆழ்ந்த கருத்துக் குவிப்பினையும் கவலையையும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் பல முக்கியமான பல கருத்துக்களையும் அவர்கள் முன்வைத்தனர். மக்களின் பொருளாதாரம், விவசாய வாழ்க்கை, உடல் நலம் ஆகியவை அவர்கள் வாழும் சூழல் வளங்களிலே தங்கியுள்ளன. உலக வளங்களைப் பராமரிப்பவர்களாகவும் அவர்களே விளங்கு கின்றனர். உயிர்ப் பன்மை நிலைக்கும் மக்களின் பண்பாட்டுக்கு மிடையே நெருங்கிய உறவுகள் இருத்தலும் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றைப் பராமரிப்பதற்குரிய பல்வேறு வினைப்பாட்டு வடிவங்களும் அவர்களால் உருவாக்கப்பட்டன.

ஒவ்வோர் இனக்குழுமத்தினரும் தத்தமது வாழ்நிலைக்கு ஏற்றவாறு சூழலுடன் இடைவினை கொள்கின்றனர். விலங்குகளையும் தாவரங்களையும் மண், கல் முதலியவற்றையும் நிலத்தோற்றத்தையும் முகாமை செய்கின்றனர். உணவுக்காக, உடைக்காக, மருந்துக்காக, சடங்குகளுக்காக, கட்டட அமைப்புக்காக, பண்டமாற்றுக்காகப் பயன்படுத்துகின்றனர். தனிச் சொத்துரிமையின் வளர்ச்சியோடு சூழலுக்கிடையேயுள்ள உறவுகள் மாற்றமடையத் தொடங்கின.

சூழல் மீது தனிநபரின் உரிமை வளர்ச்சியடைய, சூழலின் நலன்களைக் காட்டிலும் தமது நலன்களே பெரிதென்று செயற்படத் தொடங்கினர். விகாரமடைந்த அந்த வளர்ச்சியானது சூழல் மாசுபடலுக்கு இட்டுச் சென்றது.

இனக்குழுமங்களின் விழுமியங்களைக் காட்டிலும் இலாப நோக்கு விழுமியங்கள் மேலோங்கத் தொடங்கியுள்ளன. அத்தகைய முரண்பாடு களுக்கிடையேயும் இனக்குழுமங்களுக்கும், சூழலுக்குமிடையேயான தனித்துவங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

சூழல் மாசடைந்து செல்லும் சமகாலத்தில் ஒவ்வோர் இனக்குழுமத்துக்குமுரிய சூழல் பாதுகாப்புத் தனித்துவங்களையும், விழுமியங்களையும் கண்டறிந்து அவற்றுக்கு வலுவூட்டும் முயற்சிகளை வினைப்பாட்டாளர் முன்னெடுத்து வருகின்றனர். மரபு வழியான சூழலியல் அறிவின் பொருண்மை கொண்ட பரிமாணங்களைக் கண்டறியும் முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவற்றின் வளர்ச்சியாக இனக்குழுமச் சூழலியல் தொடர்பான கள ஆய்வுகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10.
# மருத்துவச் சூழலியல்

மருத்துவச் சூழலியல் *(Medical Ecology)* என்பது வளர்ந்துவரும் ஓர் அறிவுத் துறையாகின்றது. மருத்துவ விஞ்ஞானிகள் மட்டுமன்றி சமூக விஞ்ஞானிகளும் இத்துறையிலே தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சூழல் மனித நலத்திலே நேரடியான தாக்கத்தை விளைவிக்கின்றது. மனித உடல் நலம் மட்டுமன்றி உளநலமும் சூழலின் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றது. சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், உண்ணும் உணவு ஆகியவை உடலிலே தாக்கங்களை உருவாக்குகின்றன. சூழல் தூர்க்க முறும் பொழுது மனித நுகர்ச்சிப் பொருட்கள் அனைத்தும் தாக்கமுறுகின்றன.

மருத்துவச் சூழலியல் என்ற தொடரைப் பிரபல நுண்உயிரியல் ஆய்வாளர் ரினிடொபொஸ் அறிமுகம் செய்தார். மனிதர் இயற்கையோடு ஒன்றிணைந்த பிரிக்க முடியாத கூறாகியிருக்கின்றனர். ஆனால் அந்த இணைப்பு நடைமுறையில் ஆழ்ந்து நோக்கப்படுதல் இல்லை.

பௌதிக, இரசாயன மற்றும் உயிரியல் செயற்றொகுதிகளின் சிக்கலான அமைப்பாகி நிற்பது தான் சூழல். அந்தச் சிக்கலின் வழிதான் மனித உடல்நலமும் உளநலமும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மனிதர் அறிந்துகொள்கின்றார்களோ அல்லது அறியாதிருக்கின்றனரோ, அவைதான் மனிதர்மீது ஆட்சி செலுத்திய வண்ணமுள்ளன.

சித்த மருத்துவம் போன்ற பழைமையான தமிழ் மருத்துவம் மட்டுமன்றி நவீன மேலைப்புல மருத்துவமும் மருத்துவச் சூழலியல் மீது ஆழ்ந்த கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

தொன்மையான ஆய்வாளர்களான சித்தர்களால் உருவாக்கப் பட்டதே சித்த மருத்துவமாகும். மனித உடலில் அமைந்த கூறுகளாக வாதம், பித்தம், கபம் ஆகியவற்றைச் சித்த மருத்துவம் குறிப்பிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது அவற்றை இயற்கைக் கூறுகளுடன் இணைக்கின்றது. வாதம் வளியுடன் இணைந்தது. பித்தம் நெருப்புடன் இணைந்தது. கபம் நிலத்துடனும் நீருடனும் இணைந்தது. அவற்றுக்கிடையேயுள்ள சமநிலையிலே தான் உடல் நலம் தங்கியுள்ளது. அந்தச் சமநிலை பிறழ்வடையும் பொழுது உடல்நலம் பாதிக்கப்படுகின்றது.

தமிழ் மருத்துவம் மட்டுமன்றி உலகின் தொன்மையான மருத்துவங்கள் அனைத்தும் சூழற் கூறுகளோடு இணைந்தவையாகவே காணப்பட்டன. நோய் தீர்க்கும் மருந்துகளும் சூழலில் இருந்து நேரடியாகப் பெறப்பட்டன. ஆயுர்வேத மருத்துவம் சூழலின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டதாக அமைந்தது.

சீன மருத்துவமரபும் சூழல் மீது ஆழ்ந்த கவனக் குவிப்பைக் கொண்டதாக அமைந்தது. ஜின், ஜாங் என்ற இருட்கூறும் ஒளிக்கூறும் அவர்களின் மனித விளக்கத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஜின் நீராகவும் ஜாங் தீயாகவும் அமையும். ஜின் சந்திர இயல்பைக் கொண்டது. ஜாங் சூரிய இயல்பைக் கொண்டது. சூழலில் உள்ள மூலிகைகளின் பயன்பாடும் வகைப்பாடும் சீன மருத்துவத்திலே சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது.

தாவரப் பொருட்களை மருந்தாகப் பயன்படுத்துதல் தொன்மையான மருத்துவத்திலும் இடம்பெற்றது. நவீன மருத்துவத்திலும் இடம்பெறுகின்றது. மண் மற்றும் களி ஆகியவற்றைச் சிகிச்சைக்காகப் பயன்படுத்துதல் மாற்று மருத்துவத்தில் இன்றும் மேற்கொள்ளப் படுகின்றது.

அவுஸ்திரேலியாவிற் காணப்பட்ட "பற்றை மருத்துவம்" *(Bush Medicine)* சூழலிற் கிடைக்கப் பெற்ற தாவரப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் இன்றும் பெரும்பாலான மக்கள் மரபு வழியான மருத்துவத்திலேயே தங்கியுள்ளனர். அந்த மருத்துவ முறை பெருமளவிலே சூழலிற் கிடைக்கப்பெறும் மூலிகைகளையே அடிப்படையாகக் கொண்டது. சூழலைக் கையாளும் சடங்கு முறைகளும் அந்த மருத்துவத்தோடு இணைக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது. நவீன மருத்துவமுறைக்கு மேலதிகமாகவும் அனுசரணையாகவும் மரபுவழி மருத்துவம் இந்தியாவிலும் சீனாவிலும் இன்றும் பயன்படுத்தப்படுதல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலியலை ஆழமாக ஆராயாது நோயை விரிவாக விளங்கிக் கொள்ள முடியாது என்று அலோப்பதி மருத்துவத்திலும் வலியுறுத்தப் படுகின்றது. "நேர் முகமான உடல்நலம் சூழலுடன் நல்லுறவு கொண்டதே" என்பதை ஸ்கொலி மோஸ்கி முன்மொழிந்தார். மேலைப் புலத்தில் வளர்ச்சியடைந்த அலோபதி மருத்துவமும் சூழலியலின் மீது ஆழ்ந்த கவனக்குவிப்பைக் கொண்டுள்ளது.

மேலைப்புல அலோபதி மருத்துவம் "உயிர் மருத்துவம்" *(Biomedicine)* என்று குறிப்பிடப்படும். உயர் நிலையான மருத்துவத் தொழில்நுட்ப முறைகளால் நோய்களிலிருந்து மனிதரைக் காப்பாற்ற முடியும் என்று உயிர் மருத்துவமுறை கருதுகின்றது. அதன் அடிப்படையில் எதிர் உயிரிய *(Antibiotic)* மாத்திரைகள் உருவாக்கப்படுகின்றன.

ஆபத்தான அணுக்கழிவுகளின் படிவுகளில் ஏற்படும் உயிராபத்துக் களை நவீன மருத்துவ நுட்பவியல்களாற் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் நிலையில் சூழற் பாதுகாப்பின் முக்கியத்துவம் மேலும் உணரப்படுகின்றது. இயற்கையின் சுகப்படுத்தும் வலு பற்றிய சிந்தனை *(The Healing Power of Nature)* உலகளாவிய முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

"இயற்கை வழி மருத்துவம்" *(Naturopathic)* என்ற நவீன அணுகு முறையின் வளர்ச்சி இயற்கைச் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வருகின்றது. நோய்களை உருவாக்கும் மூலாதாரமான காரணிகள் ஆழ்ந்து நோக்கப்படும் நிலையில் இயற்கையை நோக்கிய திரும்பல் ஏற்பட்டு வருகின்றது. நோய் தீர்க்கும் ஆற்றலிலே சூழலின் முக்கியத்துவம் எழுச்சி கொள்கின்றது.

உலக சுகாதார நிறுவனம் சூழலியல் தொடர்பான சட்டக வடிவமைப்பை உருவாக்கியுள்ளது. தனியாள் மட்டம், தொடர்புகள் மட்டம், சமுதாய மட்டம், சமூக மட்டம் என்ற நிலைகளிலே தனிமனித நலத்தை விளக்குகின்றது. மனிதச் சூழலை அடிப்படையாகக் கொண்டு அந்தச் சட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது.

சூழலியலைக் குவியப்படுத்தும் ஊடுதலையீடுகள் *(Interventions)* நவீன பிணிதீர்க்கும் நடவடிக்கைகளில் அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. சூழலை வளப்படுத்தும் திறமுறைகள் மனித சுகத்தின் அடிப்படைகளாகக் கொள்ளப்படுகின்றன. நலத்தை மேம்படுத்தும் சூழலே நலம் மிக்க மனிதரை உருவாக்குவதற்கு அடிப்படையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் சபை 1987 ஆம் ஆண்டு வெளியிட்ட பிரண்லாண் அறிக்கையில் "பராமரிக்கத்தக்க அபிவிருத்தி" கருத்தாக்கம் முன்வைக் கப்பட்டது. அதிலே சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் பலநிலை களிலே விளக்கப்பட்டுள்ளது. சூழலியலின் சமூகப் பரிமாணத்தின் முக்கியத்துவம் அதிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சூழலின் மீது மனிதருக்குரிய தங்கல் நிலையும் அதனை உரிய முறையிலே பராமரிக்க வேண்டிய தேவையும் பேசப்படுகின்றன.

உலக சுகாதார நிறுவனம் அனைவருக்கும் உயர் நிலையான நல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலை இலக்காகக் கொண்டுள்ளது. நலம் மிக்க சூழலை உருவாக்குதல் அதன் நலவியற் கொள்கை வகுப்பிலே உள்ளடக்கப்பட்டுள்ளது.

நலத்தை உயர்வித்தல் தொடர்பான உலக சுகாதார நிறுவனத்தின் வரைவிலக்கணம். நல மேம்பாடு என்பது தனிநபரின் நடத்தைகளை சமூக மற்றும் சூழல் தொடர்பான நலம்மிகு ஊடுதலையீடுகளுடன் தொடர்புபடுத்தி நோக்குகின்றது.

தமது உடல் மீது கட்டுப்பாடுகளையும் நெறிப்பாடுகளையும் வைத்திருத்தல், தமது நலத்தை மேம்படுத்துதல் முதலாம் உடல் நலத்தை உயர்விக்கும் செயற்பாடுகள் சூழலை நிராகரித்து உருவாக்கிக் கொள்ள முடியாது. நலத்தை உருவாக்குவதற்குரிய ஆதரவான சூழல் எப்பொழுதுமே ஒன்றிணைந்ததாகவுள்ளது.

தனிமனித உடல்நலம் தனித்துக் குறித்த நபரோடு மட்டும் சம்பந்தப்பட்ட விடயமல்ல. குடும்பம் என்ற உடனடிச் சூழலில் இருந்து விரிந்த உலகச் சூழல்வரை அது நீட்சி கொள்கின்றது. மனித நலத்தை உருவாக்குதல் சூழலில் நலத்தை உருவாக்குதலுடன் இணைந்தது.

மருத்துவச் சூழலியல் இன்று மிகவும் விரிவடைந்த துறையாக எழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. நுண்ணுயிரியலாளர், நோயியலாளர், நிலத்தோற்றப் பகுப்பாய்வாளர், கடல் உயிரியலாளர், தொற்றுநோய் ஆய்வாளர், காலநிலை உயிரியலாளர், மானிடவியலாளர், பொருளியலாளர், உணவு விஞ்ஞானிகள், அரசியல் விஞ்ஞானிகள் போன்ற பல்வேறு துறைகளிலும் நிகழ்கின்ற ஆய்வுகளை உள்ளடக் கியதாக வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் உருவாக்கும் நலவியற் பிரச்சினைகள் மிகவும் சிக்கலானவை. ஆனால் அத்தகைய சிக்கல் பற்றிய விரிவானதும் ஆழ்ந்ததுமான கண்டுபிடிப்புக்கள் மேலும் நிகழ்த்தப்பட வேண்டியுள்ளன.

சூழலின் இயல்புகள் மனிதர் உட்கொள்ளும் உணவுகளைப் பாதிக்கின்றன. அவற்றினூடாக மனிதர் பல்வகையான நோய்களுக்கு உட்படுகின்றனர். பல பல புதிய நோய்களின் வெளிப்பாடுகள் சூழல் பற்றிய நோக்கை ஊடுருவி செல்லும் செயற்பாட்டை முன்னெடுக் கின்றன.

சூழலில் நிகழ்த்தப்படும் ஒவ்வொரு மாற்றமும் மனித உடலையும் உள்ளத்தையும், நடத்தையையும் பாதிக்கின்றன. மருத்துவச் சூழலியல் தொடர்பான புளோரன்ஸ் நைற்றின் கேலின் (1820-1910) கோட்பாடு பழையதாக இருந்தாலும் நவீன செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவதாக வுள்ளது. "நோயாளியை நோயில் இருந்து மீட்டெடுப்பதற்குச் சூழலை ஆற்றலுடன் பயன்படுத்துதலே தாதியமாகும்" என்பது அவரது கோட்பாடாகும். அதாவது பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொடுப்பதன் வாயிலாகவே நோயாளியை மீட்டெடுக்கலாம் என்பதாகும்.

சூழலைக் குவியப்படுத்தியே பொதுச் சுகாதாரம், சமுதாய மருத்துவம், முதலாம் துறைகள் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11.
# சூழல் அழகியல்

சூழல் அழகியல் *(Environmental Aesthetics)* என்பது அழகியற் கல்வியியல் ஒரு புதிய துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. சூழலியல் மற்றும் சூழல் வாதம் ஆகியவற்றின் வளர்ச்சியோடு இணைந்த நீட்சியாக சூழல் அழகியல் மேலெழுந்து வருகின்றது.

அழகின் அனுபவம் என்பது தனியாளின் இயல்புக்கும், சுவைத்தலுக்கும், பயன்பாட்டுக்கும் மட்டுமன்றி இயற்கையோடும் சூழலோடும் இணைந்துள்ளது என்ற கருத்து முதற்கண் சுட்டிக்காட்டத் தக்கது. கொன்றன் (2000) என்ற ஆய்வாளரின் கருத்தின்படி அழகை உருவாக்கும் வடிவங்கள் அனைத்தும், இயற்கையிலே பொதிந்துள்ளன. இயற்கையின் சிக்கலாகிய தன்மைகூட அழகின் சிக்கலாகிய தன்மை யைப் புலப்படுத்துகின்றது. இயற்கையின் வேலைப்பாடுகள் அழகின் வேலைப்பாடுகளாகின்றன.

இயற்கை உலகை நயத்தல் சூழல் அழகியல் தொடர்பான கருத்துக்கு மேலும் அணி செய்தது. உலக இலக்கியப் பரப்பில் இயற்கை நயப்பு நெடிது நீடித்திருந்தது. ஓவியப் பரப்பில் தோமஸ் கோல மற்றும் பிரடிரிக் எட்வின் சேர்ச் ஆகிய மேற்கொண்ட ஆக்கங்கள் இயற்கை அழகியல் நயப்புக்கு மேலும் அணி செய்தன. பத்தொன்பதாம் நூற்றாண் டின் புவியலாளரது எழுத்தாக்கங்களும் இயற்கை அழகியல் முன்னெடுப்புக்கு விசையூட்டின.

இருபதாம் நூற்றாண்டிலே இயற்கை அழகியல் மேலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. சூழலியல் வினைப்பாட்டு இயக்கங்களின் வளர்ச்சி, சூழலின் சிதைவு முதலியவை அத்தகைய அழகியல் நோக்கை மேலும் குவியப்படுத்தின. சூழல் முகாமைத்துவத் தில் "உறுங்காட்சியழகு" *(Scenic Beauty)* என்பது வலியுறுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாந்தரமாக வளர்ச்சியுறத் தொடங்கிய சூழல் உளவியலும் சூழல் அழகியல் வளர்ச்சிக்குத் துணை செய்தது.

சமகாலச் சூழல் அழகியலில் இரண்டு முரண்பாடும் கருத்தாக்கங்கள் எழுச்சி கொண்டுள்ளன. அறிகை சார்ந்த நிலை அறிகை சாராத நிலையென எனஅக்கருத்தாக்கங்கள் அமையும். அறிவை அடிப்படையாகக் கொண்டு அழகை அணுகுதல் அறிகைக் கருத்துரு வாக்கத்தில் வலியுறுத்தப்படுகின்றது. அதாவது ஓவியம் பற்றிய அறிவோடுதான் பிக்காசோவின் ஆக்கங்களை விளங்கிக்கொள்ள முடியும். சூழல் அழகியலை விளங்கிக்கொள்வதற்கு சூழலியல், புவியியல், உயிரியல், புவிச்சரிதவியல் முதலாம் இயற்கை விஞ்ஞானங் கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் தொடர்பான அறிவு அவசியம் என்று வலியுறுத்தப்படுகின்றது. அதன் வழியாக ஆக்கங்களின் உண்மை நிலவரங்களை அறிந்துகொள்ள முடியும். அறிவிலிருந்து அழகை இரசிக்க முடியும்.

அறிகை சாராத அணுகுமுறை எழுச்சி *(Emotive)* யின் வழி கலைகளை நோக்குதலை வலியுறுத்துகின்றது. ஆக்கத்தின் சூழமைவும் புலன்சார் அனுபவ ஆக்கமுமே அங்கு மேலோங்கி நிற்கின்றன. அகவயப் பாங்குடன் இணைந்த கற்பனைகளுக்கு எழுச்சி நோக்கிலே முக்கியத்துவம் தரப்படுகின்றது. மனவெழுச்சி கலந்த நிலையில் நிகழும் எறிவுகள் அழகு நுகர்ச்சியை மேம்படுத்துகின்றன.

மனிதர் கைப்பட்ட சூழல், மனிதர் கைப்படாத சூழல் என்ற இருவகைப் பரிமாணங்கள் சூழல் அழகியலில் நோக்கப்படுகின்றன. மனிதன் உருவாக்கிய பொருட்கள் மற்றும் காட்சிகள் பற்றிய புரிதலுக்கு அறிகை அணுகுமுறை கூடுதலாக உதவலாம். மனிதர் கைப்படாத இயற்கை அழகை நுகர அறிகைசார் எழுச்சி அணுகுமுறை கூடுதலாக உதவலாம். அவ்வாறு அறிகை நிலையில் இரு கூறுகளாகப் பிரித்து நோக்குதலில் இடர்ப்பாடுகளும் காணப்படுகின்றன.

குறிப்பிட்ட ஓர் ஆக்கத்தை மட்டும் அழகியல் அனுபவத்துக்கு உட்படுத்தும் பழைய அழகியல் வரைவிலக்கணத்திலிருந்து சூழல் அழகியல் வேறுபடுகின்றது. பெரும் உலக தரிசனத்தை அழகியல் அனுபவத்துக்கு உட்படுத்துதல் சூழல் அழகியலில் முன்னெடுக்கப்படு கின்றது. அதாவது குறித்த கலைப் பொருளின் புலன்சார் நுகர்ச்சியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் கட்டுப்பட்டிருந்த அழகியல் அனுபவம் மேலும் விரிவடைந்த வெளிக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

நாளாந்த வாழ்க்கைச் சூழலும், தொழில்புரியும் சூழலும், பொழுது போக்குச் சூழலும் என்றவாறு ஒவ்வொரு சூழலும் அழகியல் அனுபவங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் நிகழும் தொழிற்படும் சூழல்கள் அழகியல் அனுபவங்களுக்கு உட்படுத்தப்படு கின்றன. சூழலில் குறிப்பிட்ட பொருட்களால் மட்டுமன்றி முழுச் சூழலையும் உள்ளடக்கிய விரிந்த பரப்பைச் சூழலியல் உளவியல் கொண்டுள்ளது. மனிதர் உருவாக்கியவை மட்டுமன்றி இயற்கைச் சூழலையும் சூழல் அழகியல் உள்ளடக்குகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்ற நிலத்தோற்ற அழகியலுடன் சூழல் அழகியலுக்குத் தொடர்பு இருந்தாலும் இருபதாம் நூற்றாண்டின் பன்முகச் சூழலின் வளர்ச்சி நிலைகள் புதிய விரிந்த தரிசனத்துடன் புதிய அழகியல் கருத்தாக்கத்தை உருவாக்கியது.

சூழலின் பண்பு பற்றி எழுந்த பொதுமக்களின் கவனிப்பும் அக்கறையும் அழகியல் எண்ணக்கருவிலே ஏற்படுத்திய செல்வாக்குகள் சூழல் அழகியலின் வளர்ச்சிக்கு விசையூட்டி வருகின்றன. அத்துடன் ஒவ்வொரு நாளுக்குமுரிய மனிதச் சூழலின் அழகை நேசிக்கும் நிலையும் நோக்கும் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்நிலையில் முன்னைய அழகியல் மெய்யியலில் இருந்து சூழல் அழகியல் வேறுபடுகின்றது. அறிவியல் அனுபவங்களோடு இணைந்து வளர்ந்து செல்லல் சூழலியல் அழகியலுக்குரிய சிறப்புப் பரிமாண மாகின்றது. சூழல் வடிவமைப்பு, சூழல் திட்டமிடல் நிலக்காட்சி உருக்கலை *(Landscape Architure)* முதலாம் புலங்களின் அனுபவங் களுடன் சூழல் அழகியல் தொடர்புபட்டு நிற்கின்றது. முன்னைய அழகியல் மெய்யியலில் அவை கருத்திற் கொள்ளப்படவில்லை.

குறிப்பிட்ட சூழல் வேறுபாடுகளுக்கு ஏற்ப வேறு வேறுபட்ட தனிநபர்களின் சுவை வேறுபாடுகளை மதிப்பீடு செய்தலும் அந்தப் புதிய அணுகுமுறையில் உள்ளடக்கப்படுகின்றது. அதுவும் சூழல் அழகியலுக்குரிய சிறப்புப் பண்பாகின்றது. சூழலை விளங்கிக் கொள்ளல் தொடர்பான சமூக உயிரியல் பரிமாணங்களும் அங்கே முதன்மைப் படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு வழியான கலை பற்றிய எண்ணக்கரு மேலும் விரிவுபடுத்தப் படுகின்றது. காட்டுப்பாங்கு, கிராமப்பாங்கு, நகரவிருத்தி, பெருநகர ஆக்கம், நவீன அங்காடிகள் என்றவாறு அழகியல் அலகுகள் விரிவடைந்து செல்கின்றன. விரிந்த பெரும் அலகுகள் மட்டுமன்றி சிறிய நுண் அலகுகளும் அழகியற் பரப்புக்குள் அடக்கப்படுகின்றன. சமயற் சூழல், வேலை நிகழும் அறை மட்டுமன்றி பயன்படுத்தப்படும் கருவிகளும், அவற்றின் கையாட்சிகளும் உள்ளடக்கப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்லப் போனால் சூழல் அழகியல் என்பது நாளாந்த வாழ்வின் அழகியலாகின்றது.

பல பரிமாணங்களினதும் பல்வேறு அலகுகளினதும், காட்சிக ளினதும் தொகுப்பாகவும், சூழல் அழகியல் அமைகின்றது. பார்த்தல், கேட்டல், தொடுதல், முகர்தல் என்ற பல்வேறு புலன் அனுபவங்களின் தொகுப்பாகவும் அது விரிவடைகின்றது. சூழலினூடே பார்ப்பவரின் நகர்ச்சி நிகழ்வதுடனும் அழகியலாக்கம் நிகழ்கின்றது.

குறிப்பிட்ட சட்டகத்துள் சூழல் அழகியல் நின்று விடுதல் இல்லை. முன்னைய அழகியல் தொடர்பான வரைவிலக்கணம் குறித்த காட்சிச் சட்டகத்துடன் அல்லது கேள்விச் சட்டகத்துடன் நின்று விடுகின்றது. அந்த வரையறை உடைத்தெறியப்படுகின்றது.

நாளாந்தம் சூழலில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. இயற்கை விசைகளாலும், சமூக விசைகளாலும், தனிமனித விசைக ளாலும் அவை நிகழ்ந்த வண்ணமுள்ளன. முன்னைய அழகியல் குறிப்பிட்ட கலைஞரைக் குவியப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. அந்த வரையறையும் தகர்ப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. எல்லை கடந்து தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் சூழல் விரிந்த அழகியற் பொருளாகின்றது.

மரபு வழியான அழகியல் வரையறைகள் மாற்றப்படுகின்றன. அகவயம், புறவயம் என்ற இருநிலைப் பாகுபாடும் உடைக்கப்படு கின்றது. பெரும் பரப்பு அனுபவங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இயற்கைச் சூழலும் மனிதச் சூழலும் உள்ளடக்கப்பட்ட பெரும் காட்சி விரிவாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. பல்வேறு மனவெழுச்சித் தெறிப்புக்களுக்குரிய பெரும் பரப்பு இடம்பெறுகின்றது. வீட்டுத் தோட்டம், நிலத்தோற்ற முகாமைத்துவம், நவீன அங்காடிகள், தொழில் நிலையங்கள் ஆகியவை பிரதிப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியான அழகியல் அனுபவங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன. பிரதிப்படுத்தல் அற்றநிலை என்பது ஓவியமாகவோ, ஒளிப்படமாகவோ, திரைப்படமாகவோ ஆக்கப்படாத நிலையாகும்.

சூழல் அழகியலில் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே நிகழும் மாற்றங்களும் இயக்கங்களும் அழகியல் அனுபவங்களுக்கு மேலும் விசையூட்டுகின்றன.

அறிகை அணுகுமுறையும் அறிகை சாரா அணுகுமுறையும் சூழல் அழகியலைப் பொறுத்தவரை முரண்பாடு கொண்டவை என்று கொள்ளப்படுதல் இல்லை. அவை இரண்டும் தத்தமது நிலைகளில் நின்று அழகைத் தரிசிக்கின்றன.

சூழலை அழகியல் நோக்கில் அனுபவித்தல் தொடர்பான முரண்பாடும் அணுகுமுறைகளும் உள்ளன. அவை வருமாறு:

1. சூழலுக்கும் தமக்கும் இசைவு உண்டென்ற அணுகுமுறையும் இசைவற்ற உடைந்த நிலை என்பதுமான முரண்ணிலை.

2. சூழலை இறையியலோடு இணைத்துப் பார்த்தலும், தவிர்த்துப் பார்த்தலும்.

3. சூழலின் மீது மனித ஆதிக்கத்தைக் கட்டற்ற முறையில் முன்னெடுத்தலும் கைவிடுதலும்.

4. இயற்கையை மனித முயற்சிகளினால் மாற்றியும் செம்மைப் படுத்தியும் பார்த்தலும் அவற்றைத் தவிர்த்து உள்ளதை உள்ளவாறே பார்த்தலும்.

மேலைப்புலத்து ஏகாதிபத்திய அழகியற் கருத்தியல் காலனித்துவ நாடுகளின் சூழலில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அவை பற்றிய நோக்கும் சூழல் அழகியலில் உள்ளடக்கப்படுகின்றது. அதன் பிறிதொரு வளர்ச்சியாக "அழகியல் உலகமயமாக்கல்" *(Aesthetic Globalisation)* என்பது தோற்றம் பெற்றது. 18ஆம் 19ஆம் நூற்றாண்டு களிலே அதீத ஆதிக்கம் பெற்றிருந்த "சித்திரவியம்" *(Picturesque)* சிந்தனைகளை அடியொற்றிப் பிரித்தானியர் தமது காலனித்துவ நாடுகளிலே காட்சிகளை வடிவமைத்தனர். இயற்கையை மாற்றிய மைத்தல் இலகுவிலே புலப்படா வண்ணம் காட்சிகள் உருவாக்கப் பட்டன. படவடிவை மனத்திற் கொண்டு கலையாக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்வதே "சித்திரவியம்" என்று குறிப்பிடப்படும். அழகையும் ஆழ்மன பதிவுகளையும் அது உள்ளடக்கி நிற்கும். ஏகாதிபத்தியம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்தும் அழகிய லாக்கமே "ஏகாதிபத்திய அழகியலாகும்" அதன் செல்வாக்கு பின்காலனியத் திறனாய்வில் விரிவாக நோக்கப்படுகின்றது.

மனிதர் ஆக்கங்களையும் மனிதம் சாராதவற்றையும் உள்ளடக்கும் சூழல் அழகியல் சூழலியல்வாத *(Environmetalism)* சிந்தனைகளையும் உள்வாங்கிக் கொள்கின்றது. சூழலைப் பாதுகாத்தல், சூழல் வழியாக மனித நலன்களைப் பராமரித்தல் முதலியவை சூழலியல் வாதத்தில் வலியுறுத்தப்படுகின்றன. சூழற் பாதுகாப்பில் உயிர்ப் பல்வகைமையை அழிவுக்குள்ளாகாமல் பாதுகாத்தலும் முக்கியத்துவம் பெறுகின்றது. பல்வகைமை அழகியற் பரிமாணங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

சூழல் அழகியல் பலநிலைகளிலே புதிய சிந்தனைகளையும், மாற்றுச் சிந்தனைகளையும் உருவாக்கி வருகின்றது. அதேவேளை சூழலைப் பாதுகாத்தல் தொடர்பாகவும், அனுபவித்தல் தொடர்பாகவும் தெளிவான கருத்தியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. அந்நிலையில் சுரண்டலை வேரோடு அறுக்கும் கருத்தியல் முக்கியத்துவம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12.
# சூழலியற் கலை

"சூழலியற் கலை" என்பது பரந்த பொருளுடையது. சூழலுடன் தொடர்புடைய அனைத்துக் கலைகளும் இப்பிரிவில் அடக்கப்படு கின்றது. அதேவேளை பல்வேறு நிலைகளில் அதற்கு வரைவிலக்கணம் கொடுக்கும் முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. சூழலைப் பாதுகாத்தல் என்ற கருப்பொருளுடன் தொடர்புடைய "சூழலியல் வாத ஓவியங்கள்" என்ற தனிப்புலமும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. சூழலியல் இலக்கியங்களும் இசையும் நீண்டகால நிகழ்ச்சிகளாகின்றன.

சூழலியற் கலையாக்கங்களை ஓர் இயக்கமான முன்னெடுக்கும் முயற்சிகள் 1960ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சியடையத் தொடங்கின. "பூமி தொழிற்படுகின்றது" *(Earth Works)* என்ற தலைப்பில் 1968ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரொபேட் சிமித்சன் அவர்கள் ஒரு கண்காட்சியை நியுயோர்க்கில் உள்ள டுவன் கலையகத்திலே ஒழுங்கு செய்தார்.

பாரம்பரியமாகக் கிராமியக் காட்சிகளுடன் கட்டுப்பட்டிருந்த சித்திரிப்பு நிலையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. நகரக் காட்சிகளும், இடம்பெறத் தொடங்கின. சூழலியல் ஓவியர்கள் சூழலைப் புனைந்தனரேயன்றி சூழலின் மீது நிகழ்த்தப்படும் கேடுகளை உற்றுணர்வுடன் சித்திரிக்கவில்லை என்ற எதிர்க் கருத்தை சூழலியல் வாதக் கலைஞர்கள் முன்வைத்தனர்.

சூழல் எவ்வாறு நாசமாக்கப்படுகின்றது என்பதை விளக்கும் கலையாக்கங்களை அமெரிக்கக் கலைஞராகிய ரொபேட் சிமித்சன் உருவாக்கலானார். அவர் உருவாக்கிய "ஸ்பைரல் ஜெட்டி" (1969) என்ற சிற்பம் இவ்வகையிலே சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. நிலத்தின் மீது மேற்கொள்ளப்படும் அழிவுகள் அதன் உட்கருவாக அமைந்தது.

தொடர்ந்து பல்வேறு கலைஞர்கள் இத்துறையிலே கால்பதிக்கலா யினர். இயற்கை வடிவங்களின் ஒழுங்கமைப்பை நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைத்தல், பாரம்பரியமான இயற்கைத் தாவரங்களை அழிக்கும் மனித நடவடிக்கைகள், பல்வேறு நிலைகளில் இயற்கையை மாசுபடுத்தும் மனிதரின் செயற்பாடுகள் முதலியவை புனைவுகளுக்குள் கொண்டுவரப்பட்டன.

மீளாக்கப்படக்கூடிய வலுவைச் சித்திரிக்கும் சிற்ப ஆக்கங்கள் என்ற தனித்துவமான கலைத்துறையும் சூழலியலை அடியொற்றி வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. இயந்திரங்களால் உலகை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்ற கற்பனைக்கு வடிவம் கொடுக்கும் நவீன சிற்ப ஆக்கங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அழகியற் பண்புகள் குலைந்துவிடாது சிற்பங்களை உருவாக்கும் முயற்சியிலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

சூழலியற் கலையாக்கத்துடன் இணைந்த பிறிதொரு கலைச் செயற்பாடாக "வறுமைக்கலை" *(Arte Povera)* தோற்றம் பெற்றது. இத்தாலியக் கலைஞராகிய ஜேர்மனோ செலன் அதற்குரிய பெயரைச் சூட்டினார். நிறுவன உறுதி பெற்ற அரசு, கைத்தொழில்கள், பண்பாடு முதலியவற்றுக்கு எதிரான கலையாக்க முன்னெடுப்பாக "வறுமைக் கலை" மேலெழுந்தது.

மாற்று வகையான சிந்தனைகள் முன்னெடுக்கப்பட்டன. சிறிய பொருட்களும் சிறிய சிந்தனைகளும் கலை வடிவினுக்குக் கொண்டு வரப்பட்டன. ஒவ்வொரு நாளும் பொருண்மை கொண்ட நாள் என்பது எடுத்தியம்பப்பட்டது. கைத்தொழில்களின் உண்மை வடிவங்கள் காட்சிக்குக் கொண்டுவரப்பட்டன.

நில ஓவியம் *(Landart)* என்ற இயக்கம் முன்னைய ஓவிய ஊடகங்களை நிராகரித்து இயற்கைப் பொருட்களாகிய மண், கல், மரடித்தடிகள், இலைகள், கனிமத்துணிக்கைகள் முதலியவற்றைப் பயன்படுத்தி ஓவியம் புனைதலைக் குறித்து நின்றது. ஓவிய ஊடகங்கள் வழியான கருத்தேற்றம் அங்கே முன்னெடுக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டிலிருந்து அந்தச் செயற்பாடுகள் மேலெழத் தொடங்கின. அலன் சொன்பிஸ்ட் அதன் முன்னோடியாக அமைந்தார். தொடர்ந்து நிலஓவியர்கள் என்ற பிரிவினர் தோற்றம் பெற்றனர்.

எடுராடோசன் சன்குயினெட்டி என்ற இலத்தீன் அமெரிக்க ஓவியரும் சிந்தனையாளரும் "நிலத்திற் சிற்பங்கள்" என்ற காட்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்தார். இயற்கைச் சூழலில் அந்தச் சிற்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. தாவரங்களும், விலங்குகளும் இயற்கைச் சூழலில் நிற்பது போன்று சிற்பங்களும் நிறுத்தி வைக்கப்பட்டன.

"சூழலியல் சிற்பங்கள்" *(Environmental Sculpture)* என்ற கலையின் வளர்ச்சி வாழ்க்கைக்கும் கலைக்குமிடையே காணப்பட்ட இருமைப் போக்கினை முற்றாக நிராகரித்தது. பார்ப்போரைப் பார்வையாளராக மட்டுமன்றி "உள்ளடக்குவோர்" என்ற கருத்தாக்கத்துக்கு இட்டுச் சென்றது. அரங்கியலில் அது மேலும் விரிவாக முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட சூழமை உருவாக்கும் சிற்ப ஆக்கங்களும் நிலத்தளத்தில் உருவாக்கப்பட்டன. சூழமைவுக்குரிய உளக்கோலத்தைத் தூண்டும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. 1999ஆம் ஆண்டைத் தொடர்ந்து அதன் வளர்ச்சி மேலும் பாய்ச்சல் கொண்டது. அதே ஆண்டில் எலீனா புரேயுசேவா அதிக மின் அழுத்தத்தைப் பாய்ச்சும் சிற்பங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். நவீன கணினித் தொழில்நுட்பமும் லேசர் நுட்பங்களும் சிற்பங்களுக்குள் ஒன்றிணைக்கப்பட்டன. மின்னியற்கலை *(Electricart)* என்ற புதிய துறை வளர்ச்சியடையத் தொடங்கியது. மின் கோபுரங்களைத் தளமாகக் கொண்டு அவற்றைக் கலையழகுக்கு உட்படுத்தும் மின்னியல் நுட்பங்களும் முன்னெடுக்கப்பட்டன. மின்கோபுரங்கள் கலைக் கோபுரங்களாக ஆக்கப்படுகின்றன.

புதிய வளர்ச்சி "செயற்றொகுதிக்கலை" *(Systemsart)* என்ற அமைப்புக்கும் இட்டுச் சென்றுள்ளது. கணினி நுட்பங்கள், செயற்றொகுதிக் கோட்பாடு முதலியவற்றினூடாக இயற்கைச் செயற்றொகுதி, சமூகம் முதலியவற்றை ஆக்கத் தெறிப்புக்கு உட்படுத்தல் முன்னெடுக்கப்பட்டது. மரபு வழி வடிவங்களுக்கு எதிரான இயக்கமாக *(Anti from Movement)* அது எழுச்சி கொண்டது.

மனிதருக்கும் இயற்கைச் சூழலுக்குமிடையேயுள்ள உறவுகளை மேம்படுத்துதலே சூழலியற் கலைகளின் சிறப்பார்ந்த நோக்கமாக வுள்ளது. குறிப்பிட்ட சூழலை நிலைக்களனாகக் கொண்டே அது உருவாக்கம் பெறுகின்றது. கலையாக்குனர்கள் விஞ்ஞானிகள், கல்வியியலாளர், உளவியலாளர், சமூகவியலாளர் முதலியோரது உதவிகளைப் பெற்றே சூழலியற் கலைகளை உருவாக்குகின்றனர்.

இயற்கையையும் அதன் செயல்முறைகளையும் மனிதர் உருவாக்கிவரும் சூழலையும் சூழலியற் கலைகள் விளக்குவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் நின்றுவிடாது வியாக்கியானமும் செய்கின்றன. பொருள் கோடலை மேற்கொள்கின்றன. அத்துடன் சூழலியற் பிரச்சினைகளை அறியத் தருகின்றன. சூழலில் உள்ள விசைகள், வழியாக உருவாக்கம் பெறும் நிகழ்ச்சிகளைச் சித்திரிப்புக்கு உள்ளாக்குகின்றன. காற்றின் அரிப்பும் குவிப்பு, நீரின் செயற்பாடுகள், பூகம்பம், எரிமலை முதலியவற்றின் கோலங்கள் கலையாக்கத்துக்கு உட்படுத்தப்படுகின்றன.

மாறும் சூழலுக்கு ஏற்றவாறு மனித நடத்தைகளையும் உளக் கோலங்களையும் இணங்க வைக்கும் அல்லது அதிர வைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அழகியல் உபாயங்களைப் பயன்படுத்திச் சூழல் அழிவைத் தடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

சூழலியற் கலைஞர்கள் சிலர் அதிர வைக்கும் செயற்பாடுகளை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக கழிவுப் பொருட்களை மீள் சுழற்சிக்கு உள்ளாக்கிப் பல்வேறு புத்தாக்கங்களை உருவாக்கியுள்ளனர். பறவைகளின் இறகுகளை மீள் சுழற்சிக்கு உள்ளாக்கி சுயாதீனமாக அசையும் வடிவங்களை ஆக்கியுள்ளனர்.

இயற்கையே ஈடிணையற்ற கலைஞர் என்பது முழுமுதற் கருத்து. அது பற்றிய விளக்கமே சூழலியற் கலைக்கு அடிப்படையாகின்றது. இயற்கையோடு தோய்ந்து இயற்கையிற் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி ஓவியங்கள் வரைந்தவர்களுள் அன்டி கோல்டு வேர்த்தியின் ஆக்கங்கள் விதந்து குறிப்பிடப்படுகின்றன. தூரிகைகள் இன்றித் தனது வெற்றுக்கரங்களையும், வாயையும், பற்களையும் பயன்படுத்திக் கலையழகு மிக்க ஓவியங்களை அவர் புனைந்தார்.

சூழலோடு தொடர்புடைய வினைப்பாட்டு நடவடிக்கைகள் *(Activism)* உலகெங்கும் மேலெழுந்த நிலையில் அவற்றோடு தொடர்புடைய கலையாக்கங்களும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. மாசுபட்டு வரும் பபலோ நதியைப் பாதுகாக்கும் வினைப்பாட்டினை அடியொற்றி ஐக்கிய அமெரிக்காவிலே பல்வேறு கலைப் படைப்புக்கள் தோற்றம் பெற்றன. அதுவே முதலில் எழுந்த சூழற் பாதுகாப்பு வினைப்பாடாகச் சொல்லப்படுகின்றது.

"பூகோள அழகியல்" என்ற புதிய சொல்லாடலும் உருவாக்கப்பட்டுள்ளது. பின்காலனிய இலக்கிய ஆசிரியர்கள் இத்துறையிலே விரிவான ஆக்கங்களை முன்வைத்துள்ளனர். எலிசபெத் டி லாவ்ரே மற்றும் ஜோர்ச் பி. காண்லே ஆகியோர் "பின் காலனிய சூழலியல்புகள்" என்ற நூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளனர். காலனித்துவத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளில் இடம் பெற்று வரும் சூழலியல் நெருக்கடிகளை வெளிக்கொண்டு வந்துள்ளனர்.

சூழலியற் கலையாக்கம் என்பது இன்று மிகப் பரந்த ஒரு கலைப்புலமாக எழுச்சி கொண்டுள்ளது. சிறப்பாகப் பின்காலனியத் திறனாய்வுப் பரப்பு இத்துறையில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகின்றது. பின்காலனிய சூழலியற் திறனாய்வு, இலக்கியங்களுக்கும் சூழலியலுக்குமுள்ள தொடர்புகள், நிலத்தோற்றமும் இலக்கியமும், சூழலின் எதிர்காலம் முதலாம் ஆக்கங்கள் கலை இலக்கியத் தொடர்பில் மேலெழுந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13.
# இசையிற் சூழலியல்

இசையிற் சூழலியல் வாதம் என்ற கருத்தாக்கம் உற்றுணர்வு நிலையில் 1940ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. போருக்கு எதிரான இசையுடன் இணைந்தும் இசையிற் சூழலியல் வளர்ச்சிகொள்ளத் தொடங்கியுள்ளது. பிளாக் சப்பெத் அவர்களின் "போர்ப் பன்றிகள்" *(War Pigs)* என்ற யுத்தத்துக்கு எதிரான ஆக்கம் உலகளாவிய முறையிலே இளைஞர்களிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தியது.

1995ஆம் ஆண்டில் மைக்கல் ஜக்சன் வழங்கிய "பூமிப் பாடல்" *(Earth Song)* பரந்த அளவிலே செல்வாக்கை ஏற்படுத்தியது. காடுகளை அழிக்கும் கொடுமை, சூழல் மாசடைதல், வறுமை, போர், விலங்கு களைக் கொடுமைப்படுத்துதல் முதலாம் கருப் பொருட்கள் "பூமிப் பாடலில்" உள்ளடங்கியிருந்தன. கொடுமைகளுக்கு எதிராக உலக மக்களை ஒன்றிணைக்கும் இசை தழுவிய உச்சாடனங்களாக அவை அமைந்திருந்தன. கொடுமைகளுக்கு உள்ளாகிய உலக மனங்களைச் சுகப்படுத்தும் கருத்துள்ள இசைப் பாடல்களாக அவை அமைந்தன. சிறப்பான இசை விளைவுகள் *(Effects)* அவற்றில் ஒன்றிணைக்கப்பட்டி ருந்தன. காலம் கறங்கு போலச் சுழல்கையில் போர் முடிவுறுதலும், காடுகள் மீள எழுதலுமான நம்பிக்கையூட்டலையும் அந்த இசையாக்கம் கொண்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் பாடல்களும் இசையாக்கங்களும் பல நிலைகளிலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 2010ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் பூமி இசைத் திருவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சூழலியலைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் இசையின் முக்கியத்துவம் உணரப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலகம் போர் பெருமளவு உயிரழிவுகளையும், பெரும் சூழலியல் மாசுபடுத்தலையும் ஏற்படுத்தியது. அவை சூழலியல் இசையாக்கத்தில் செல்வாக்குகளை ஏற்படுத்தின. ஜோன் கேச், ஒலிவர் மெஸ்ஸியன் போன்ற இசை ஆசிரியர்கள் தமது இசையாக்கத்துக்கு இயற்கையின் கோலங்களை எடுத்தாண்டனர். ஜோன்லுதர் அடம்ஸ் தாம் வாழ்ந்த அலாஸ்காச் சூழலை இசையாக்கத்துக்கு நேரடியாக எடுத்தாண்டார். பனியின் படிவு வீழ்ச்சியும், பனிச்சறுக்கலின் இங்கித மான ஓசையும் சூழலியல் வாத இசைக்கு மெருகூட்டின. இயற்கைச் சூழலில் நிகழும் ஒளியின் இயல்பையும், ஒலியின் கோலங்களையும் இசை வெளிக்குக் கொண்டுவரும் முயற்சிகள் வெற்றியைக் கொடுத்தன.

கூட்டு முயற்சியினால் மட்டுமே சூழலைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்தை முன்னிலைப்படுத்தி போல்டிக் கடல் இசை விழா ஒழுங்கமைக்கப்பட்டது. போல்டிக் கடலைச் சூழ்ந்துள்ள நாடுகளி டையே சூழல் சார்ந்த விழிப்புணர்ச்சியை இசையால் மேலோங்கச் செய்தல் முன்னெடுக்கப்பட்டது.

சூழலியல் வாத இசை முயற்சிகள் நாட்டார் இசையிலும் பரிணாம வளர்ச்சியைத் தோற்றுவித்தன. சூழலியலைக் கருத்திலே கொண்டு மீட்டுருவாக்கல் செய்யப்பட்ட கிராமிய இசைவடிவங்கள் 1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து வளர்ச்சியடையத் தொடங்கின.

கலைவடிவங்கள் வெறுமனே பொழுதுபோக்கு வடிவங்கள் அன்று. அவற்றுக்குத் திட்டவட்டமான உள்ளடக்கமும் கருத்துக்கையளிப்பும் உண்டு என்பதை சூழல் இயல்வாத இசைக்கலைஞர்கள் வலியுறுத்துகின்றனர்.

இசை ஆற்றுகையில் கூட்டு நிலையான ஆற்றுகை முக்கியமானது. குழுநிலையான உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் குழுநிலை ஆற்றுகை முக்கியத்துவம் பெறுகின்றது. சூழலியல் வாதத்தை முன்னெடுக்கும் இசை கூட்டு நிலையில் பெரும் செல்வாக்கையும் தாக்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. ஆற்றுகை செய்வோர் மட்டுமன்றி பார்வையாளரும் இணைந்து பாடுதலும் ஆடுதலும் கூட்டிசைவின் விரிவாக அமைந்து வருகின்றது.

இசையோடு இணைந்த அறிகை உருவாக்கத்திலும் நடத்தை உருவாக்கத்திலும் சூழலியல் இசை ஆசிரியர்கள் கவனமெடுக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை என்பது உளச் சுகம் தரும் சாதனம் என்ற நம்பிக்கையே நீண்டகாலமாக நிலவி வந்தது. சமூக எழுச்சி இயக்கங்களும், விடுதலை இயக்கங்களும் வினைப்பாட்டியலுக்கு *(Activism)* உள்ள தொடர்புகளை வலிதாக்கின. அவற்றின் தொடர்ச்சியாகவே சூழலியல்வாத இசை மேலெழுந்தது.

சூழலியல் வினைப்பாட்டுவாதம் இசையை ஒரு பிரதான கருவியாக எடுத்துக் கொண்டது. சூழலியல் தொடர்பான கருத்துக்களை நேரடியாக எடுத்துக் கூறுவதைக் காட்டிலும் இசையினூடாகக் கையளித்தலின் தாக்கத்தை இசை ஆசிரியர்கள் அறிந்து கொண்டனர்.

சூழலியல் வினைப்பாட்டினை முன்னெடுக்கும் இசை பரந்த உள்ளடக்கங்களைக் கொண்டது. சூழலியற் பிரச்சினைகள், சூழலியற் கட்டுமானங்கள், மீளமைக்கும் நம்பிக்கைகள் முதலியவை கையாளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14.
# உடல் மொழி

உடல் மொழி பற்றிய ஆய்வுகள் அண்மைக் கலாமாக மிக ஆழமாக முன்னெடுக்கப்படுகின்றன. சொல் சாராத நிலையில் உடலால் வெளிப்படுத்தும் மொழியே உடல் மொழியாகின்றது. விலங்குகளிடத்தே காணப்படும் உடல் மொழியும் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. சொல்சார்ந்த மொழி இன்றைய நிலையில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதே அளவு முக்கியத்துவத்தை தொடர்பாடல் நிலையிலும் அழகியல் நிலையிலும் உடல் மொழி பெற்றுள்ளது.

1960ஆம் ஆண்டில் டெஸ்மன் மொரிஸ் என்பவர் "திகழ் நிர்வாணக் குரங்கு" *(The Naked ape)* என்ற முக்கியமான ஒரு நூலை வெளியிட்டார். சிம்பன்சி மற்றும் கொரிலா குரங்குகளிடத்துச் சிக்கல் நிரம்பிய உடல் மொழிவழித் தொடர்பாடல் காணப்படுதலையும், அவற்றுக்கும் மனித நடத்தைகளுக்குமிடையே ஒப்புமைகள் காணப்படுதலையும் குறிப்பிட்டுள்ளார்.

மற்றவர்களின் என்ன இருக்கின்றது என்பதை அவர்களின் உடல் மொழி வாயிலாகக் கற்பனை செய்யும் ஆற்றல் ஹோமோ சப்பியான்ஸ் என்ற தொல் மனிதனிடத்துக் காணப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. பொய்கூறல், பிறரை ஏமாற்றுதல் முதலாம் பண்புகள் அவர்களிடத்துக் காணப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. *(David Cohen, 2007)*

நனவு மனத்துடன் தொடர்புடைய உடல் மொழியும் உண்டு. நனவிலி மனத்துடன் தொடர்புடையவையும் உண்டு. உளநோய் உள்ளவர்களால் உடல் மொழியை விளங்கிக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. தலையசைவு, கண்புருவங்களின் அசைவு, கையசைவுகள் முதலியவை மட்டுமன்றி, சிரித்தல் அழுதல் முதலியனவும் பலநிலைகளிலே நனவிலி மனத்துடனும் தொடர்பு கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மனவெழுச்சிகளுக்கும் உடல் வெளிப்பாடுகளுக்குமுள்ள தொடர்புகள் நீண்டகாலமாகவே நோக்கப்பட்டு வந்துள்ளன. அகத்தின் இயல்பு முகத்திலே வெளிப்படும் என்பது பொதுவாக எல்லாப் பண்பாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒரு கருத்து. அறிவியல் வளர்ச்சியோடு அந்தத் தொடர்புகளை விஞ்ஞானத் தளத்தில் ஆராய்தல் முன்னெடுக்கப்பட்டது. இத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்ட சார்ல் டார்வின் அவர்கள் 1872ஆம் ஆண்டில் "மனிதரிலும் விலங்குகளிலும் மனவெழுச்சி வெளிப்பாடுகள்" என்ற நூலை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து உடல் மொழி பற்றிய ஆய்வுகள் விரிவாக முன்னெடுக்கப்பட லாயின.

தொடர்பாடலை வழங்கவும் பெறவும் உடல்மொழி பயன்படுத்தப் படுகின்றது. உணர்ச்சிகள் வெளிவராது கட்டுப்படுத்தவும் உடல் மொழி பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக கோபம் மேலெழும் பொழுது அதனைக் கட்டுப்படுத்திச் சிரிக்கும் முயற்சிகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுதல் உண்டு.

மனிதத் தொடர்பாடலில் மிகவும் கூடுதலான அளவு உடல் மொழி சார்ந்ததாகவே இருத்தலை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சொல் மொழியைச் காட்டிலும் உடல் மொழி சில சந்தர்ப்பங்களில் வலுவுள்ள தாக இருத்தலும் சுட்டிக் காட்டப்படுகிறது. மொழித் தொடர்பாடல் கடினமாக இருக்கும் பொழுது உடல்மொழி அதனை இலகுபடுத்தி விடுதலை உளவியலாளர் சுட்டிக்காட்டுகின்றனர்.

உடல் மொழி உயிர்ப் பாரம்பரியத்தோடும் சமூக இயல்போடும் இணைந்தது. சமூக இயல்புகள் வேறுபட பண்பாட்டு இயல்புகள் வேறுபட, குறித்த பண்பாடுகளுக்குரிய தனித்துவமான உடல் மொழிகளும் தோற்றம் பெறுகின்றன. அதேவேளை உயிர்மரபு வழியாகப் பெறப்பட்ட அகிலப் பண்பு கொண்ட உடல் மொழிகளும் நீடித்துள்ளன. அடிப்படை மன வெழுச்சிகளுடன் இணைந்த உடல் மொழி அனைத்து மனிதருக்கும் பொதுவானது அதாவது அழுதலும், சிரித்தலும், பயம் கொள்ளலும் அனைத்து மனிதருக்கும் பொதுவான உடல் மொழி சார்ந்தவை.

உடல்மொழி பிறப்பிலிருந்தே ஆரம்பித்து விடுகின்றது. அழுதல், உறுஞ்சுதல் முதலியவற்றில் இருந்து ஆரம்பித்துப் பற்றுதல், திரும்புதல், சிரித்தல் என்றவாறு உடல் மொழி விரிவாக்கம் பெறும். குழந்தைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிப் படிநிலைகளிலே நிகழும் உடல்மொழியினையும் அதன் வழியாக முன்னெடுக்கப்படும் கற்றற் செயற்பாடுகளையும் அனுபவத் திரட்டல்களையும் அறிகை உளவியலாளர் பியசே விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார்.

சீர்மிய உளவியலில் உடல்மொழி அதிக முக்கியத்துவம் பெறுகின் றது. கார்ல்ரொஜர்ஸ் அவர்கள் சீர்மிய உளவியலில் நிபந்தனையற்ற நிலையில் ஒருவருக்கு அங்கீகாரம் தருதலை வலியுறுத்தினார். அவரது சீர்மிய நடவடிக்கையிலே அது சிறப்பிடம் பெறுகின்றது. "நிபந்தனையற்ற அங்கீகாரம்" *(Unconditional Regard)* சீர்மிய நாடியின் ஒன்று திரட்டிய உடல்மொழிக்கு அங்கீகாரம் தருவதாக அமையும்.

உடல்மொழி தொடர்பாக உளவியலாளர் மிசேல் அர்ஜிலே **(1975)** ஓர் ஆளுமைக் கோலத்தை அடையாளப்படுத்தினார். அதற்கு மாச்சியவல்லியன் *(Machiavellian)* ஆளுமை வகை என்று பெயரிட்டார். இத்தாலிய சிந்தனையாளராகிய நிக்கோலா மாச்சியவல்லி அவர்கள் அரசியலாளர் பற்றி எழுதிய கருத்துக்களை அடியொற்றி அந்த அடை யாளப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய ஆளுமை கொண் டோர் தமது உடல் மொழியை அதிக கட்டுப்பாட்டினுள்ளும் நெறிப் பாட்டினுள்ளும் வைத்திருக்கக் கூடியவர்கள். தமது சைககளை வேண்டி யவாறு மாற்றியமைக்கக் கூடியவர்கள். அகத்திலே உள்ள கொடுமையான கபட சிந்தனைகளை தமது உடல்மொழி ஆற்றல்களால் மாற்றியமைத்து இதமான சைகைகளை வெளிப்படுத்துவர்.

உடல் மொழி பற்றிய ஆய்வில் அடுத்ததாக "கண்ணாடிப்படுத்தல்" *(Mirroring)* என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. ஒருவர் தமது முகமொழியால் வெளிப்படுத்துதலை மற்றவர்களின் முகம் எவ்வாறு தெறித்துக் காட்டுகின்றது என்பதைக் காணல் கண்ணாடிப் படுத்தலா கின்றது. பிறரது கண்களையும் முகத்தையும் உற்றுநோக்கல் சிறு குழந்தைகளிடத்தும் காணப்படுகின்றது. அதாவது கண்ணாடிப்படுத்தல் நியுரோன்கள் மூளையிலே தொழிற்படத் தொடங்கி விடுகின்றன.

குறித்த ஒரு தொழிற்பாடு பிறிதோர் இடத்தில் நிகழ்வதை உற்று நோக்கில் பதிவு செய்தலும் கண்ணாடிப்படுத்தலாகின்றது. ஒருவர் சிரிக்கும் பொழுது அவரது மூளையில் தொழிற்படும் நியுரோன்கள் போன்றே அதைப் பார்ப்பவரின் மூளை நியுரோன்கள் தொழிற்படுவதாக ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையானது படிமங்களை ஆக்கும் நுட்பங்கள் *(Brain Imaging Techniques)* பற்றிய ஆய்வுகள் சமகாலத்தில் மேலெழுந்துள்ளன. ஒருவர் வெவ்வேறு விதமான பணிகளைச் செய்யும் பொழுது மூளையின் எப்பகுதிகள் கடுமையாகத் தொழிற்படுகின்றன என்பது விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. உடல்மொழி தொழிற்படும் பொழுதும் மூளையின் எப்பகுதி கடுமையாகத் தொழிற்படுகின்றது என்பதும் நோக்கப்படுகின்றது. மூளையின் குறித்த பகுதிகள் தொழிற்படாதவிடத்து அல்லது பாதிப்புக்கு உள்ளாகும் பொழுது நிகழும் தாக்கங்களும் கண்டறியப்படுகின்றன.

சமூகச் சூழலின் இயல்புகள் உடல்மொழியில் நேரடியான செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன. ஒருவருக்குரிய நிறைவான படிமம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பான கருத்துக்கள் பெண்கள் தொடர்பான இதழ்களிலே வெளியிடப்படுகின்றன. அவற்றை அடியொற்றி உடலமைப்பை வடிவமைக்கும் செயற்பாடுகளையும் பெண்கள் மேற்கொள்கின்றனர். தமது உடல் தொடர்பான கவலைக ளால் உளநோய்களுக்கு உள்ளாவோரும் இருக்கின்றனர். உடலமைப்புத் தொடர்பான மனோபாவங்களில் எழுகோல *(Fashion)* மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அடிப்படை உடல்மொழி தொடர்ந்து மாற்றமுறாது நீடித்து வருகின்றது. உயிரியல் மரபே அதற்குரிய அடிப்படையாகின்றது. சிரித்தலும் அழுதலும் அவற்றுக்கு நல்ல எடுத்துக்காட்டுக்கள்.

இயற்கை சார்ந்த உடல்மொழி, பண்பாடு சார்ந்த உடல்மொழி கற்றுக்கொள்ளப்படும் உடல்மொழி, தொழில் முறை சார்ந்த உடல் மொழி, சடங்குகள் சார்ந்த உடல்மொழி, விளையாட்டுக்கள் சார்ந்த உடல்மொழி என்றவாறு பல பாகுபாடுகள் குறிப்பிடப்படுகின்றன.

உடல்மொழியை அழகியற்படுத்தும் செயற்பாடுகள் ஆடல் வடிவங்களைத் தோற்றுவித்தன. உடல் அசைவுகளை மிகைப்படுத்துதல், நளினப்படுத்துதல், செம்மைப்படுத்துதல், கால அளவுகளுக்கு உட்படுத்து தல், கருத்துகளுக்குரிய முத்திரைகளை அமைத்தல் இசையோடு ஒன்றிணைத்தல் முதலிய செயற்பாடுகள் ஆடல் ஆக்கத்திலே மேற்கொள்ளப்படுகின்றன.

இயல்பாக நிகழும் உடலசைவுக்கும் ஆடல் ஆசிரியரால் கற்பிக்கப் படும் உடலசைவுகளுக்குமிடையே இடைவெளி காணப்படும். அந்த இடைவெளி "எட்டல் இடைவெளி" என்று தமிழர் ஆடல் மரபிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படும். இதற்கு ஏறத்தாழ ஒப்புமையான ஒரு கருத்தை ரூசிய உளவியலாளராகிய வைக்கோட்சி அறிகை உளவியலில் முன்வைத்தார். அது "அண்மை விருத்தி வலயம்" *(Zone of Proximal Development)* எனப்படும். ஆசிரியரால் கற்பிக்கப்பட்டு எட்டப்படக்கூடிய இடைவெளியை அது குறிப்பிடும்.

அந்த இடைவெளி எட்டப்பட முடியாத நிலை பரத நாட்டியத்தில் "அங்க சுத்தமின்மை" என்றும் "அடவு சுத்தமின்மை" என்றும் குறிப்பிடப்படும்.

சமூக அடுக்கமைவுக்கும், உடல்மொழிக்கும், ஆடல் ஆக்கத்துக்கு மிடையே நேரான இணைப்புக்கள் காணப்படும். இது "முக்கூட்டுத் தொடர்பு" எனப்படும். எமது கிராமிய நடனங்கள் சமூகத்தின் அடித்தளத்து மக்களின் உடல்மொழியிலிருந்தும் பண்பாட்டுக் கோலங்களில் இருந்தும் தொழில் முறைகளில் இருந்தும் முகிழ்த் தெழுந்தவை.

சமூகத்தின் மேட்டுக் குடியினரது வாழ்நிலை உடல்மொழியும், பண்பாட்டுக் கோலங்களும், வழிபாட்டு உடல்மொழியுமத் பரத நாட்டியத்தில் இடம்பெற்றுள்ளன. அவர்களின் வழிபாட்டு முத்திரைகள் பரதநாட்டியத்தில் எடுத்தாளப்படுகின்றன. அந்நிலையில் ஏனையோ ருக்கு அவை அன்னியமாகிய உடல்மொழியாகவும் அசைவுகளாகவும் மாறிவிடலாம்.

தொடக்க காலத்திலிருந்தே ஆடலின் முக்கியமான பரிமாணமாகிய அசைவுகள் சிகிச்சை முறையாகப் பயன்பட்டு வந்துள்ளது. இன்று அது ஒரு முக்கியமான உளவியற் சிகிச்சை முறையாக உருவாக்கப்பட்டு வருகின்றது. ஆடல் அசைவுச் சிகிச்சை முறை *(DMT)* உடல், உள்ளம், மனவெழுச்சிகள், சமூக இசைவாக்கம் முதலிய அனைத்தையும் தழுவியதாக அமைகின்றது.

உடல் மொழியும் உளமொழியும் வேறு பிரிக்க முடியாதவை. உடலால் உள்ளத்தை வளப்படுத்துதல் ஆடற் சிகிச்சை முறையில் முன்னெடுக் கப்படுகின்றது. இந்தச் சிகிச்சை முறை ஆய்வாளர்கள் ஒரு முக்கியமான கருத்தை முன்வைத்துள்ளனர். அதாவது குழந்தைகளின் வளர்ச்சி நிலையில் அவர்களின் இயற்கையான உடலசைவுகள், உடல் மொழி முதலியவற்றிலே தடைகள், குறுக்கீடுகள், கட்டுப்பாடுகள், மனவெழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்கள் முதலியவை அது கற்றல் பிரச்சினைகள், மன அழுத்தங்கள், சமூக இசைவாக்கற் குலைவு, ஆளுமைக் குலைவு முதலியவற்றை ஏற்படுத்தி விடலாம் என்று குறிப்பிடப்படுகின்றது.

உடல் மொழியும் ஆடலும் சமூக வளர்ச்சியின் செல்வாக்குகளுக்கு உட்பட்டு வந்துள்ளன. தனிச் சொத்துரிமையின் வளர்ச்சி உடல்மொழி வழித் தொடர்பாடலையும் ஆடலின் இயல்புகளையும் ஆடற் கலைஞர் களின் இயல்புகளையும் பாதித்துள்ளன. தன்முனைப்பு வாதம் *(Egocentreism)* அவற்றின் பின்புலத்தில் எவ்வாறு மேலோங்கியுள்ளது என்பது சமூகவியல் நிலையிலும் உளவியல் நிலையிலும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

சூழலின் இயல்புகள் உடல் மொழியிலே செலுத்தும் செல்வாக்குகள் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15.
# சூழலியல் திறனாய்வு

திறனாய்வுப் புலத்தில் புதியதொரு துறையாக சூழலியல் திறனாய்வு *(Ecocriticism)* எழுகோலம் கொண்டுள்ளது. அது பல அறிவுத் துறைகளின் ஒன்றிணைப்பை அடியொற்றி மேற்கொள்ளப்படுகின்றது. சூழலைப் பகுத்தாராய்தலும், சூழலியற் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் காணுதலும், தீர்வுகளைத் திறனாய்வு செய்தலும், சூழலியல் இலக்கியங்களையும், கோட்பாடுகளையும் மதிப்பீடு செய்தலும் அதில் அடங்கும்.

1990ஆம் ஆண்டைத் தொடர்ந்து "சூழலியல் திறனாய்வு" என்ற கருத்தாக்கம் முழு அளவில் உருவாக்கம் பெற்றது. சூழல் பற்றிய புலக்காட்சியும் எண்ணக்கருவும் காலவோட்டத்தில் எவ்வாறு மாற்றம் பெற்று வந்துள்ளன என்பது சூழலியல் திறனாய்வில் விரிவாக நோக்கப்படுகின்றது.

சூழலியல் தொடர்பான மொழியாட்சி, வர்க்கநிலை, பெண்நிலை, இனக்குழுமநிலை, விழுமியங்கள் முதலியனவும் திறனாய்வில் உள்ளடக்கப்படுகின்றன. பிரதேச இலக்கியம், வட்டார நாவல்கள், ஆயர் இலக்கியம் முதலானவை சூழல் பற்றிய பெரும் பிரிவுடன் இணைந்தவை.

சூழலியல் இலக்கியம், சூழலியற்கலைகள் முதலியவற்றின் வளர்ச்சியும் சூழலியல் திறனாய்வின் விரிவுக்கு இட்டுச் சென்றுள்ளது. அண்மைக்காலமாக "போகோலஜி" *(Pocology)* என்ற இணையத்தளம் இத்துறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சூழலியல் எழுத்தாக்கங் கள் மற்றும் கருத்தாடல்களை முன்னெடுக்கும் பெரும் பரப்பாக அது அமைந்துள்ளது. அதாவது சூழலியல் திறனாய்வில் எழுத்தாளர்களையும் வாசகர்களையும் ஒன்றிணைத்து ஆக்கச் செயற்பாடுகளை வளர்க்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடு கள் சூழலியல் திறனாய்வுச் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலியல் எழுபொருட்களோடும் எழுவினாக்களோடும் இணைந்த ஆக்கங்கள் சூழலியல் இலக்கியங்கள் என்றும் கலைகள் என்றும் அடையாளப்படுத்தப்படும். சூழலை அழகியல் வெளிக்குள் கொண்டுவருதல், சூழல் தொடர்பான கருத்தியல் உள்ளடக்கமும் அவற்றில் உட்பொதிந்திருக்கும்.

சூழலோடு மனிதர் நிகழ்த்தும் இடைவினைகள் தொடர்பான விழுமியப் பொதிவுகளும் சூழலியல் திறனாய்விலே கவனயீர்ப்பைப் பெறுகின்றன.

இத்துறையிலே பிறிதொரு வளர்ச்சியும் ஒன்றிணைந்து கொண்டது. அது சூழலியல் மொழியியல் *(Ecolinguistics)* 1990 ஆம் ஆண்டள விலிருந்து அந்தப் புதிய துறை வளர்ச்சிகொள்ளத் தொடங்கியது. மொழி என்பது சமூகச் சூழலால் மட்டுமன்றி சூழலியல் விசைகளாலும் உருவாக்கம் பெறுகின்றது. மொழியைச் சூழலியற் பின்புலத்தில் ஆராய்தல் மொழியியலுக்கு மட்டுமன்றி திறனாய்வுக் கலைக்கும் உரியதொன்றாகின்றது.

கலைகளினூடாக நிகழ்த்தப்படும் கருத்து வினைப்பாடுகளைச் சூழலியற் கண்ணோட்டத்தில் ஆராய்தல் மேலும் விளக்கம் மிக்க காட்சியை எடுபடுத்த வல்லது.

சூழல் தொர்டர்பான தொடர்பாடற் கலையின் வளர்ச்சி சூழலியல் திறனாய்வின் வளர்ச்சிக்கு மேலும் அணி செய்கின்றது. சூழல் தொடர் பாக தனி மனிதர், மேற்கொள்ளும் தொடர்புகள், சமூக நிறுவனங்கள், பண்பாடு, தொடர்பான செயற்பாடுகள், பொருள் விநியோகம், பொருள் நுகர்ச்சி, முதலாம் விடயங்களும் அவற்றிடையே நிகழும் இடை வினைகளும் சூழலியல் தொடர்பாடலிலும், திறனாய்விலும் ஆழ்ந்து நோக்கப்படுகின்றன.

சூழல் தொடர்பான பண்பாட்டு ஆக்கமும் திறனாய்விலே நோக்கப்படுகின்றது. சூழல் தொடர்பான நடத்தைகள், சடங்குகள், உளப்பாங்குகள், நடைமுறைகள் முதலியவற்றை உள்ளடக்கிய கூட்டு மொத்தத் தொகுப்பாகச் சூழலியற் பண்பாடு அமைகின்றது. இலக்கியங்களும் அந்தத் தளங்களில் இருந்து எவ்வாறு மேலெழுகின்றன. எவ்வாறு அவற்றிலிருந்து திரிபுபட்டு உருவாக்கம் பெறுகின்றன என்பதும் நோக்கப்பட வேண்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் பற்றிய நவீன கோட்பாட்டாக்கங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னரே சூழல் தொடர்பான கருத்தாக்கங்களும் சூழலைக் குறியீட்டுப் படுத்தலும் உலக இலக்கியங்களில் இடம்பெற்று வந்துள்ளன. சங்க இலக்கியங்களிலே சூழலின் நேரடியான தெறிப்புக்கள் இடம்பெற் றுள்ளன. தொல்காப்பியத்தில் சூழலை வகைப்படுத்தும் அறிகைச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

ஜப்பானிய ஹைகூ கவிதைகள் சூழலை நேரடியாகப் பிரதிபலித் துள்ளன. மிக நுண்ணிய கருத்தாடல்களை முன்னெடுக்கும் புனைவு களாக அவை அமைந்துள்ளன.

உலகின் எந்த இலக்கிய ஆக்கத்தையும் சூழலியற் பின்னணியில் ஆராயவோ திறனாய்வு செய்ய முடியும் என்ற கருத்து சூழலியல் திறனாய்வை விரிவுபடுத்தும் தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16.
# குழந்தை வளர்ச்சியும் சூழலியலும்

குழந்தை வளர்ச்சியில் சூழலியலின் செல்வாக்குகள் மிக விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. குழந்தை வளர்ச்சி பல பரிமாணங்களைக் கொண்டது. உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக இசைவாக்கம், அழகியல், ஆன்மிகம் முதலாம் பல பரிமாணங்களை உள்ளடக்கியது. சூழலியலின் செல்வாக்குகள் பற்றி ஆராய்ந்த உளவியலாளர்களுள் யூரி புறொன்பென் பெர்னர் (1917-2005) முக்கியமானவர்.

சூழலின் இயல்புகளை நோக்காது தனித்து பெற்றமை *(Parenting)* பற்றி மட்டும் ஆராய்தல் பொருத்தமற்றது. குழந்தையின் சூழமைவின் இயக்கச் செயல்முறை ஒவ்வொரு நிலையிலும் செல்வாக்குகளை ஏற்படுத்திய வண்ணமே இருக்கும்.

குழந்தையைச் சூழ்ந்துள்ள சூழலியலைச் செயற்றொகுதி *(System)* அடிப்படையில் பென்பெர்னர் ஆராய்ந்துள்ளார். அந்த வகையில் முதற்கண் அமைவது நுண்ணிலையான செயற்றொகுதி *(Microsystem)* யாகும். குழந்தையும் நெருங்கிய குடும்பமும் இத்தொகுதியில் உள்ளடங்குகின்றன.

குழந்தையின் உடலியல் வளர்ச்சி, பால்நிலையாக்கம், உடல்நலம், உடற்கட்டுமானம், மனவெழுச்சி உருவாக்கம், அறிகை ஆற்றல் அடிப்படைகள் என்றவாறான பொதுநிலை அமைப்புக்கள் குழந்தையின் உடனடிச் சூழலுடன் இணைந்தவை. குடும்பக் கோலமும் பராமரிப்பு முறைகளும் குழந்தையின் அடிப்படை வளர்ச்சியிலே பெருமளவு செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகள் இத்துறையில் தீவிர கவனம் செலுத்துகின்றன. அதாவது குடும்ப ஆதார நிலையில் வைத்தே வளமூட்டலை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன. இவ்வகையில் ஐக்கிய அமெரிக்காவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹெட்ஸ்ராட்" திட்டமும் ஐக்கிய இராச்சியத்தின் "சுவர்ஸ்ராட்" திட்டமும் குறிப்பிடத்தக்கவை.

குழந்தையின் சூழலில் அடுத்ததாக அமைவது "மெசோ செயற்றொகுதி" என்று பெயரிடப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம், குடும்பத்தைச் சூழ்ந்துள்ள அயல் முதலியவை அமைந்துள்ளன. நல்வியல் நடவடிக்கைகளும், கல்விச் செயற்பாடுகளும் இக்கட்டத்தில் மேலும் விரிவடைகின்றன. சரியான பள்ளிக்கூடத் தெரிவு பெற்றோரால் மேற்கொள்ளப்படும். பள்ளிக்கூடச் சூழலும் வீட்டு அயலின் இயல்பும் செல்வாக்குகளை ஏற்படுத்தும்.

தொடர் சூழலின் அடுத்த கட்டம் "எக்சோ செயற்றொகுதி" என்று பெயரிடப்பட்டுள்ளது. குடும்ப நண்பர்கள், சிறப்பு மருத்துவர்கள், சமூக சேவையாளர்கள் முதலியோர் இத்தொகுதியில் அடங்குகின்றனர். இவற்றுடன் ஊடகங்களும் உள்ளடங்கும். ஊடாடுவோரின் வாழ்க்கைக் கோலங்கள் நேரடியான செல்வாக்குகளை ஏற்படுத்தும்.

முன்னைய வாழ்க்கைக் கோலங்கள் சமகாலத்தில் மாற்றமடைந்து வருகின்றன. முன்னர் இடம்பெற்ற மனிதத் தொடர்புகள் அருகிவரும் நிலை காணப்படுகின்றது. தொலைக்காட்சி, இணையத்தளம், கணினி விளையாட்டுக்கள், கைப்பேசி முதலியவற்றின் செல்வாக்குகள் மிகையாக இடம்பெறுகின்றன. அவற்றின் வழியாக அறிவுப் பெருக்கம் ஏற்படும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதேவேளை மனவெழுச்சி கலந்த மனித உறவாடல்களும் சமூகத் தொடர்புகளும் வீழ்ச்சியடைகின்றன.

அடுத்த வளர்ச்சிக்கட்டமாக பெருநிலைச் சூழல் அமைகின்றது. அதற்கு "மக்ரோ செயற்றொகுதி" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்றொகுதி தனிமனிதரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. ஆனால் பெருந்தொகுதி பற்றிய மதிப்பீடுகளை ஒருவரால் மேற்கொள்ள முடியும்.

சூழலியலை உளவியல் நோக்கில் செயற்றொகுதிகளாக பேர்ன் பென் பெர்னர் வகுத்துள்ளார். ஒவ்வொரு செயற்றொகுதியும் தனித்த துண்டம் அன்று. ஒன்றன் மீது மற்றையதன் தொடர்பும் பதிவும் நிகழ்ந்த வண்ணமிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக இடைவினைகள் ஒருவரின் வளர்ச்சியில் ஏற்படுத்தும் செல்வாக்குகள் உளவியலில் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருகின்றன. சமூக உறவுகள் பிறழ்வடையும் பொழுது பல்வேறு சீராக்கப் பிரச்சினைகள் மேலெழும், அந்நிலையில் சமூகத்தின் வர்க்க இயல்பும் சமூக அடுக்கமைப்பும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளன. மார்க்சிய உளவியலாளரே இத்துறையிலே தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.

சமூக பொருளாதார நிராகரிப்பினாலும், வறுமையாலும், சூழலின் எதிர்மறையான அழுத்தங்களினாலும் பல்வேறு நடத்தைப் பிரச்சினைகள் மாணவர்களிடத்தே தோற்றம் பெறுகின்றன.

பள்ளிக்கூட வேலைகளிலே பின்னடைவுகள் காணப்படுதல், பள்ளிக்கூடம் செல்லாமை, இடைவிலகல், தற்படிமம் பாதிக்கப்படுதல், நோய்வாய்ப்படுதல், கவலைகளுக்கு உள்ளாதல், முதலாம் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

அத்தகைய பிரச்சினைகள் இருநிலைகளிலே ஆராயப்பட வேண்டியுள்ளன. ஒன்று தனிமனித நிலையிலே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுதல் மற்றையது சமூக நிலையிலே தீர்வு காணுதல் இரண்டும் முக்கியமானவை. ஆனால் பெரும்பாலான உளவியலாளர் தனிமனித நிலையிலே தீர்வுகளை எட்ட முயல்கின்றனர். சமூக இயல்பே தனி மனித உளநோய்களை உருவாக்கும் நிலையில் சமூகத்தை மாற்றியமைக்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

உளப்பகுப்பு நுட்பங்கள், அறிகை நுட்பங்கள், நடத்தை நுட்பங்கள், மானிட நுட்பங்கள், மானிடவியல் என்ற பலவகை நுட்பங்கள் தனியாள் நிலையிலே பயன்படுத்தப்படுகின்றன.

குழுநிலையிலே உளப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் வினையாற்றல் கொண்டதாக இருத்தலும் கண்டறியப்பட்டுள்ளது. குடும்பச் சிகிச்சைமுறை, குழுவிளையாட்டுக்கள், குழுநாடகம், குழுச்செயற்றிட்டங்கள் முதலியவை அவ்வகையிலே சிறப்பிடம் பெறுகின்றன.

குடும்ப நிலையிலே வைத்துச் சிகிச்சையளித்தல் பயனுள்ள ஒரு நுட்பவியலாக அமைகின்றது. சல்வடோர் மின்சுன், ஜோன்புவுல்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜில்கொர்ரெல் பார்ன்ஸ் முதலியோர் இத்துறையில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

அடிப்படைத் தேவைகளின் நிறைவேற்றம், தொடர்பாடல், குடும்ப அதிகார ஒழுங்குமுறை, அதிகார இயக்கவியல், நெருங்கிய உறவாடலும், விலகலும், குடும்ப மரபுகள், உறவு முறிவுகள், குடும்ப மனவெழுச்சிக் கட்டமைப்பு மொழித்திரடல் போன்ற பல்வேறு பரிமாணங்கள் குடும்ப சிகிச்சையில் நோக்கப்பட வேண்டியுள்ளன.

உணவுக்குரிய பசியைக்காட்டிலும் தாயன்புக்குரிய வேட்கை உளவியல் நிலையில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. மனவெளிச்சிப் பயன்பாடு, நடத்தை உருவாக்கம், தொடர்புகளைப் பராமரிப்பதற்கான கொள்ளளவு முதலியவை குடும்பப் பராமரிப்பிலிருந்து மேலெழுகின்றன.

குடும்பத்திலே கிடைக்கப்பெறும் தாழ்ந்த நிலையிலான பெற்றமைவு பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கக்கூடியது. தாம் ஒதுக்கப்படுகின்றோம் அல்லது வெறுக்கப்படுகின்றோம் என்ற உணர்வைக் குடும்பமும், பழகும் குழுக்களும் ஏற்படுத்துமாயின் அது பல்வேறு எதிர்மறை நடத்தைகளை உருவாக்கும்.

தமக்குரிய அடையாளப்படுத்தலின் உருவாக்கம் குடும்பச் சூழலில் இருந்தே மேலெழுகின்றது.

இத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்ட டொனால் வின்னிகொட் *(1896-1971)* இரண்டு முக்கியமான கோட்பாடுகளை முன்வைத்தார். அவற்றுள் ஒன்று "நல்ல போதுமானதாய்" *(Good Enough Mother)* மற்றையது "நிறைமாறும் பொருள்" *(Transition Object)* என்பதாகும். "நல்ல போதுமானதாய்" என்பவள் அன்பு ஆதரவு என்பவற்றுடன் சிறுவர் கையாளும் ஒவ்வொரு பொருட்களும் அவருக்கே உரியது என்ற உடைமை ஆக்கத்தையும் அவற்றின் மீது சிறுவருக்கு முழுமையான கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக் கொடுப்பார்.

மேற்கூறியவற்றின் தொடர்ச்சியாகவே "நிலைமாறும் பொருள்" என்பது வளர்ச்சியடைகின்றது. தனது உடை, தனது போர்வை, தனது விளையாட்டுப் பொருள் என்பவற்றின் மீது சிறுவரின் உரிமையும், கட்டுப்பாடும், தவிர்க்க முடியாத உளவியற் தங்கல் நிலையும் ஆரம்பத்திலே காணப்படும். சிறுவர் வளர வளர உலக அனுபவங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவினைகளும் தொடர வேறு வேறு பொருட்களும் விருப்புக்களும் தோன்றும். அந்நிலையில் முன்னைய பொருட்கள் மீதான தொடர்புகள் நிலைமாற்றமடையும்.

ஜோன் பவுல்பி (1907-90) என்ற ஆய்வாளர் "உற்றிணைவுக் கோட்பாட்டை" *(Attaachment Theory)* இத்துறையில் முன்வைத்தார். சிறுவரின் உளவியல் மற்றும் சமூகம் சார்ந்த ஒட்டு மொத்தமான வளர்ச்சியானது வளர்ப்பு முறையின் பண்பிலும், தரத்திலும் தங்கியுள்ளது. அது தொடர்ச்சியாகவும், நம்பிக்கையானதாகவும், உறுதியானதாகவும் இருத்தல் வேண்டும். அவை கிடைக்கப் பெறாதவிடத்து ஆரம்பத்தில் எதிர்ப்பும், தொடர்ந்து பரிதவிப்பும் தொடர்ந்து உற்றிணைவு முறிவும் ஏற்படும்.

தாய்மைப் பராமரிப்பும் வளர்ப்பு அரவணைப்பும் சிறந்த நிலையில் இருக்கும் பொழுது சூழலில் ஆற்றலுள்ள ஆளுமை கொண்டவர்களாக சிறுவர்கள் வளர்ச்சியடைவர். அரவணைப்புத் தருவோரின் முன்னிலையில் சூழலை ஆற்றலுடன் எதிர்கொள்வோராக இருப்பர். ஒவ்வொரு வயது மட்டத்திலும் உற்றிணைவு நடத்தைகள் எவ்வாறு இடம்பெறும் என்பதும் உற்றுநோக்கல் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது.

இத்துறையில் எம்மால் சூழல் அழுத்தக்கோட்பாடு *(Enviromental Pressure Theory)* முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது சூழல் குடும்பங்கள் மீது தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்த வண்ணமிருக்கும்.

சூழல் வேறுபாடுகளுக்கு ஏற்ப அழுத்தங்களும் வேறுபடும். இதற்குரிய பல்வேறு எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடலாம். இந்திய மத்திய வர்க்கச் சூழலின் அழுத்தம் காரணமாகப் பெற்றோர் குழந்தைகள் விளையாடுவது பொருத்தமற்றதென்று கருதுகின்றனர். கற்பித்தலே முக்கியமானதாகக் கருதுகின்றனர்.

ஜப்பானிய மத்தியதரச் சூழல் வேறுவிதமான அழுத்தங்களைக் குடும்பங்கள் மீது பிரயோகிப்பதால் வேறு விதமான நடைமுறைகளைக் குடும்பங்கள் மேற்கொள்கின்றன. ஜப்பானியச் சிறுவர்கள் பிறப்பிலிருந்தே தனித்து வைக்கப்படுகின்றனர். தனித்து வைக்கும் நோக்கு பெற்றோரிடத்துக் காணப்படுகின்றது. தனக்கும் குழந்தைக்குமிடையே வலிமையான ஆளிடைத் தொடர்புகளை வளர்க்கும் நடவடிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்கின்றனர். அவர்களைச் சமூக மயமாக்கல் செய்வதிலும் தீவிர கவனம் செலுத்துகின்றனர்.

நியூகினியின் சூழலியல் அழுத்தம் வேறுபட்டது. தாயிடமிருந்து ஓரளவு பிரித்து வைக்கப்படுதலும், பிறரிடம் கூடுதலான இடை வினைகளை மேற்கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சூழல் என்பது வர்க்க இருப்புக்கும் வாழ்நிலைக்கும் ஏற்றவாறு வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக ஒரே நகரச் சூழலாயினும் பணவசதி மிக்கோர் அனுபவிக்கும் சூழல் அழுத்தங்கள் வேறு வறியவர்கள் அனுபவிக்கும் சூழல் அழுத்தங்கள் வேறு. அனைவருக்கும் பொதுவான பொதுமைப்படுத்தலை மேற்கொள்ளல் தவறானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17.
# சூழலியற் கல்வி

சூழல் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பது பற்றியும், அதற்கும் மனித நடத்தைகளுக்குமுள்ள தொடர்புகள் பற்றியும், அவற்றினூடே மனித செயற்பாடுகளை எவ்வாறு முகாமை செய்தல் என்பதனையும் கற்பிக்கும் ஒழுங்கமைந்த நடவடிக்கையாகச் சூழலியற் கல்வி அமைகின்றது.

சூழலியற் கல்வி *(EE)* முன் பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை பலநிலைகளிலே கற்பிக்கப்படுகின்றது. தனிப்பாடமாகவும் ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைந்த முறையிலும் அது கற்பிக்கப்படுகின்றது.

சூழலியல் உற்றுணர்வை ஏற்படுத்துதல், சூழலியலுடன் இணைந்த அறைகூவல்களுக்கு முகங்கொடுத்தல், அவற்றுக்குரிய திறன்களை வளர்த்தெடுத்தல், திறனாய்வுச் சிந்தனையை வளர்த்தல், பொருத்தமான உளப்பாங்கினைக் கட்டியெழுப்பல், ஊக்கல்கொள்ளச் செய்தல் முதலியவை சூழலியற் கல்வியின் நோக்கங்களாகவுள்ளன.

சூழலியல் பற்றிய சிந்தனை மிக நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது. சூழலை அடிப்படையாகக் கொண்டே தொன்மையான வழிபாட்டு முறைகளும் அமைந்தன. நவீன கல்வியில் சூழலியல் ரூசோவின் சிந்தனைகளை அடியொற்றி வளர்ச்சி கொள்ளலாயிற்று. தொடர்ந்து சுவிஸ் நாட்டைச் சேர்ந்த இயற்கைவாதியாகிய லுயிஸ் அகாஸ்ஸிஸ் சூழலியற் கல்வியை வலியுறுத்தினார். "புத்தகங்களைப் படிக்காதீர்கள், இயற்கையைப் படியுங்கள்" என்ற எழுகுரலை முன்வைத்தார்.

அனாபொட்ஸ் போட் கொம்ஸ்ரொக் அவர்கள் 1911ஆம் ஆண்டில் இயற்கையைக் கற்றுக்கொள்ளல் தொடர்பான ஒரு கைந்நூலை வெளியிட்டார். அவருடைய சூழலியற் செயற்பாடுகளுக்குப் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புக் கிடைத்தது. சூழலியல் பள்ளிக்கூடக் கலைத்திட்டத்திலும் இடம்பெறலாயிற்று.

1920ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்த காலத்தில் "இயற்கை வளக் காப்புக்கல்வி" அறிமுகப்படுத்தப்பட்டது. அக்காலத்தைய நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கும் வகையில் அந்தக்கல்வி உருவாக்கப்பட்டது.

சூழலியல் நெருக்கடிகள் தொடர்ந்து மேலோங்கத் தொடங்க சூழலியற் கல்வியின் முக்கியத்துவம் வலுப்பெறத் தொடங்கியது. யுத்த அழிவுகள், தொழில்வழி எழுந்த சூழல் மாசுபடல், அணுக்கதிர்வீச்சு, நகரவளர்ச்சி, காடுகள் அழிப்பு, காலநிலை மாற்றங்கள் முதலியவை சூழலியற் கல்வியின் தேவையை வலியுறுத்தின.

சூழலியற் கல்வி தொடர்பான வரைவிலக்கணம் 1969 ஆம் ஆண்டின் சூழலியற் சஞ்சிகையில் வெளியிடப்பட்டது. சூழலியற் கல்வியின் முக்கியத்துவம் உலகளாவிய நிலையில் வலுப்பெறலாயிற்று. ஐக்கிய நாடுகள் அமையம் 1972ஆம் ஆண்டிலே மனிதச் சூழல் தொடர்பான மாநாட்டை ஸ்ரொக்கோம் நகரிலே நடத்திப் பிரகடனத் தையும் வெளியிட்டது. அதன் தொடர்ச்சியாக 1977ஆம் ஆண்டில் ஜோர்ஜியாவில் உள்ள ரிபிலிசியில் மாநாடு கூட்டப் பெற்று பிரகடன மும் வெளியிடப்பட்டது. சூழலைப் பாதுகாத்தல், பராமரித்தல், முன்னேற்றம் பெறச் செய்தல் முதலிய செயற்பாடுகளில் சூழலியற் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. சூழலியற் கல்வி தொடர்பான பரிமாணங்களும் வழிகாட்டல்களும் வெளியிடப்பட்டன.

சூழலியற் கல்வி என்பது தனித்து வகுப்பறைக்குள் மட்டும் கட்டுப்பட்டதன்று. வெளிக்கள அனுபவங்களுடன் இணைந்த பன்முகமான அனுபவங்கள் சூழலியற் கல்வியிலே வலியுறுத்தப்படு கின்றன. இயற்கை விஞ்ஞானம், சமூகவியல், சட்டம், உளவியல், மானிடவியல் போன்ற பல்வேறு அறிவுப் புலங்களுடனும் தொடர்பு படுத்தி சூழலியற் கல்வி கட்டமைப்புச் செய்யப்படுகின்றது.

சூழலியற் கல்வியிற் பின்வரும் எழுவினாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. காலநிலை மாற்றங்கள் - புவி வெப்பமடைதல், சமுத்திர நீர்மட்டம் உயருதல், எதிர்பாரா நிகழ்ச்சிகள் தோற்றம் பெறுதல் முதலியன.

2. சூழற்பாதுகாப்பு - அழிவுநிலையிலும் அருகிவரும் நிலையில் இருந்தும் பாதுகாக்கும் நடவடிக்கைகள்.

3. வலு - வலுச்சிக்கனம், மீளமைக்கப்படக் கூடியவலு, நிலக்கரி வலு மற்றும் வலுக்களின் உபயோகத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் முதலியவை.

4. சூழல் கேடுறுதல் - கேடுறுதலை உருவாக்கும் மனித நடவடிக்கைகள் இலாப நோக்குச் செயற்பாடுகள் ஆகியவை.

5. நிலப்பயன்பாடும் மண்வளப் பாதுகாப்பும்

6. நானோ தொழில்நுட்பம்

7. அணுக்கதிர்ப் பிரச்சினைகள்

8. நகர வளர்ச்சிப் பிரச்சினைகள்

9. ஓசோன் அடுக்கின் பாதுகாப்பு

10. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி

11. கழிவுகளின் வெளியேற்றம்

12. சூழல் அனர்த்தங்கள்

13. சமூகவியல் மற்றும் உளவியல் பாதிப்புக்கள்

14. பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்

15. மரபணுப் பொறியியல்

16. சூழலியல் தொடர்பான சட்டவாக்கங்கள்

17. குடிப்பெருக்கம்

18. சூழலியற் பொறியியல்

19. சூழலியலும் ஊடகங்களும்

20. சூழலியலும், சமூகநீதியும் பின்புலக் கருத்தியலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகநீதி என்பது சூழலியற் கல்வியிற் சிறப்பிடம் பெறும் பொருளாகவுள்ளது. இனமத வேறுபாடின்றி அனைவரையும் சூழலியல் நலன்களைப் பெறச் செய்தலும், அறைகூவல்களை எதிர்நோக்கச் செய்யும் சமத்துவத்தை நிலைநாட்டுதலும் முதலில் வலியுறுத்தப்ப டுகின்றன. அதேவேளை சுரண்டலை மேற்கொள்வோர் நலன்களை அனுபவிக்க, சுரண்டப்படுவோர் தாக்கங்களை அனுபவித்தலே நடப்பியல் நிலைவரமாகக் காணப்படுகின்றது.

சூழலியற் கேடுகளால் எவரும் பாதிக்கப்படாமலிருப்பதற்கு உதவுதல் கொள்கையளவில் வலியுறுத்தப்படுகின்றது.

சூழலியல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளலில் அனைவரையும் ஈடுபடுத்துதலும் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. நடைமுறையில் வறியவர்களும் விளிம்பு நிலையில் வாழ்வோரும் தீர்மானங்களை மேற்கொள்ளலில் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர்.

சூழலியல் தொடர்பான வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல் முதலியனவும் வலியுறுத்தப்படுகின்றன.

போல்டிரீசென் என்பவர் இத்துறையில் ஒரு முக்கியமான கருத்தை முன்மொழிந்துள்ளார். "சூழல் குடியேற்றவாதம்" *(Eco Imperialism)* என்ற அந்தக் கருத்து சூழலியலில் மேலைப் புலத்தவர் மேற்கொண்ட மேலாதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளின் நலனுக்காக வளர்முக நாடுகளின் சூழல் சிதைக்கப்பட்டமை காலனித்துவ ஆட்சியில் இடம்பெற்றுள்ளன. இன்றும் அந்தச் செயற் பாடு புதிய வடிவிலே தொடர்ந்து கொண்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18.
# பசுமைச் சமாதானம்

பசுமைச் சமாதானம் (Green Peace) என்பது சூழற் பாதுகாப்பை மேற்கொள்ளும் ஓர் உலகளாவிய இயக்கம். சமாதானம் என்பதற்கு ஒத்த சொல் இசைவிணக்கம். சூழற் பாதுகாப்பில் இசைவிணக்கத்தை ஏற்படுத்தும் அந்த அமைப்பு அரசுசாரா நிலையில் செயற்படுகின்றது. சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளிலே அதன் அலுவலர்களும் தன்னார்வத் தொண்டர்களும் செயற்பட்ட வண்ணமுள்ளனர். அதன் இணைப்பு அலுவலகம் அமஸ்ரடாமில் உண்டு.

அனைத்துப் பல்வகைமைப் பண்புகளுடனும் பூகோளத்தைப் பாதுகாத்துப் பராமரிக்கும் ஆற்றலை உறுதி செய்து வளர்த்தலை அந்த இயக்கம் தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான எழுவினாக்கள் மீதான கவனக்குவிப்பை ஏற்படுத்துதலும் உள்ளுணர்வை வளர்த்தலும் வலியுறுத்தப்படுகின்றன.

புவி வெப்பமடைதல், காடுகளை அழித்தல், கட்டற்ற முறையிலே கடல் வளங்களைச் சுரண்டுதல், வர்த்தக நோக்கத்தின் பொருட்டுத் திமிங்கிலங்களைப் பிடித்தல், மரபணுப் புவியியல், அணுவின் எதிர்ப்பிரயோகங்களை மறுதலிக்கும் செயற்பாடுகள் முதலாம் துறைகளிலே கவனக்குவிப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

அரசநிதி உதவிகளையோ அரசியற் கட்சிகளின் நிதி வளங்களையோ வர்த்தக அமைப்புக்களின் ஆதரவுகளையோ பசுமைச் சமாதானம் பெற்றுக்கொள்வதில்லை. ஐக்கிய நாடுகள் அமையத்தின் ஆதரவையே முதன்மையாகக் கொண்டு அது தொழிற்படுகின்றது. பொறுப்புக் கூறலும், வெளிப்படைத் தன்மையும் உயர்நிலையிலே பராமரிக்கப்படுகின்றன.

அணுப் பரிசோதனைகளுக்கு எதிராக வன்கூவரில் நிகழ்ந்த எதிர்ப்பு நிகழ்வு அதன் தொடக்கப் புள்ளியாக அமைந்தது. 1969ஆம் ஆண்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் செயற்பாட்டைத் தொடர்ந்து அதன் வளர்ச்சி மேலோங்கத் தொடங்கியது.

அலாஸ்காவிலுள்ள அம்சிட்டகா தீவில் ஐக்கிய அமெரிக்க அணு ஆயுதப் பரிசோதனைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தது. 1964ஆம் ஆண்டிலே அலாஸ்காவில் நிலநடுக்கமும், சுனாமியும் தோற்றம் பெற்றன. அதனை அடியொற்றி மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஊர்வலத்தில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அதுவே பசுமைச் சமாதானத்தை உருவாக்கும் தோற்றுவாயாயிற்று. அதனோடு தொடர்புடையவர்களின் விரிவான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து பசுமைச் சமாதானம் தோற்றம் பெற்றது.

ஆயினும் அது உடனடியாக ஒருங்கிணைந்த நிறுவன அமைப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை. பசுமைச் சிந்தனைகளை அடியொற்றிக் குழுக்களாக ஒவ்வொரு நாடுகளிலும் இயங்கி வந்தனர். 1979ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினான்காம் நாள் பசுமைச் சமாதானம் சர்வதேச நிறுவனமாக முகிழ்த்தெழுந்தது.

குறித்த ஒவ்வொரு நாட்டிலும் பசுமைச் சமாதானச் சர்வதேச அமைப்பு தொழிற்படுகின்றது. ஒவ்வொன்றுக்கும் பிரதேச பணிப்பாளர் சபை உண்டு. ஒரு நிர்வாகப் பணிப்பாளரும் அங்கே இடம் பெற்றிருப்பார். ஒவ்வொரு பிரதேச பணிமனைக்கும் அறங்காவலர் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டிருக்கும்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பொது வேலைத்திட்டங்களும், மேற்கொள்ளப்பட வேண்டிய தந்திரோபாயங்களும் விரிவாக ஆராயப்படும். தனிநபர்கள் வழங்கும் நிதியுதவியுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். பிரச்சினைகளை உருவாக்கும் தேவையற்ற நிதி உதவிகள் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பூகோள வெப்ப அதிகரிப்புத் தொடர்பான உள்ளுணர்வைப் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு மட்டங்களிலும் ஏற்படுத்துவதில் பசுமைச் சமாதான அமைப்பின் பங்களிப்பு உலகளாவிய முறையிலே முக்கியத்துவம் பெறுகின்றது. அதுவரை வெப்ப அதிகரிப்பினால் ஏற்படும் தாக்கங்களையும், பாரிய விளைவுகளையும் பலர் அறியாதிருந்தனர். வெப்ப அதிகரிப்பின் மிக மோசமான விளைவாக அமையும் ஓசோன்படையின் சிதைவு பற்றி சாதாரண மக்களும் அறிந்து கொள்ளத்தக்க நிலை ஏற்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரூட்டிப் பெட்டிகளின் இயக்கத்தால் ஓசோன் படை தாக்கப்படும் அபாயம் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் ஓசோன் படை மீது தாக்கம் விளைவிக்காத குளிரூட்டித் தொழில்நுட்பத்தை அவர்கள் கண்டுபிடித்தனர். 1997 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சூழல் நிகழ்ச்சித்திட்ட அமைப்பு ஓசோன் படையின் பாதுகாப்புக்கான வெகுமதியை பசுமைச் சமாதானத்துக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இன்று உலகளாவிய முறையில் அவர்கள் உருவாக்கிய குளிரூட்டித் தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது.

பூகோளம் வெப்பமடைதலைத் தடுப்பதற்கு பிறிதொரு முக்கிய மான செயற்பாட்டையும் அவர்கள் மேற்கொண்டனர். கைத்தொழில் நாடுகளின் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப்புகை பூகோள வெப்ப அதிகரிப்புக்கும் ஓசோன் படையின் சிதைவுக்கும் பிரதான காரணியாக அமைந்தது. கழிவுப் புகையின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் வேண்டுதலை விடுத்ததுடன் நடைமுறைச் சாத்தியங்களும் முன்னெடுக்கப்பட்டன.

வளர்முக நாடுகளிலே பராமரிக்கப்படத்தக்க வலு உற்பத்தி நடவடிக்கைகளுக்குரிய நிதிப் பங்களிப்பு மேற்கொள்ளப்படுதல் பிறிதொரு முன்னெடுப்பாகவுள்ளது. நிலக்கரியை எரித்து மின்வலு உண்டாக்கும் செயற்பாடு சூழலை மாசடையச் செய்து வருதல் குறிப்பிடத்தக்கது. அதற்குப் பதிலாக மாற்றுவலு உற்பத்தியும் ஊக்குவிக்கப்படுகின்றது. சூரியவலு, காற்றுவலு, நீர்வலு ஆகியவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகள் உற்சாகமளிக்கப்படுகின்றன.

மீளாக்கப்படத்தக்க வலு உற்பத்தியை முன்னெடுக்கும் செயற் பாடுகளை அடியொற்றிய வலுப்புரட்சியும் உருவாக்கம் பெற்றுள்ளது.

நிலக்கரியை எரித்து மின் உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு எதிராக மறியல் செய்தலும், நிலக்கரி ஏற்றிச் செல்லும் கப்பல்களைத் தடுத்தலும் மேற்கொள்ளப்பட்டன. எண்ணெய் மணலில் இருந்து பெற்றோலியம் கறந்தெடுக்கும் முயற்சிக்கு எதிராகவும் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

"எண்ணெயைக் கடந்து அப்பாற் செல்லுங்கள்" *(Gobeyond Oil)* என்ற இயக்கத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவு செய்யும் அணு ஆயுதங்களின் உற்பத்தி தொடர்பாகவும், அணுக்கதிர் வீச்சின் ஆபத்துக்கள் தொடர்பாகவும் தீவிர கவனம் செலுத்தப்படுகின்றது. பாதுகாப்பு மிக்க அணு ஆலைகளின் வடிவமைப்புப் பற்றிய பரப்புரைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆபத்து விளைவிக்கும் அணு நடவடிக்கைகளுக்கு எதிரான பரப்புரைகளையும், செய்தி இதழையும் பசுமைச் சமாதானம் மேற்கொண்டு வருகின்றது.

ஆரம்பநிலைக் காடுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் காடழிப்பை எதிர்க்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெப்ப வலய மழைக் காடுகளின் அழிப்புடன் யுனிலிவர், நைக், கேஎவ்சி, கிற்காற், மக்டொனால் முதலாம் நிறுவனங்கள் தொடர்பு கொண்டிருத்தலையும் பசுமைச் சமாதானம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து சட்டபூர்வமற்ற மர இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பெறுபேறாக ஐரோப்பிய ஒன்றியம் அத்தகைய இறக்குமதிகளைத் தடை செய்தது.

தாவர எண்ணெய் உற்பத்தியினால் காடுகள் அழிக்கப்படுதலும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்தோனேசியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் தாவர எண்ணெய் உற்பத்தியினால் தாவர மற்றும் உயிர்ப் பல்வகைமை அழிக்கப்படுதல் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால் அத்தகைய தொழிற்பாடுகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள் காடுகளைப் பாதுகாக்கும் முயற்சிகளுக்குச் சம்மதம் வழங்கியுள்ளன. குறிப்பாக கோல்டன் அகிரி றிசோர்சஸ் *(GAR)* என்ற பெரும் நிறுவனம் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

மரபு அணுமாற்றங்களைக் கொண்ட *(GMFOOD)* உணவு உற்பத்திக்கும் தயாரிப்புக்கும் பசுமைச் சமாதானம் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. சிம்பாபேயில் வறுமையிலே சிக்குண்டவர்களுக்கு அத்தகைய உணவை ஐக்கிய அமெரிக்கா வழங்கி வருதல் சுட்டிக்காட்டப்பட்டது. அதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் அத்தகைய உணவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முன் மாதிரியும் பாராட்டப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பல ஆபிரிக்க நாடுகள் அத்தகைய உணவை நிராகரிக்கத் தொடங்கி யுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல்டன் றைஸ் *(Golden Rice)* எனப்படும் பொன் அரிசியின் உற்பத்தியும் மரபு அணு மாற்றங்களும் தொடர்பான விவாதங்களும் முன்னெடுக்கப்பட்டன. திட்டமிட்ட அந்தச் செயற்பாட்டின் எதிர்மறை விளைவுகளையும் பசுமைச் சமாதானம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆறுகளிலே இரசாயன நச்சுக் கழிவுகள் கலக்கவிடப்படுதலும் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சீனாவில் வளர்ந்து வரும் புடைவைக் கைத்தொழில் நிலையங்களில் இருந்து அத்தகைய கழிவுகள் ஆறுகளிலே கலக்கவிடப்பட்டு வருகின்றன. பெரும் உற்பத்தி நிறுவனங்களின் அத்தகைய செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடல்வளப் பாதுகாப்பை மேற்கொள்ளும் பொருட்டுக் கப்பல்களையும் பசுமைச் சமாதானம் வாங்கித் தனது செயற்பாடுகளை மேலும் விரிவாக்கிக் கொண்டது.

பசுமைச் சமாதானம் தொடர்பான பல்வேறு திறனாய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் நிதிமுகாமைத்துவம் தொடர்பான கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன. பெருமளவு நிதி உத்தியோகத்தர்களின் சம்பளத்துக்காக ஒதுக்கப்படுகின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள் உற்பத்தியில் மரபு அணுமாற்றங்களைச் செய்வதை எதிர்த்தல் அறிவியற் செயற்பாடுகளை எதிர்க்கும் நடவடிக்கை என்ற திறனாய்வும் மேலெழுந்துள்ளது. மேலும் பசுமைச் சமாதானத்தின் செயற்பாடுகளிலே அரசியல் மறைகரமும் உண்டென்று குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19.

# பண்பாட்டின் முனைப்பு உளவியல்

சூழலின் இயல்புடன் இணைந்து பண்பாடு மேலெழுகின்றது. ஓர் இனத்தினரது அடையாளம் அவர்களின் பண்பாட்டுக் கோலங்களால் வெளிப்பாடு கொள்ளும். பண்பாட்டு உளவியல் *(Cultural Psychology)* ஒவ்வொருவரதும் நடத்தைகளும், சிந்தனைக் கோலங்களும் பண்பாட்டில் எவ்வளவு தூரம் ஊடுருவித் தங்கியுள்ளன என்பதை ஆராய்கின்றது. நவீன பின்காலனிய *(Post Colonial)* திறனாய்வுச் சூழலில் பண்பாட்டு உளவியல் பலநிலைகளிலே எடுத்தாளப்படுகின்றது.

குறித்த இனக்குழுமத்தினரது மொழி, நம்பிக்கைகள், மரபுகள், சமயமுறைமை, குடும்ப இயல்பு, அவர்களிடத்து ஆழ்ந்து உறைந்துள்ள கருத்தியல் முதலியவற்றைப் பண்பாடு உள்ளடக்கி நிற்கின்றது.

மனித மனமும் பண்பாடும் வேறு பிரிக்க முடியாதவை. மேலைப் புலத்து உளவியற் கோட்பாடுகள் அவர்களின் பண்பாடு தழுவிய நடத்தைக் கோலங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டவை. பின்காலனியத் திறனாய்வில் இக்கருத்து முனைப்புடன் முன்வைக்கப்படுகின்றது.

மேலும் பண்பாட்டு உளவியலை விளங்கிக்கொள்வதற்கு அதனை குறுக்குநிலைப் பண்பாட்டு *(Cross Cultural)* உளவியலில் இருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. அனைத்துப் பண்பாடுகளும் உரிய பொதுப் பண்புகளைக் குறுக்குநிலைப் பண்பாட்டு உளவியல் நோக்குகின்றது. உதாரணமாக ஜீன் பியாசே கண்டறிந்த மனிதவளர்ச்சிப் படிநிலைகள் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவானவையாக இருத்தலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியற் கல்வியில் மேலைப் புலக் கருத்துக்கள் மிகையாக உட்பொதிந்துள்ளன. அதற்குரிய முக்கிய காரணங்களுள் ஒன்றாக அமைவது நவீன கோட்பாட்டு ஆக்கங்களுக்கு இந்தியப் பண்பாட்டில் ஊக்குவிப்புக்கள் போதுமானதாக இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பழைமையில் ஊறி நிற்றலும், புராணப் பண்பாட்டின் வலிமையும் இந்தியச் சூழலில் மிகையாக இருத்தல் சிந்தனைப் போக்குகளிலே செல்வாக்குகளை ஏற்படுத்துதல் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நவீன உலகம் பன்மை நிலைகளுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது. இனக்குழுமங்களிலே பன்மை, மொழிகளிலே பன்மை, பண்பாட்டிலே பன்மை என்றவாறு பன்மை நிலைகள் விரிவடைந்து செல்கின்றன.

மனித மனம் பண்பாட்டை அடியொற்றிய உளவரைபடங்களை *(Mental Maps)* உருவாக்கிக் கொள்கின்றது. அதற்கு இயைந்தவாறே காட்சிகளும், கற்பனைகளும் அறிவுருவாக்கமும் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

மனிதருக்கும் பண்பாட்டுக்குமுள்ள இடைத் தொடர்புகளையும் செல்வாக்குகளையும் விளக்குவதற்கு நான்கு ஐ (I) மாதிரிகையை மார்க்சும் கொன்னரும் உருவாக்கியுள்ளனர். *(Indivual, Interactions Institutions, Ideologies)*

முதலாவதாக அமைவது தனி மனிதர் தம்மைப் பற்றி எவ்வாறு சிந்திக்கின்றனர் என்பது பற்றியதாகும். ஐக்கிய அமெரிக்கப் பண்பாட்டில் ஒவ்வொரு மனிதரும் தமக்குரிய தனித்துவம் பற்றிச் சிந்திக்கின்றனர். தமது ஆளுமையை விளக்குவதற்கு அவர்கள் வலுமிக்க உற்சாகநிலை, நட்புநிலை, கடினஉழைப்பு நிலை முதலிய அடைமொழிகளை பயன்படுத்துகின்றனர். தனிமனித ஓங்கல் அங்கே மேலோங்குவதற்குரிய பண்பாட்டு விசைகள் தளமிடுகின்றன. ஆனால் ஜப்பானிய பண்பாட்டுச் சூழல் ஒவ்வொருவரிடத்தும் சமூகப் பொறுப்புடைமையை வளர்த்து நிற்கின்றது. ஒவ்வொருவரையும் சார்ந்திருப்போராய் வளரும் நிலையை உருவாக்குகின்றது. மற்றவர்களைச் சிக்கலுக்கு உள்ளாக்கிவிடக் கூடாது என்ற நிலையில் யப்பானியரின் தனித்துவம் காணப்படுகின்றது.

தமிழ்ப் பண்பாட்டுச் சூழல் ஒவ்வொருவருக்குமுரிய கல்வித் தேடல், பொருள்தேடல் என்பவற்றை முக்கியப்படுத்தும் தனிமனித இயல்பை முக்கியத்துவப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக ஊடாட்டம் அல்லது இடைவினை முக்கியத்துவம் பெறுகின்றது. பண்பாட்டு உற்பத்திகளுடன் நிகழ்த்தப்படும் இடைவினைகள் ஒருவரின் நடத்தையிலே செல்வாக்குச் செலுத்துகின்றது. கலை, இலக்கியங்கள், விளம்பரங்கள் என்ற அனைத்தும் பண்பாட்டு உற்பத்திகள் என்று குறிப்பிடப்படும். நடத்தை உருவாக்கத்தில் விளம்பரங்கள் அதீத செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியுள்ளன.

"புகைப்பிடிப்பதனால் மற்றவர்களுக்குத் தீங்கு ஏற்படுகின்றது" என்று ஜப்பானில் விளம்பரம் செய்யப்படுகின்றது. பிறரை மதிக்கும் பண்பாடு அவர்களின் வாழ்வில் ஊறியுள்ளமையால், அந்த விளம்பரம் நடத்தை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதேவேளை விளம்பரங்கள் பண்பாட்டுத் தளத்தில் ஊறி மேலெழுவதையும் காணக் கூடியதாகவுள்ளது. இந்தியாவிலே விளம்பர நிறுவனங்கள் பண் பாட்டுத்தளத்தை அடியொற்றித் தமது ஆக்கங்களை முன்னெடுக்கின்றன.

தமிழ்ச் சூழலில் நடத்தை உருவாக்கத்தில் பொது ஊடகங்களி னூடாக இடைவினைகள் முக்கியத்துவம் பெற்று வருதலைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

நடத்தை உருவாக்கத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் அமைப் பாக நிறுவனங்கள் விளங்குகின்றன. தமிழ்ச் சூழலில் பள்ளிக்கூடங்கள், சமய நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் செல்வாக்குகள் மிகையாகக் காணப்படுகின்றன. குறிப்பிட்ட பண்பாட்டுக்குரிய கருத்தியலும் நடத்தை உருவாக்கத்திலும் வழிநடத்தலிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. தமிழ்ச்சூழலில் இன்று இனக்குழும அடையாளப் படுத்தல் வலிமையான கருத்தியலாக அமைந்துள்ளது.

சிறார் வளர்ச்சியில் பண்பாட்டுச் செல்வாக்கினை அடியொற்றி வைட்டிங் மாதிரிகை *(Whiting Model)* உருவாக்கப்பட்டுள்ளது.

புலக்காட்சி கொள்ளல், மற்றும் அறிகைச் செயற்பாடுகளில் பண்பாட்டுக் காரணிகள் வலிதான செல்வாக்குகளை ஏற்படுத்துதல் கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக மாமிசம் உண்ணும் பண்பாட்டில் விலங்குகளைப் புலக்காட்சி கொள்வதற்கும் உண்ணாத பண்பாட்டிலே புலக்காட்சி கொள்வதற்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானிய பண்பாட்டுச் சூழலில் வாழும் ஜப்பானிய மாணவர் ஒருவரின் நடத்தைக்கும், வேற்றுச் சூழலில் வாழும் ஒரு ஜப்பானிய மாணவரின் நடத்தைகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகளை ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஏனைய பண்பாட்டினருக்கும் இந்தக் கருத்து பொருத்தமானது.

ஒருவர் கல்வியை நோக்கும் விதமும் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே மேலெழுகின்றது. தமிழ்ச் சூழல் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் (2005) மத்தியதர வகுப்பினர் கல்வி வழியாக மருத்துவம், பொறியியல் முதலாம் வாண்மைகளை அவாவி நிற்றலும், சாதாரண தொழிலாளர்கள் ஆசிரியத் தொழிலை அவாவி நிற்றலும் கண்டறியப்பட்டுள்ளது.

தன்னிலை *(SELF)* உருவாக்கத்திலும் பண்பாடு பெருமளவிலே செல்வாக்குச் செலுத்துகின்றது. தன்னிலை என்பதை செயலூக்கமுள்ள முகவராக *(Activeagent)* கருதுகின்றது. அதனை அடியொற்றியே செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் வர்க்க நிலை மிக முக்கியமான பங்களிப்பைச் செலுத்துதலை மேலைப்புலத்து நடத்தை உளவியல் சுட்டிக்காட்டத் தவறிவிடுகின்றது. சமூகத்திலே சுரண்டு பவனது தன்னிலை இயல்புக்கும் சுரண்டப்படுபவனது இயல்புக்கு மிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

மத்தியதர வகுப்பினரது பண்பாடு, தனிமனித வாதத்தை முக்கியப்படுத்துகின்றது. தொழிலாளரின் பண்பாடு, கூட்டுணர்வை முக்கியப்படுத்துகின்றது. உதாரணமாக பயாழ்ப்பாணப் பண்பாட்டில் ஒரு தொழிலாளியின் வேலையை நிறுத்தி வேறொரு தொழிலாளியை அழைத்து அந்த வேலையைச் செய்யும்படி அழைத்தால் அவர் அதனைச் செய்ய வரமாட்டார். வேறு எந்தத் தொழிலாளியும் அதனைப் பொறுப் பேற்றுச் செய்யவரமாட்டார்கள். ஒற்றுமை உணர்வு அவர்களிடத்தே மேலோங்கியுள்ளது.

"எளிமையான" தனித்த பண்பாடு, "சிக்கலாகிய பண்பாடு" என்ற இரு நிலைகள் பண்பாட்டு ஆய்விலே காணப்படுகின்றன. நகரப்பண் பாடு சிக்கலாகிய பண்பாடு எனப்படும் பல்வேறு பண்பாடுகளின் கலப்பால் சிக்கலாகும் தன்மைகள் நகரங்களிலே காணப்படுகின்றன. சிக்கலாகிய பண்பாட்டுப் பின்புலம் நடத்தைகளிலும் சிக்கலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப்பாடுகளை உருவாக்கும். சிக்கலான பண்பாட்டுக் கோலங்களே விரைவான மாற்றங்களை உந்தி நிற்கும். அதேவேளை நவீன மாற்றங்களுக்கு உட்படாத கிராமியப் பண்பாடு எளிமையான தனித்த பண்பாடாகும். அத்தகைய பண்பாடு மாற்றங்களையோ புரட்சிக ளையோ வேண்டி நிற்கமாட்டாது.

பண்பாட்டுக்கும் மானிடவியலுக்குமுள்ள தொடர்புகள் உளமானிடவியலில் *(Psychological Anthropology)* விரிவாக ஆராயப்படுகின்றன. பண்பாட்டுக்கும் மனநல உருவாக்கத்துக்குமுள்ள தொடர்புகள் மேலும் சிறப்பாக நோக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20.
# பிரதேச இலக்கியம்

சூழலோடிணைந்த "உயிரியற் பன்மை நிலை" *(Bio Diversity)* ஓர் இயற்கை விதி. அதாவது தாவரங்களும், விலங்குகளும் நுண் உயிர்களும் கோடிக்கணக்கிலே விதம் விதமாக அமைந்துள்ளன. பன்மையின் வெளிப்பாடாக அவை மேலெழுகின்றன.

அவ்வாறே சமூகமும் பன்மை இயல்புகளைக் கொண்டது. பன்மைத்துவம் *(Pluralism)* சமூகம் எங்கும் விரவிக் காணப்படுகின்றது. அந்தப் பன்மைத்துவத்தினூடே மோதலும் இணக்கப்பாடுகளும் இடம் பெற்ற வண்ணமுள்ளன. அவற்றை நுணுகி ஆராய்ந்த கருத்தியல்களுள் மார்க்சியம் தனித்துவமானது.

பன்மைநிலை முரண்பாடுகளினூடே ஆயிரம் ஆயிரம் ஆக்கச் சிந்தனைகள் தோன்றிய வண்ணமிருக்கும் என்பது இயங்கியல் விதி.

மார்க்சியம் சமூகத்தளத்திலே பன்மை நிலைகளை விளக்கி, அவற்றினூடே குவிந்து மேலெழும் வர்க்க முரண்பாட்டை முன்வைத் துள்ளது. அதேவேளை பின்னவீனத்துவம் மையமும் அகன்ற விளிம்பும் என்ற நிலைகளை அடியொற்றிப் பன்மையியலை முதன்மைப் படுத்தியுள்ளது.

சமூகத்தின் பன்மை நிலைகளிலே மொழிகளின் பன்மைநிலை, பண்பாடுகளின் பன்மை நிலை, சமயங்களின் பன்மைநிலை, தொழில் களின் பன்மைநிலை என்றவாறு பன்மைத்துவம் விரிந்து கொண்டே செல்லும்.

இயற்கையும் சமூகமும் போன்று புவியியல் நிலைமைகளும் பன்மைத்துவம் கொண்டவை. சில அடிப்படைகளில் நாங்கள் பிரதேசப் பாகுபாட்டை ஏற்படுத்திக் கொண்டாலும் அவற்றினூடே பல நுண்ணி லைத் தனித்துவங்களைக் கொண்ட அலகுகள் காணப்படும். அவற்றின் தனித்துவங்களை நடப்பு நிலையிலே புறக்கணித்து விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியற் பிரதேசங்களையும், அவற்றின் உள்ளே அமைந்த தனித்துவங்களையும் அங்கு வாழும் மக்களின் பன்மை இயல்புகளையும் இலக்கிய வெளிக்குக் கொண்டுவருதல் பிரதேச இலக்கியமாகின்றது.

கருத்தியல் நிலையில் அதன் முக்கியத்துவத்தை இந்நாட்டுச் சூழலில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வலியுறுத்தியது. அந்த வலியுறுத்தலுக்கு முன்னதாக எழுந்த ஆக்கங்களிலே பிரதேச மணம் இருந்தாலும் அவை தெளிவான கருத்தியல் பின்புலத்தைக் கொண்டிருக்கவில்லை.

அதேவேளை பிரதேசங்களுக்குரிய மக்களின் பேச்சு மொழியைப் பயன்படுத்துதல் "இழிசனர் வழக்கு" என்று முற்போக்கு எழுத்தாளர்களுக்கு எதிராக வழங்கப்பட்டமை வரலாற்றுப் பதிவாகின்றது.

பிரதேச இலக்கிய ஆக்கம் என்பது பன்மை நிலைப்பட்டது. குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களின் தனித்துவமான பழக்க வழக்கங்கள், விதம் விதமான சடங்கு முறைகள், தொன்மங்கள், பேச்சு மொழி, உளவியல் நடத்தைகள் குறிப்பிட்ட பிரதேசத்தின் சமூக வரலாற்றுத் தொடர்ச்சி, அப்பிரதேசத்துக்குரிய கலைமரபுகள், ஆதிக்க மரபுகள், புறக்கணிக்கப்பட்டோர் அல்லது ஒடுக்கப்பட்டோரின் உளக் கோலங்கள் முதலியவற்றை உள்ளடக்கியவையாகப் பிரதேச இலக்கியங்கள் எழுகோலம் பெறும்.

ஆங்கில மரபிலே பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே பிரதேசங்களை முதன்மைப்படுத்தும் நாவல்கள் தோற்றம் பெற்றுவிட்டன. தமிழ் மரபிலே இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்தும், மார்க்சிய சிந்தனைகளின் பரவலைத் தொடர்ந்தும், அரசியல் நிலையிலே பிரதேசங்கள் முக்கியம் பெற்றமையைத் தொடர்ந்தும் பிரதேசங்கள் தழுவிய தனித்துவமான புனைவுகள் வளர்ச்சியடையத் தொடங்கின.

பிரதேச இலக்கியம் தனித்துவமான குறிப்புப்படுத்தலை மேற்கொள்கின்றது. தெரிவு செய்யப்பட்ட புலத்தின் மனிதச் சூழலின் தனித்துவங்களைப் புனைவுக்கு உள்ளாக்குகின்றன.

பிரதேசத்தின் இயற்கை வளத்தின் ஒவ்வொரு நுண் அலகுகள் பற்றிய பரிச்சியம் எழுதுவோருக்கு அவசியம் என்பதைக் ஹென்ரி ஜேம்ஸ் ஒரு சமயம் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தாரவங்கள் பற்றியும், ஒவ்வொரு மலர்கள் பற்றியும், ஒவ்வொரு குருவிகளின் ஒலிப்புப் பற்றியும் அங்குள்ள காடுகளின் மௌனத்தினூடே எழும் கதறல்கள் பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும்.

எழுதுவோர் மக்கள் வாழ்க்கையுடன் சங்கமித்து வாழ்ந்திருக்க வேண்டும். உறவு முறைகள், குடும்பக் கட்டுமானம், தொழில்முறைக் கோலங்கள், அறியாது நிகழ்ந்து கொண்டிருக்கும் உழைப்பின் சுரண்டல் முதலியவற்றை ஊடுருவித் தரிசித்தல் முக்கியமானது.

சமூக முரண்பாடுகளையும் அவற்றின் செறிவுகளையும் நோக்குதல் வேண்டும். சமூக நிறுவனங்களின் வளர்ச்சியையும் உதிர்வுகளையும் துளாவிக் கண்டுகொள்ளல் வேண்டும்.

பிரதேச இலக்கியங்களின் இரண்டு முக்கியமான பரிமாணங்கள் குறித்துரைக்கப்படுகின்றன. ஒன்று தெரிவு செய்யப்பட்ட புலத்தின் *(Locale)* "வண்ணம்" *(Colour)* மற்றையது அதன் உயிர்ப்பாக அமையும் பேச்சு மொழி, தமிழ் மரபிலே பேச்சுமொழி வட்டார வழக்கு எனப்படும்.

"வண்ணம்" என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. எழுதுபவரின் புலன்சார் காட்சிகள் அனைத்தையும் அது உள்ளடக்கி நிற்கும். புவியியற் காட்சிகள், சமூகக்காட்சிகள், நாட்டார் வழக்குகள் என்ற அனைத்தும் வண்ணம் என்பதில் உள்ளடங்கும். பொருண்மிய வாழ்க்கையில் இருந்து ஆன்மிக வாழ்க்கையின் நீட்சி வரையிலான அனைத்தும் அதில் அடங்கும்.

குறிப்பிட்ட புவியியற் புலத்துக்குரிய தனித்துவமான கதையுரைப்பு எழுகோலம் *(Narrative Style)* என்ற ஒன்று இருக்கும். பிரதேச இலக்கியங்கள் அதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1930 ஆம் ஆண்டளவில் "பிரதேச வாதம்" என்ற இலக்கிய இயக்கம் ஐக்கிய அமெரிக்காவிலே தோற்றம் பெற்றது. நவீன நடப்பியல் கலை இலக்கியமாக அது அடையாளப்படுத்தப்பட்டது.

ஒரு வகையில் நகர வாழ்க்கையின் அவலங்களுக்கு எதிரான மாற்று நடவடிக்கையாக அது அமைந்தது. அந்தக் கருத்தியலை அடிப்படை யாகக் கொண்ட ஒவிய வளர்ச்சியும் சிறுவர் இலக்கிய வளர்ச்சியும் மேலோங்கத் தொடங்கின.

கிரான் வூட் என்பவர் "நகரங்களுக்கு எதிரான கிளர்ச்சி" என்ற கையேட்டை வெளியிட்டார். தத்தமது வாழ்விடங்களின் வாழ்க்கையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியங்கள் வழியாகப் பிரதிநிதித்துவம் செய்வதன் மூலவூற்றுக்களை அடியொற்றி அமெரிக்கப் பண்பாட்டின் காட்சியை உருவாக்க முடியும் என்ற கருத்தை முன்வைத்தார்.

ஏறத்தாள அதே காலப்பகுதியில் இந்திய சுதந்திரப் போராட்ட காலத்திலும் பெருநகரங்களுக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக் கப்பட்டன. "கிராமங்களுக்குத் திரும்புங்கள்" என்ற கருத்தையும் "கிராமோதயம்" என்ற முன்மொழிவையும் மகாத்மா காந்தி முன்வைத்தார். நகர வளர்ச்சியையும் அவற்றின் விளைவுகளையும் இரவிந்திரநாத் தாகூர் எதிர்நிலையிலே நோக்கினார். அதேவேளை நகர வளர்ச்சியைச் சமூக வளர்ச்சியின் தருக்க அடிப்படையில் மார்க்சியக் கருத்தியலை அடியொற்றி விளக்குதலும் இந்தியச் சூழலில் முன்னெடுக்கப்பட்டது.

புவியியல் நோக்கிலே பிரதேசம் *(Region)* என்பது நகர்ப் பிரதேசங்க ளையும் உள்ளடக்கும். ஆனால் இந்திய இலக்கிய மரபில் அது கிராமப் புறங்களைச் சிறப்பித்துச் சுட்டுவதாக அமைந்தது.

அரசியல் நிலையிலே பிரதேசம் என்பது தனி ஒரு பிரதேசம் அல்லது பிரதேசங்களின் கூட்டு என்பதாக அமையும். பிரதேசங்களை அடியொற்றி அதிகாரத்தைப் பரவலாக்குதல், அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளல் முதலாம் கருத்துக்களும், நடைமுறைகளும் மேலெழுந்தன. அவற்றை அடியொற்றிக் கூட்டாட்சி முறைமைகளும் உருவாக்கம் பெற்றன. மரபு வழியான ஒற்றையாட்சி முறைமை மறுசிந்தனைக்கும், மாற்று நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படும் நிகழ்ச்சிகள் உலக அரங்கிலே தோற்றம் பெற்றன.

பிரதேசங்களை அடியொற்றிய பிறிதொரு நிகழ்ச்சிப் பரவலாக பிரதேசக் கட்சிகள் உருவாக்கம் பெற்றன. இந்தியச் சூழலிலே பிரதேசக் கட்சிகள் வலிமையான இடத்தைப் பெற்றுள்ளன. மத்திய அரசாங்கத்தை அமைத்துக் கொள்வதிலும் அவை வலிமையான இடத்தைப் பெறத் தொடங்கியுள்ளன.

இந்தியச் சூழலில் மட்டுமல்ல ஐரோப்பியச் சூழலிலும் பிரதேசக் கட்சிகளின் தோற்றமும் வளர்ச்சியும் இடம்பெற்று வருகின்றன. இஸ்பெயின் நாட்டின் தேசிய வாதம் பிரதேச வாதத்துடன் இணைந்தி ருத்தல் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களை முதன்மைப்படுத்தும் பிறிதொரு முக்கியத்துவம் வாய்ந்த கருத்தியலாக அமைவது "சுயநிர்ணய உரிமை" என்பதாகும். லெனினுடைய எழுத்தாக்கங்களில் அதன் முக்கியத்துவம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

பிரதேச வாதமும் தேசிய வாதமும் இணைந்து செல்லும் உலகச் சூழலும் காணப்படுகின்றது. அதேவேளை முரண்படும் நிலைவரங்களும் காணப்படுகின்றன.

பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள உழைக்கும் வர்க்கத்தினரின் ஒன்றுபட்ட உணர்வு மேலோங்கும் பொழுது, பிரதேச வாதமும் தேசிய வாதமும் ஒன்றிணைகின்றன.

பிரதேச வாதம் தொடர்பான எதிர்மறைச் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. இலாப நோக்கிலும் சுரண்டல் நோக்கிலும் பிரதேச வாதத்தைப் பயன்படுத்தும் அரசியல் ஒருபுறம் நிகழ்கின்றது.

பிரதேசங்களுக்கு எதிரான கருத்தேற்றங்களை முன்வைத்து தமது சுய இலாபத்தை மேம்படுத்திக் கொள்ளும் மத்தியதர வகுப்பினரது செயற்பாடுகள் பிறிதொரு புறம் நிகழ்ந்த வண்ணமுள்ளன. பதவி மோகம் உத்தியோக இலாபம் முதலியவற்றை அடியொற்றி அவர்கள் பிரதேச வாதத்தை முன்னெடுக்கின்றனர்.

பிரதேசவாதம் தொடர்பான விசைகள் இலக்கியக் கோட்பாடுகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தியுள்ளன. பிரதேச வாதமும் நவீனத்துவமும் முரண்படும் நிலைகள் மேலைப்புல இலக்கிய வரலாற்றிலே காணப்பட்டன. நவீனத்துவம் முன்வைத்த அருவநிலை ஆக்கத்தை *(Abstraction)* பிரதேச இலக்கிய வாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதேவேளை பிரதேசங்களை முதன்மைப்படுத்தும் இலக்கிய முயற்சிக்கு சோசலிச நடப்பியல் ஆதரவை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அவற்றின் தொடர்ச்சியாக பிரதேச இயல்புகளைப் புலப்படுத்தும் படிமங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. இலக்கியம் அல்லாத விளம்பரத்துறையிலும் அந்தப் படிமங்கள் பயன்படுத்தப்படலாயின. பிரதேசங்களை முதன்மைப்படுத்துதல் திரைப்படத்துறையிலும் நீட்சி கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21.
# தேசிய இலக்கியம்

சூழலின் ஆள்புல அடையாளத்துடன் தேசம் வரையறுக்கப் படுகிறது. தேசிய நோக்குடன் இணைந்த இலக்கியச் செயற்பாடாக "தேசிய இலக்கியம்" என்ற எண்ணக்கரு உருவாக்கம் பெற்றுள்ளது. தேசிய அரசை உன்னதமாகக் கொண்ட உறுபற்றுக்களும் *(Sentiments)* உற்றுணர்வும் உயர் எதிர்பார்ப்புக்களும் தேசிய வாதத்துடன் இணைந்தது.

தேசிய வாதம் இரு பிரிவுகளைக் கொண்டது. ஒன்று ஒரு நாட்டி லுள்ள இனக்குழுமங்களை அரவணைத்துச் செல்லும் இயல்பினது. மற்றையது இனக்குழுமங்கள் மீதான மேலாதிக்கத்தைச் செலுத்தும் தேசியவாதம். அரவணைப்பு நிலையில் ஒரு நாட்டிலுள்ள சிறுபான் மையினர் "தேசிய இனக்குழுமத்தினர்" என அடையாளப்படுத்தப் படுவர். தேசங்களுக்குச் சுயநிர்ணய உரிமை இருத்தல் போன்று தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டென்ற கருத்துக்கு அங்கே இடமளிக்கப்பட்டிருக்கும்.

தேசியம் என்ற செழுமை நிலையில் இருந்துதான் நடப்பியல் வடிவிலான "சர்வதேசியம்" உருவாக்கம் பெறும். இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலே தேசிய வாதம் என்பது 1600- 1800 ஆம் ஆண்டுகளுக்கிடையில் எழுச்சி கொண்டது. ஏற்கனவே நிலைபேறு கொண்டிருந்த அரசியற் கட்டமைப்புக்குப் பண்பாட்டு முலாம் பூசும் நிகழ்ச்சியாக அது அமைந்திருந்தது. அந்தச் செயற்பாடு பொது மக்களின் அரசியல் ஈடுபாட்டினை ஈர்ப்பதாகவும் அமைந்தது.

அவற்றைத் தொடர்ந்து காலனித்துவ நாடுகளிலே தேசிய இயக்கங்கள் வளர்ச்சியடையலாயின. காலனித்துவத்திலிருந்து விடுபடலும் தேசிய அரசுகளின் உருவாக்கமும் மூன்றாம் உலகின் தேசிய வாதத்தின் சிறப்பார்ந்த பரிமாணங்களாக அமைந்திருந்தன. அவற்றை அடியொற்றிய இலக்கிய ஆக்கங்கள் "தேசிய இலக்கியங்கள்" என அடையாளப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியம் பற்றிய ஆய்வை முன்னெடுத்தவர்கள் (லியா கிறீன் பீல்டு, 1992) இரண்டு வகையான பாகுபாட்டைச் சுட்டிக்காட்டினார். அவையாவன: ஒன்று "குடியியல் தேசியம்" மற்றையது "இனக்குழுமத் தேசியம்" குடியுரிமைத் தேசியம் ஒருவருக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் வலியுறுத்துவது. நாடு என்பதன் முக்கியத்துவம் இங்கு வலியுறுத்தப்படவில்லை. தனிமனித வாதமே இங்கு மேலோங்கியுள்ளது. இனக்குழுமத் தேசியவாதம் தேசிய இனங்களின் அடையாளங்களைப் பாதுகாத்தலுடனும், வளாத்தலுடனும் இணைந்தது. அதாவது பிறப்பு வழியே பெறப்பட்ட பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இனக்குழுமத்தினரது விருப்புக்கள், உறுபற்றுக்கள், இலட்சியங்கள், மரபுகள், கலை இலக்கியங்கள் ஆகியவற்றுக்குரிய உறுதியான அங்கீகாரத்துடன் அது இணைந்தது.

சமூகத்தின் பன்மை நிலைகள் தேசிய அடையாளத்திலும் பன்மை நிலைகளைத் தோற்றுவித்துள்ளன. மொழித்தேசியம், மதத்தேசியம், பண்பாட்டுத் தேசியம் என்றவாறான அடையாளப்படுத்தல்கள் இடம்பெற்று வருதல் குறிப்பிடத்தக்கது.

ஒன்றுக்கு மேற்பட்ட இணைந்த அடையாளங்களூடான தேசியத் தையும் காண முடியும், உதாரணமாக காலனித்துவ காலத்து தேசிய முனைப்புக்கள் இலங்கையில் மொழியும் மதமும் இணைந்த நிலையில் இருந்தன. அநாகரிக தர்மபாலா மற்றும் ஆறுமுக நாவலர் ஆகியோர் மேற்கொண்ட இயக்கங்கள் மொழியும் மதமும் கலந்த நிலையில் இருந்தன.

சிங்கள மொழியும் பௌத்த மதமும் இணைந்த தேசியத்தின் முன்னெடுப்பாக இலங்கை அரசியல் யாப்பு அமைந்துள்ளது. ஆனால் தமிழ்த்தேசியம் மதம் கடந்த நிலையில் மொழியை அடிப்படையாகக் கொண்டதாக உருவெடுத்துள்ளது. அதேவேளை இஸ்லாமிய தேசியம் மதத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது.

அந்நிலையில் மூன்று வகையான இயல்புகளைக் கொண்ட தேசியத்தின் வளர்ச்சியை இலங்கையிலே காணலாம்.

1. சிங்கள மொழியும் பௌத்தமும் என்ற இருநிலை இணைப்புத் தேசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மொழியை அடிப்படையாகக் கொண்ட தமிழ்த்தேசியம்

3. மதத்தை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய தேசியம்

வரலாற்றுக் காரணிகள் தேசிய உருவாக்கத்தை முன்னெடுக்கின்றன. ஆனால் தேசியம் மேலாதிக்கத்துடன் இணைந்து செயற்படும் பொழுது உலக நாடுகளில் மோதல்களும் அழிவுகளும் தோற்றம் பெறுகின்றன.

இலங்கையின் தொடக்க காலத்தேசியம் இனக்குழும அடையாளப் படுத்தலுடன் இணைந்திருந்தது. ஆறுமுக நாவலர் சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோர் அழியும் நிலையில் இருந்த தமிழ் ஏடுகளைத் தேடியெழுத்துப் பரிசோதித்து அச்சுவாகனமேற்றினர். தமிழ் கல்வியின் முன்னெடுப்பும் சமய மறுமலர்ச்சியும் அக்காலத்தைய தேசிய முனைப்புக்களுடன் இணைந்திருந்தன. மரபு வழியான செய்யுள் புனைவு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. உரைநடையாக்கம் வளர்ச்சி பெறத் தொடங்கினாலும் அடுத்த கட்டத்திலேதான் உரைநடை தழுவிய ஆக்க இலக்கியங்கள் உருவாக்கம் பெறலாயின.

ஆங்கில இலக்கியப் பரிச்சியமும் இந்திய விடுதலை இயக்க வழி எழுந்த கலை இலக்கிய மாதிரிகைகளும் இரண்டாம் கட்டத் தேசிய இலக்கியத்தில் மேலோங்கியிருந்தன. இலட்சியவாத நோக்கிலும் சீர்திருத்தக் கண்ணோட்டத்திலும் அமைந்த ஆக்கங்களை இலங்கையர் கோன், சம்பந்தன், பண்டிதர் சச்சிதானந்தன், சோமசுந்தரப்புலவர் முதலியோர் புனைந்தனர்.

மூன்றாம் கட்டத் தேசியவாத இலக்கியங்கள் மார்க்சியக் கருத்தியலைத் தழுவி மேலெழுந்தன. இரண்டாம் கட்டத்தில் இடம் பெற்றிருந்த ரொமான்ரிசம் என்ற உளக்கவர்ச்சி வாதத்திலிருந்தும் நாச்சுரலிசம் என்ற இயற்பண்பு வாதத்திலிருந்தும் விடுபட்டு சோசலிச நடப்பியல் நோக்கை முழுமையாக அன்றி தேவைக்கேற்றவாறு மூன்றாம் கட்டத்துத் தேசிய வாதத்தினர் பயன்படுத்தினர். இரண்டாம் கட்டத்தினரது நோக்கில் அவை பிரசார இலக்கியங்களாகவே கருதப்பட்டன. அந்த முரண்பாடு உளக்கவர்ச்சி வாதத்துக்கும் சோசலிச நடப்பியலுக்குமிடையில் நிகழ்ந்த மோதலாக அமைந்தது. வெற்றி தோல்விகளைக் காட்டிலும் மார்க்சியத்தின் தாக்கமே அங்கே முதன்மைப் பெறுகின்றது. முற்போக்கு நோக்கில் தேசிய வாதத்தை முற்போக்கு எழுத்தாளர் முன்னெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு எழுத்தாளர்களான கணேசலிங்கம், கே.கணேஸ், டொமினிக்ஜீவா, டானியல், நீர்வை பொன்னையன், பசுபதி, தெணியான் முருகையன் என்றவாறு அந்தப் பட்டியல் நீண்டு செல்லும். சமூக ஒடுக்குமுறைகள், அடிமட்ட மக்களின் பிரச்சினைகள் முதலியவற்றை அவர்களுக்கே உரிய மொழியிலும் நோக்கிலும் ஆக்கம் செய்தல் மூன்றாம் கட்டத் தேசியவாதத்தில் முனைப்புப் பெற்றிருந்தது. இலங்கை எழுத்தாங்களின் தனித்துவம் அங்கே மேலோங்கியிருந்தது.

நாவலரை முன்னிறுத்தி தொடக்க காலத் தேசியவாதம் தொடர்பாக பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, இ.முருகையன் முதலியோர் எழுதிய கட்டுரைகள் காலனித்துவ மறுதலிப்புடன் நாவலரின் பங்களிப்புக்களைத் தொடர்புபடுத்திக் காட்டின.

அவற்றைத் தொடர்ந்து ஏகாதிபத்தியம், மேலாதிக்கம், ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் தொடர்பான எண்ணக்கருக்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் நுழைந்தன. அவை மார்க்சியச் சிந்தனைகள் வழியாகவே தமிழ்ப் புலத்துக்கு வந்தன என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. மேலும் உயர்கல்வி மட்டத்திலிருந்த விஞ்ஞான பூர்வமான திறனாய்வு மரபை சாமானியர் மட்டங்களுக்கு எடுத்துச் செல்வதில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கணிசமான பங்கை வகித்தமை ஒரு முக்கியமான அவதானிப்பு.

காலனித்துவத்திலிருந்து கிடைக்கப் பெற்ற விடுதலை தேசிய உயர் வர்க்கத்தினரை முதன்மைப்படுத்தியது. "வாக்கு" வழியான அரசியல் உரிமையில் கூருணர்வு மிக்க விடயங்களாகிய மொழி, மதம் முதலியவை அதீத முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டமை விடுதலைக்குப் பிந்திய தேசிய வாதத்தின் முக்கிய பரிமாணமாயிற்று.

தேசிய இனங்கள் என்ற நிலையில் தமிழர்களும், முஸ்லீம்களும் உள்ளாக்கப்பட்டனர். அவற்றின் எழுபுலத்தில் அடுத்த கட்டத் தேசியம் அதாவது நான்காவது கட்டத் தேசியம் உருவாக்கம் பெற்றது. எழுத்தாளர்கள் இனத்துவ நிலைப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஆக்கங்களை நடப்பியல் அனுபவங்களை அடியொற்றிப் புனைந்தனர். மேலும் தீவிரத்தன்மை கொண்ட எழுத்தாக்கங்கள் மேலெழுந்தன.

"ஒடுக்கு முறை விடுவிப்பு" என்ற இலக்கிய வகை தோன்றுவதற்கு மேற்கூறிய நிகழ்ச்சிகள் விசையூட்டின. "விசைமொழி" *(Force Lan guage)* "வன்மொழி" *(Violence Language)* முதலியவற்றின் பயன்பாடுகள்

11052



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒடுக்குமுறை விடுவிப்பு” இலக்கியத்தில் மேலோங்கியிருந்தன. பாதிப்பின் நுண் அலகுகளை வெளிப்படுத்தும் கவிதை மொழியும் வளர்ச்சியடைந்தது.

பிறிதொரு முக்கிய விளைவாகிய புலச் சிதறல் தனித்துவமான இலக்கிய வகையாக மேலெழுந்துள்ளது. தமிழ்த் தேசியம் பிறிதொரு வடிவை எடுப்பதற்கு அந்த நிகழ்ச்சி இட்டுச் சென்றுள்ளது.

இஸ்லாமிய சமயத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய வாதம் கல்வியில் இஸ்லாமியர்களின் ஈடுபாட்டுக்கு வலுவூட்டியுள்ளது. இஸ்லாமியப் பின்புலத்தில் நாளாந்தப் பிரச்சினைகளையும் நடப்பியல் முரண்பாடுகளையும் சித்திரிக்கும் இலக்கிய ஆக்கங்கள் மேலெழத் தொடங்கியுள்ளன.

ஆரம்ப காலங்களில் நாடுகளின் சுயாதீனத்தை முதன்மைப்படுத்தி எழுச்சியுற்ற தேசியம் என்ற கருத்தாக்கம் பின்னர் பன்மை நிலைகளை அடியொற்றி வளர்ச்சியடைய அவற்றை அடியொற்றிய கலை இலக்கிய ஆக்கங்களும் முகிழ்ப்புக் கொள்ளத் தொடங்கியுள்ளன.

அவற்றின் பின்புலத்தில் வர்க்க நிலை நோக்கு மேலும் விரிவான ஆய்வுக்குரியது.

சூழலியல்வாதம், பிரதேசவாதம், தேசியவாதம் ஆகியவற்றுக்கிடையே தொடர்பு காணப்படுகின்ற அது கிடைத்தொடர்பு எனப்படும். நவீன உலக மயச் சூழலில் இருந்து மேலெழும் புதிய வாழ்வு புதிய நடப்பியலாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REFERENCES

POL,E. (2006) Blueprints for a history of Environmental Psychology, 95-113.

Wirgle, Saegert Evaus (2009) Journal of Environmental Psychology 29 (3) 318-328

Linda Steg (2012) Enviromental Psychology, Oxford BPS Black Well

Wilson (1984) Biophilia, Cambridge, MA Harward, University Press.

Treit et al (2006) Land cape Research, 31 (3) 229-256 Ulrich (1984)

Gifford (2007a) Environmental Psychology, Colille, WA Optional Book.

Kafslan and Kaplan (1989) Human Behavior and Environment, New York Combridge University Press.

Mukherjee (1993) Journal of Environmental Psychology, 13 (3) 207-230.

KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சபா.ஜெயராசா தமிழில் "கல்வியியல்" துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர்.

இவர் கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது "புலமைமரபு" எத்தகையது என்பதைத் தனித்துக் துல்லியமாக வெளிப்படுத்தும். மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது.

தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது. இன்றுவரை தமிழ்சார்ந்த அறிவுலகில் சபா. ஜெயராசா உயிர்ப்புமிகு புலமையாளராகவே திகழ்கின்றார்.

ISBN 978- 955- 685- 027- 7

**சேமமடு பதிப்பகம்**

**விலை: 340.00**

CBCN: 2014-02-01-128

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org